புதியதோர் புதினம்

மே ஒன்று

முனைவர் பூ.சு.கணேஷ்மூர்த்தி
உதவிப்பேராசிரியர்
தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக்கழகம்
சீனிவாசவனம், குப்பம் - 517 426, ஆந்திரமாநிலம்



ந சுப்பு ரெட்டியார்100


ந சுப்புரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai—600 040

100
1916-2016
ந சுப்பு ரெட்டியார்





During the Centenary Year [2015-2016] of Prof Dr N Subbu Reddiar, 135 Events were planned and finally 108 Events were conducted across Tamil Nadu. It has become an All India Record.



India Book of Records

CERTIFICATE


CENTENARY CELEBRATIONS OF
PROF DR. N SUBBU REDDIAR

Prof Dr S Ramalingam (born on 13 Oct 1949) Organizing Secretary, Na Subbu Reddiar 100 Educational Trust, Chennai, Tamil Nadu, has conceived, designed and meticulously executed 108 Centenary Events throughout Tamil Nadu during the Centenary Year (2015-2016) of Prof. Dr. N Subbu Reddiar who served the cause of education for 65 years andwritten 135 books in various fields (100 books after retirement).

Biswaroop Roy Chowdhury
Chief Editor
India Book of Records

Date: March 19, 2018

India Book of Records is registered with the Government of India with RNI no. HARENG/2010/32259.
India Book of Records is affiliated to Asia Book of Records and follows Asian Protocol of Records (APRs) as per the consensus arrived at the meeting of the Chief Editors of National Record Books, Ho Chi Minh City, Vietnam.



Religion and Philosophy of NALAYIRAM with Special Reference to NAMMALVAR

SRI VENKATESWARA UNIVERSITY



மே ஒன்று

முனைவர் பூ.சு.கணேஷ்மூர்த்தி
உதவிப்பேராசிரியர்
தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக்கழகம்
சீனிவாசவனம், குப்பம் - 517 426, ஆந்திரமாநிலம்



நசுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

மே ஒன்று

பதினம்

Funded & Published by:



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

AD-13, 5th Street, Anna Nagar West

Chennai – 600 040, Tamil Nadu


Price: Rs.100.oo

May 2024

ISBN: 978-81-968802-7-9

Printed at:
DJ Printers, Chennai – 600 095

Dedication



Shri N Chandrababu Naidu

Chief Minister – Andhra Pradesh

பதிப்புரை

பேராசிரியர் முனைவர் ந சுப்புரெட்டியார் அவர்களின் வாழ்க்கை ஐந்து பெரும்பகுதிகளைக் கொண்டது. அவையாவன: (1) பிறப்பும் கல்வியும், (2) பள்ளித் தலைமையாசிரியராக கல்விப்பணி – 9 ஆண்டுகள், (3) கல்லூரிப் பேராசிரியராக கல்விப்பணி – 10 ஆண்டுகள், (4) பல்கலைக்கழகப் பேராசிரியராக கல்விப்பணி – 17 ஆண்டுகள் மற்றும் (5) ஓய்விற்குப்பின் தமிழ்ப்பணி – 29 ஆண்டுகள்.

பேராசிரியர் பணியில் சேர்ந்து மூன்று இடங்களில் (பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம்) பணியாற்றிய 36 ஆண்டுகளிலும் பேராசிரியருக்கு முழு ஒத்துழைப்பு நல்கி குடும்பப் பொறுப்பை முழுமையாக ஏற்று உதவியவர்கள் அவருடைய அன்னையாரும் துணைவியாருமே.

ஓர் ஆய்வுக்கு தேர்வு செய்யப்பெற்ற பொருளின் ஆழத்திலும், விரிவிலும் ஆழங்கால் பட்டு திறமையாக ஆய்வினை முடிவிற்குக் கொண்டு சேர்ப்பது ஓர் ஆய்வாளரின் தலையாய கடமை எனில் அது மிகையன்று. பேராசிரியரின் முனைவர் பட்ட ஆய்வு மிகச்சிறந்த தனித்தன்மைகளைக் கொண்டு விளங்குகின்றது.

இணையம், கணினி ..... என எவ்வித வசதியும் அற்றச்சூழலில் தாமே முயன்று முதல் நிலை ஆய்வுகளை உருவாக்கியப் பேராசிரியர் ந சுப்புரெட்டியார் உழைப்பும், நேர்மையும் குன்றி வரும் இன்றைய தமிழ் ஆய்வுலகுக்கு முன்மாதிரியாகக் கொண்டாடத்தக்கவர். பேராசிரியரின் படைப்புகளுக்கு புகழ்பெற்ற அறிஞர்கள், கல்வியாளர்கள், நீதியரசர்கள், சான்றோர்கள் பலர் அணிந்துரைகள் வழங்கியுள்ளனர். இதன்வழி பேராசிரியரின் நட்பும், தொடர்பும், அறிவுலக ஏற்பும் இளைய தலைமுறைக்குத் தெரியவரும் பொருட்டு இந்நூல் (**மே ஒன்று**) முயல்கின்றது.

இந்நூல் பேராசிரியரின் 61 வருட (1916 – 1977) வாழ்க்கையில் நிகழ்வுற்ற அவரது பல்வேறு கல்விப்பணிகளை 21ஆம் நூற்றாண்டு இளந்தலைமுறையினர் அறியும்பொருட்டு படைக்கப்பெற்றுள்ளது. புதினமுறையில் எழுதப்பெற்றுள்ள இந்நூலை படிப்போர், பேராசிரியரின் வாழ்க்கையின் பல்வேறு நிகழ்வுகளை – பிறப்பு, வளர்ப்பு, கல்வி ; பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அவரது கல்விப்பணி – மிகச்சிறந்த முறையில் அறிந்து பயன்பெறுவர் என்பது கண்கூடு.

90 ஆண்டுகால வாழ்க்கைப் பயணத்தில் பல சவால்களையும், பல வெற்றிகளையும் கண்ட பேராசிரியர் தன் இரு பேத்திகளின் திருமணங்களை 2002 மற்றும் 2006 ஆண்டுகளில் கண்டு களித்து 1.5.2006அன்று இறைவனடி இணைந்தார்.

இந்நூலாசிரியரின்

முனைவர் பூ.சு.கணேஷ்மூர்த்தி
உதவிப்பேராசிரியர்
தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக்கழகம்
சீனிவாசவனம், குப்பம் - 517 426, ஆந்திரமாநிலம்

இப்புதிய முயற்சி தமிழ் எழுத்துலகில் மிகவும் சிறந்த பாராட்டுதல்களை பெறும் என்பது திண்ணம்.

வாழ்த்துப்பா

பன்மொழி வித்தகராய் நூல்களை பதிப்பித்து தந்தவராம்
பாமரனும் அறியும்படி புதுக்கவிதையை செதுக்கியவராம்
தமிழ்ச் சான்றோர்களின் கருத்துக்களை ஏட்டினில் உலாவர வைத்தவராம்
தெய்வத் தமிழை பட்டி தொட்டியெல்லாம் புகழ்மணக்க செய்தவராம்...

ந சுப்பு ரெட்டியார்!

பைந்தமிழ் மணம் கமழும் பெரம்கம்பியில் (திருச்சி) உதித்தவராம்
தாய்மண்ணாம் தமிழத்தாயின் கருவறையில் தவழ்ந்தவராம்
தமிழையே சுவாசித்து தமிழ்த்தேனை தேநாவில் கலந்து பேசியவராம்
தமிழரின் வாழ்வியலை செவிவழியே கேட்டு ‘கல்வி ஞானம்’ பெற்றவராம்...

ந சுப்பு ரெட்டியார்!

மழலையர் பருவத்தில் மங்காத நிலவொளியில் பயின்றவராம்
மணலில் எழுதியும் மனதில் நிறுத்தியும் பயிற்சி பெற்றவராம்
மூன்று வயது முடியும் முன்பே தந்தையை இழந்தவராம்
பாட்டியின் அன்பினிலே வாழ்க்கைப் பயணத்தை தொடங்கியவராம்...

ந சுப்பு ரெட்டியார்!

மும்மொழி கற்றவராம் மூன்று விழாக்களில் மனதை பறிகொடுத்தவராம்
கண்ணீர்விட்டு அழுவாராம் ‘தன்’ காரியத்தை சாதித்துக் கொள்வாராம்
ஆதாரித்து வந்த பாட்டியார் இறந்திடவே மண்புழுவாய் துடித்துப் போனாராம்
பொருளாதார நிலையும் சரிந்திடவே மனம் உடைந்து நின்றாராம்...

ந சுப்பு ரெட்டியார்!

நல்லோரின் ஆசியுடன் ‘உயர்கல்வி கற்று’ தலைமையாசிரியராய் உயர்ந்தவராம்
நானிலம் போற்றிடவே கல்வியாளர்களின் கனவை நிறைவேற்றி தந்தவராம்
எந்நிலையிலும் தன்னிலை மாறாமல் உள்ளன்போடு வரவேற்று மகிழ்ந்தவராம்
தடைகளை தகர்த்தெறிந்து மனித–மனங்களை அன்பினால் வென்றவராம்...

ந சுப்பு ரெட்டியார்!

விதிகளுக்கு மாறாத எதையும் செய்யத் துணியாதவராம்

துயரங்கள் வந்தபோதும் எதிர்கொண்டு வென்றவராம்

பொறுப்புகளையும் கௌரவங்களையும் நாடிச்செல்லாத மாமனிதராம்

நேர்மையும் கண்டிப்பும் கொள்கையாய் கொண்ட போர் மறவராம்...

ந சுப்பு ரெட்டியார்!

அறிவியல் ஆசானாய் பணியைத் தொடங்கியவராம்

அடக்கமுடன் பலபதவிகளை அன்புடன் ஏற்றவராம்

திருவேங்கடவன் பல்கலையில் ‘தமிழாசனாய்’ புலமைப் பெற்றவராம்

விருதுகள் பலபெற்று தமிழ் அன்னைக்கு மணிமகுடம் சூட்டியவராம்...

ந சுப்பு ரெட்டியார்!

இருபதாம் நூற்றாண்டின் ஒப்பற்ற படைப்பாளராம்

இளைஞர்களின் வாழ்வில் முடிசூடா கல்வி வள்ளலாம்

தமிழின்பால் தீராக் காதல் கொண்டவராம்

உயிர் உள்ளவரை தமிழ் உணர்வோடு கலந்தவராம்...

ந சுப்பு ரெட்டியார்!

தாய்மொழியாம் தெலுங்கையும் உயிர்மொழி தமிழையும் கற்றவராம்

வேங்கடவன் பல்கலையில் தமிழுக்கு அரியணை தந்தவராம்

வாழ்வில் எதிர்நீச்சல் போட்டே தன்னை உயர்த்திக் கொண்டவராம்

உலகநாடுகளில் கால்பதித்து தமிழ்மொழியின் பெருமையை உணர்த்தியவராம்...

ந சுப்பு ரெட்டியார்!

பல்கலைக் கழகங்களில் எவ்விடத்தும் ‘தமிழ்த்துறையை’ தோற்றுவித்தவராம்

பண்பாளராய் கல்வியாளராய் உளவியல் அறிஞராய் திகழ்ந்தவராம்

மிகப்பெரியப் பதவிகள் தன்னை தேடிவந்தபோதிலும் ஏற்க மறுத்தவராம்

பல்கலைகழகத் துணைவேந்தர் பதவியையே நிராகரித்தவராம்...

ந சுப்பு ரெட்டியார்!

பொம்மலாட்டம் கலையை உருவாக்கி 'உயிர்' கொடுத்தவராம்
பொறுமையை வாழ்வினில் கடைப்பிடித்து உயர்ந்தவராம்
தாய்மொழிக்கல்வி வேண்டுமென்று அரசுக்கு பரிந்துரை செய்தவராம்
தமிழ் பயிற்றும் முறையை நூலாக வடித்து தந்தவராம்...

நு சுப்பு ரெட்டியார்!

சமயத் தத்துவ விளக்க நூல்கள்! திருத்தலப் பயணம் கண்டவராம்
திறனாய்வு நூல்கள் பலகண்டு கால ஏட்டினில் பதித்தவராம்
எவருக்கும் தலைவணங்காமல் தராசுத் தட்டின் முள்ளாய் நேர்வழியில் நடந்தவராம்
இப்புண்ணிய பூமியில் ஆன்மீகச் சுடராய் கல்வியின் பிதாமகனாய் வாழ்பவராம்...

நு சுப்பு ரெட்டியார்!

ஐயத்தை போக்கிய பாசமிகு ஆசானாம்
ஒல்காப்புகழ் வள்ளுவனை வாழ்வினில் சுமந்தவராம்
ஓய்வுக்கே ஓய்வுகொடுத்து இறுதிவரை உழைத்தவராம்
ஔவையின் தீந்தமிழாய் இதயத்துடிப்பினில் இணைந்தவராம்...

நு சுப்பு ரெட்டியார்!

உண்மையை நேசித்து வாசித்த ஞானச் சுடரொளியாம்
ஊரார் போற்றும் ஒப்பற்ற அன்பனாம்
எளிமையின் உருவமாய் விருட்சமாய் சுழன்றவராம்
ஏணியாய் வாழ்வினில் படிப்படியாய் உயர்ந்தவராம்...

நு சுப்பு ரெட்டியார்!

அன்பில் திளைத்த அன்னையாம் தந்தையாம் அறிவுச் சுடரொளியாம்
ஆணவம் இல்லாத அன்பின் நேசனாம் தமிழின் தாசனாம்
இனியவை கற்பித்த குறுந்தொகை இனியவனாம் திருமலையின் வாசனாம்
ஈதலைப் போற்றிய பண்பின் நாயகனாம் பாமரனின் விடியலாம்...

நு சுப்பு ரெட்டியார்!

திரு வெ பாலாஜி
உதவிப்பேராசிரியர்/தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயல், சென்னை-600 095

வருக !




பிறப்பு – வளர்ப்பு – கல்வி

அன்பிற்குறிய ஆசான் ராமசுப்பு பிறந்த இடம் பெகரம்பி என்னும் சின்ன கிராமம், இலால்குடி வட்டம், திருச்சி மாவட்டம். ஆசானின் அன்னை பிறந்த ஊர் நீர் வளமும் நிலவளமும் மிக்க அழகிய ஊராக இருந்தது. அவ்வூரின் மேற்கே ஒரு பெரிய ஏரி உண்டு. ஏரியில் எந்நேரமும் நீர் நிரம்பி இருக்கும். அந்த ஏரி பாய்தலால் ஊருக்கு மேற்புறத்தில் உள்ள நஞ்சை நிலத்தில் இரு போகமும் நன்றாக விளைந்தன. ஏரியின் மேட்டு நிலப் பகுதிக்கும் பள்ள நிலப்பகுதிக்குமாக நீர் மதகு வழியாக பிரிந்து செல்லும். இந்த ஏரிக்கும் ஊருக்கும் இடையே சற்றேறக்குறைய ஐம்பது ஏக்கர் பரப்பிற்குரிய பத்தடி பள்ளம் உண்டு. இப்பகுதியில் ஒரு மாரியம்மன் கோயில் இருந்தது.

இதனைத் தவிர தனியாரின் வைக்கோல் பட்டடைகளும் இருந்தன. சில சமயம் ஏரி அளவுக்கு மேல் பெருகி நீர்கடை வழிந்தால் ஊருக்கும் ஏரிக்கும் இடையே உள்ள பள்ளப் பகுதியில் நீர் சூழ்ந்து விடும். ஒன்றிரண்டு நாட்கள் மக்களை தம் வயல்களுக்குப் போகாது தடுத்துவிடும். மாரியம்மன் கோயில் நீரில் சூழ்ந்து விடும். நீர் கடவுளல்லவா? வைக்கோல் போர்கட்டும் இதே நிலை தான். ஏரியிலிருந்து பெருகி செல்லும் நீர் ஊருக்கு மேற்கில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சின்ன ஏரிக்கு செல்லும். இவ்வாறு வழிந்து செல்லும் நிலையில் இடுப்பளவுக்கு மேலும் நீர் செல்வதால் ஒன்றிரண்டு நாட்களுக்கு ஊருக்கு மேற்றிசையில் உள்ள ஊர்களுக்கும் இந்த ஊருக்கும் தொடர்பு அறுந்து விடும். சின்ன ஏரிக்கு அதிக பாசனம் இல்லை. இதிலிருந்து வழியும் நீர் மேல் திசையில் சென்று ஊருக்கு வெளியே அமைந்துள்ள காட்டாற்றில் கலந்து விடும்.

கோயிலுக்கு மேற்குப் புறத்தில் நல்ல கிணறு ஒன்று உண்டு. இஃது ஊர் மக்கள் இறங்கி நீராடுவதற்கு நல்லதோர் நீர்நிலையாக அமைந்தது. இக்கோயிலையொட்டி வட திசையை

நோக்கி பிடாரி கோயிலும் அதன் அருகே இராமசாமி கோயிலும் உண்டு. ஊரை ஒட்டி மேற்குப்புறமாக எல்லையம்மன், மாரியம்மன் கோயில்கள் உண்டு. இவ்விரு கோயில்களுக்கும் விழா நடந்ததை ஆசான் ஒருபோதும் பார்த்ததில்லை.

கம்பத்தடி பெருமாளுக்கு தாசரி என்ற பெயர் கொண்ட ஒருவரால் நாள்தோறும் பூஜை நடப்பதை கண்டிருக்கிறார். ஊருக்கு கிழக்கே சாவடி ஒன்று உண்டு. இதில் தான் செட்டியார் திண்ணை பள்ளிக்கூடம் நடத்துவார். மணலில் தான் மாணவர்கள் எழுதுவார்கள். செட்டியார் நல்ல செல்வாக்கு உள்ளவர். தெலுங்கும் தமிழும் கற்பிப்பார்.

அந்த காலத்தில் பிள்ளைகள் இரண்டு மொழிகளையும் கற்றனர். எண் சுவடி எல்லோருக்கும் மனப்பாடம். எளிதாக கணக்குப் பாடத்தைக் கற்பதற்கு இது பெருந்துணை புரிந்தது. ஹரி செட்டியார் ஊர் மக்களுக்கு பத்திரம் எழுதுதல், கடிதங்கள் எழுதுதல் போன்ற நற்காரியங்களை இலவசமாக செய்து வந்ததால் இவருக்கு நல்ல செல்வாக்கு இருந்து வந்தது. ஆண்டுதோறும் ஆடிப்பதினெட்டுக்கு முதல் நாள் நான்கு கரகங்கள் காவிரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு நீராட்டி மறுநாள் திருப்பிக் கொண்டு வரப்படும். பாட்டு பாடிக்கொண்டு கரகாட்டம் ஆடுவது இன்று பார்ப்பது போலவே ஆசானின் மனதில் பசுமையாக அமைந்திருந்தது. பெரிய பூசாரி ரெட்டி மிக அற்புதமாக ஆடுவார்.

ஊருக்கு தெற்கே ஒரு தண்ணீர் குளம். நல்ல நீர் நிறைந்ததாக இருக்கும். சுவையும் அற்புதமாக உண்டு. ஊர்மக்கள் ஒன்று இரண்டு குடங்கள் எடுத்து சென்று குடிநீராக பயன்படுத்துவர். அக்குடிநீருக்கு காவல் உண்டு. அக்குளத்தை மக்கள் கட்டுப்பாட்டுடன் நீர் கெடாமல் பார்த்து வந்தனர். இத்தகைய சீரும் சிறப்பும் மிக்க சிற்றூரில் பண்ணையார் வீடு ஒன்று உண்டு. அதுதான் ஆசானின் அன்னை மீனாட்சிக்கு தாயகமாக இருந்தது. இந்த ஊருக்கு மேற்கில் சுமார் ஆறு கிலோமீட்டர் தொலைவில் கோட்டாத்தூர் என்ற கிராமம் ஆசானின் தந்தை பிறந்த ஊராகும். ஆசானுக்கு மூன்று வயது இருக்கும் போது அவரது தந்தை பரமபதம் அடைந்தார்.

அதன் பின்னர் ஆசானை ஒரு சில நாட்கள் அவரது தாய் தான் காத்து வந்து ஆசானின் பாட்டி வீட்டிற்கு சென்று வளர்த்தார். ஆசானின் தாய்மாமன் செல்லப்ப ரெட்டியார் கிட்டத்தட்ட முப்பது வயதை ஒத்தவர். அவர் திருமணமாகி ஓரிரு ஆண்டுகள் கூட இல்லற வாழ்வை நடத்தவில்லை. இவர் மகா சாதுவானவர். ஆசான் அவரது பாட்டனை பார்த்ததில்லை. பாட்டி சற்று கடுமையானவர். அவர் போட்ட கோட்டை யாரும் தாண்ட கூடாது. இல்லத்தரசியாக தம் இல்லத்தை எல்லா வகையிலும் காத்து வந்தார்.

வேளாண்மை அவர் ஆணைப்படி தான் நடக்கும். ஆசான் தந்தையை இழந்த காரணத்தினால் எல்லோருக்கும் அவர் பால் இரக்கம் உண்டு. தாய் மாமனின் முழு கவனமும் அவர் மேல் உண்டு. ஆசானின் தாயின் மீது கூட தாய் மாமன் பரிவாகவே இருந்தார். ஆசான் அவ்வீட்டில் செல்லமாக வளர்க்கப் பெற்று வந்தார். ஆசானின் பாட்டன் சொத்து சுமார் ஐம்பது ஏக்கருக்கு குறையாத சதுர நிலப்பகுதியாக பூர்வீக சொத்தாக அமைந்தது. ஐந்து கிலோ மீட்டர் தொலைவு - மாட்டு வண்டியில் சுற்றி வரலாம். இதில் இருபது ஏக்கர் மட்டும் வறட்டு நிலமாக இருந்தது. மேடு பள்ளமாக இருக்கும்.

ஆண்டுதோறும் பங்குனி சித்திரையில் வெல்லம், நாட்டு சர்க்கரை உற்பத்தியின் போது ஆலைக் கூடத்தில் ஆலைப்பொறி பூட்டப்படும். வேலை முடிந்தவுடன் அவை கழட்டப் பெற்று பாதுகாப்பிற்காக வீட்டிற்கு கொண்டு வரப்படும். நிலப்பரப்பில் சுமார் 10 ஏக்கர் புஞ்சை பயிர் சாகுபடி இருக்கும். சோளம், கம்பு, மொச்சை, பாசிப்பயறு, காராமணி, துவரை, முல்லை நில கருப்பொருட்கள், நல்ல விளைச்சலைத் தரும். இதில் 5 ஏக்கர் நிலத்தில் சில சமயம் மிளகாய் சாகுபடி நல்ல விளைச்சலை தரும். ஒரு பெரிய கிணறு உண்டு. மாரி காலத்தில் கிணறு நிரம்பி வழியும்.

ஆசானின் தாய் மாமன் பண்ணை வேலையை சில பணியாட்கள் துணைக் கொண்டு கவனித்து வந்தார். கரும்பாலை வேலையில் அவர் ஒருவரே நேராக ஈடுபடுவார். கரும்பு பாலைக் காய்ச்சி பாகாக்கி அச்சு குழியில் இறக்கி சிறு சிறு அச்சுகளாக வெல்லம் தயாரிக்கப்படும். அப்படி தயாரிக்கும் போது மீதமுள்ள வெல்லத்தை ஆசானின் அம்மையார் அவருக்கு அன்புடன் தருவார். வெல்லம் தயாரிக்கும் பொழுது ஏலம் கிராம்பு ஜாதிக்காய் இவற்றின் பொடியை கலந்து வெல்லம் தயாரிப்பர். வெல்லம் காய்ச்ச ஒரு வாரம் ஆகும். அந்த ஒரு வாரமும் ஆசான் பள்ளிக்கு மட்டம் போடுவார். அந்நாட்களில் ஆசிரியரைக் கூட்டி வந்து கரும்பு பால் விருந்து வைப்பார். அவரது இல்லத்திற்கும் சிறிது கரும்புப் பாலை அனுப்பி வைப்பார். தாய்மாமன் வீடு ஓரளவுக்கு பரந்த அளவில் அமைந்திருந்தது. முன் பகுதி மாடி பகுதியுடையது. அதில் நெற் களஞ்சியமும் அடங்கும். மிளகாய் தோட்டமும் அங்கு உண்டு. அனைத்து காய்கறிகளும் அங்கு பயிரிடப்படும்.

பண்ணையார் வீட்டில் கறவை மாடுகள் இல்லாத நாட்களே இல்லை. ஆசான் நினைவு கூர்ந்த வகையில் இரண்டு பசுக்களும் மூன்று எருமைகளும் பால் கறந்தன. ஆயர்பாடி போல் வீடு திகழ்ந்தது. பால், தயிர், மோர், நெய் இவற்றிற்கு எப்போதுமே குறைவில்லை. மோர் தேவையானவர்கள் இலவசமாகப் பெற்று செல்வார்கள். ஆசான் சிறுவயதிலிருந்தே

சுறுசுறுப்பாக இருந்தவர், சோம்பல் என்ற பேச்சுக்கே இடமில்லை. அந்த காலகட்டத்தில் அந்த சிறு கிராமத்தில் பெரிய செல்வர்கள் வீடுகள் உட்பட மதிய உணவு கம்பு, கேழ்வரகு மாவில்தான் தயார் செய்யப்படும். அரிசி சோறு அவர்கள் வீட்டில் காண்பது என்பது அரிது. இதற்கு காய்கறி வகைகள் தேவையில்லை.

ஆசானின் ஆசிரியர் ஹரி செட்டியார். வகுப்பில் ஆசானின் சுறுசுறுப்பும் படிப்பில் காட்டிய ஆர்வமும், ஒழுக்கம் தவறாமல் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே பள்ளியில் இருப்பதும் எல்லோரும் மெச்சக் காரணமாக இருந்தன. சில மாதங்களில் தமிழ் நெடுங்கணக்கை படிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டது அனைவரையும் ஆச்சரியப்படுத்தின. ஓராண்டுக்குள் 1-10 வரை வாய்ப்பாடு மனப்பாடம் ஆகிவிட்டது. இந்திய அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் இருப்பது போல் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் ஆசான் பள்ளியில் இல்லை. ஆண்டுதோறும் தேர்வுகள் வைத்து தேறியவர்கள் வகுப்பு உயர்வு செய்யும் வழக்கம் இந்தத் திண்ணை பள்ளியில் இல்லை. முதல் ஆண்டில் மணலில் தான் அனைவரும் எழுத்துக்களையும் எழுதி கற்க வேண்டும் .

இரண்டு அல்லது மூன்றாவது ஆண்டு தான் கற்பலகை பலப்பம் ஆகியவற்றை பயன்படுத்தும் முறை தொடங்கும். அடுத்த ஆண்டில் பென்சிலைக் கொண்டு குறிப்பேட்டில் எழுதும் முறை தொடங்கும். இதில் ஓரளவு தேர்ந்ததும் ரீபில் முள் பதித்த பேனாவில் ஆசிரியரே கடுக்காயைக் கொண்டு காய்ச்சின சுட்ட மண்ணாலான மைக்கூட்டில் வழங்கும் மையைத் தொட்டு எழுதும் பயிற்சி தொடங்கும். முதலில் நான்கு கோடுகளும் பிறகு மூன்று கோடுகளும் அதன் பிறகு இரண்டு கோடுகளும் பின்னர் ஒரு கோடுமாக போடப்பட்டுள்ள குறிப்புகள் பயன்படுத்தப்படும்.

ஆசானின் வாத்தியார் கற்பலகையில் எழுதும் போது பலப்பத்தைக் கொண்டு எழுதும் போதும் தாளில் பென்சிலால் எழுதும் போதும் ஆசிரியர் எழுத்தின் வடிவத்தில் கவனம் செலுத்தி திருத்துவார் இதனால் எழுத்தின் சரியான வடிவம் சிறுவர்களின் மனதில் நன்கு பதியும். எழும்போது உட்கார்ந்து எழுத வேண்டிய நிலையை காட்டுவார். நேராக உட்கார்ந்து எழுதுமாறு வற்புறுத்துவார். உட்காருவது மாணாக்கருக்கு சுகமாக இருக்கும் நிலையை காட்டி விளக்குவார். பலப்பம், பென்சில், பேனா இவற்றை குழந்தைகள் பிடித்து எழுதும் நிலையை நன்கு கண்காணிப்பார். உடனுக்குடன் திருத்தவும் செய்வார். எழுத்துக்களுக்கு இடையிலும் வரிகளுக்கு இடையிலும் சிறிது இடம் விட்டு எழுதும் பழக்கத்தை தொடக்கத்தில் இருந்தே வற்புறுத்துவார்.

டால்டன் திட்டம் என அமெரிக்க கல்வி திட்டத்தோடு ஓரளவுக்கு ஒப்பிட்டு பேசக்கூடியதாக இருந்தது. டால்டன் திட்ட அமைப்பைப் போலவே செட்டியார் திட்டத்திலும் வகுப்பறைகள் இல்லை. பாட வேளைப் பட்டிகள் இல்லை. தேர்வுகள் வகுப்பு மாற்றம் முதலிய முறைகள் இல்லை. வகுப்பு ஆசிரியர் என்ற ஒருவர் இல்லை. ஹரி செட்டியார் மேற்கு புறமாக திண்ணையின் மீது கல்லால் செய்யப்பட்ட இறைவன் போல் வீற்றிருப்பார். இவ்வாறு இருக்கும் நிலையிலேயே அனைத்தையும் கவனித்துக் கொள்வார். சில சமயம் ஊர்காரர்களுக்கும் பத்திரங்கள் எழுதுவார். கடிதங்கள் போன்ற சமூக தொண்டும் செய்வது வழக்கமாயிருந்தது.

பள்ளி வேலையின் போது யாரேனும் இடைஞ்சலாக வந்தால் அவர்களிடம் அரட்டை அடிப்பதில்லை. ஒன்று இரண்டு பேச்சுடன் அனுப்பிவிடுவார். பள்ளி நடைமுறை வினோதமாக இருக்கும். காலையில் முதலாக வரும் மாணவன் தான் சரஸ்வதி என்று சொல்லிக் கொள்வார். அவ்வாறு ஆசான் பலமுறை சரஸ்வதி ஆகி இருக்கிறார். ஆசிரியர் வராமலேயே முறை வைப்பு என்ற ஒரு அருமையான வழக்க முறை ஒழுங்காக நடைபெற்றது. மாதங்களின் பெயர்கள், ஆண்டுகளின் பெயர்கள், நட்சத்திரங்களின் பெயர்கள், திதிகளின் பெயர்கள் மாணாக்கருக்கு மனப்பாடமாக அமைந்துவிடும். இந்த முறை வைப்பிலேயே மாணாக்கர்கள் வாய்ப்பாடு, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை முழுவதையும் கற்றுக் கொண்டு விடுவார்கள். இக்காலகட்டத்தில் ஆசிரியர் பெரும்பாலும் இருப்பதில்லை. தலைமை மாணவன் இதை ஒழுங்காக நடத்தி விடுவான். ஏழு மணிக்கு மாணவர்கள் வீடு திரும்பி விடுவார்கள். மீண்டும் காலை உணவிற்குப்பின் ஒன்பது மணிக்கு பள்ளிக்கு வந்து விடுவார்கள் அப்போது ஆசிரியர் இருப்பார். பாடங்களை நடத்துவார்.

திங்கள் தோறும் ஒரு முறை சிறுவர்கள் மணலை மாற்ற வேண்டும். புழுதி நிறைந்த மணலில் இருப்பது உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் அல்லவா. மணலை சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆற்றில் இருந்து கொண்டு வருதல் வேண்டும். சிறுவர்களே இதனைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அரச மரத்துப் பிள்ளையார் முதல் அவ்வப்போது அனைவரும் படைத்து மகிழும் பிள்ளையார் வரை (மஞ்சள்பிள்ளையார், சாணப்பிள்ளையார்) நன்கு அறிந்தவர்கள். எந்த கோயில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எல்லா ஊரிலும் பிள்ளையார் கோயில் கட்டாயம் இருக்கும்.

பிள்ளையாரைப் போற்றுகின்ற சிறுவர்கள் ஆற்றலையும் அறிவையும் பெறுவார்கள் என்ற தத்துவத்தில் பெரும் நம்பிக்கை கொண்டவர் ஹரி செட்டியார். இதனால் சிறு வயது முதலே

விநாயகர் அகவல் விளையாட்டு போல் கற்பிப்பதில் "முறை வைப்பு" முறையை நுழைத்தார். ஹரி செட்டியார் விரும்புகிறவர்களுக்கு தெலுங்கு கற்பிப்பார். கா நமச்சிவாய முதலியார் எழுதிய தமிழ் பாடல் நூல்களின் தெலுங்கு மொழியாக நூல்கள் புழக்கத்தில் இருந்தன. வெள்ளைக்காரர் ஆட்சியில் மொழியின் அடிப்படையில் மாநில பிரிவு இல்லாததால் முதலியார் அவர்களின் நூல்கள் தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற மூன்று மொழிகளிலும் மொழி பெயர்த்திருக்க வேண்டும் என அறிய முடிகிறது. சென்னை மாகாணம் முழுவதும் நான்கு மொழிகளில் இருந்து இவரது பாடநூல்களே அனைத்து உரிமைகளும் பெற்று புழக்கத்தில் இருந்திருக்க வேண்டும்.

இதனால்தான் அவருக்கு செல்வ செழிப்பு இருந்தது. சிறந்த புலமையுடன் வள்ளன்மையும் இருந்ததால் பல புலவர்கள் இவரிடம் உதவி பெற்று மகிழ்ந்தனர். சென்னை கடற்கரையில் அமைந்திருந்த இவர்தம் திருமாளிகைக்கு சதா வருவதும் போவதுமாக இருக்கும் என்பதை அறியலாம். முதலியார் அவர்களின் தெலுங்கு மொழிபெயர்ப்பு நூல்களை செட்டியார் அவர்கள் ஆசானையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் வாங்க செய்து விடுவார். தெலுங்கு கற்றல் எளிதாக இருந்தது. இவற்றைத் தவிர "பெத்தபாலசிட்ச" என்ற நூலையும் வாங்க செய்து அவற்றையும் பயன்படுத்துவார். திண்ணை பள்ளிக்கூடத்தில் நடைபெறும் சிறப்பான நிகழ்ச்சிகளாக சொல்ல வேண்டுமானால் பிள்ளையார் சதுர்த்தி, சரஸ்வதி பூஜை என்ற இரண்டையும் சொல்லலாம்.

எந்த விழாவாக இருந்தாலும் பள்ளியில் பயிலும் சிறுவர் சிறுமியர் அனைவரையும் அவற்றில் தொடர்பு கொள்ள செய்வதில் திறமைசாலி செட்டியார். சென்னை போன்ற நகரங்களில் மண்ணால் ஆன பிள்ளையார் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுவது போல அந்த சிற்றூரில் பிள்ளையாரை விற்பதில்லை. செட்டியார் அவர்களே மிக அற்புதமாக பிள்ளையாரை உருவாக்கி விடுவார். பிள்ளையார் சதுர்த்தி அன்று ஆசிரியர் செய்த பிள்ளையாரும் வழிபாட்டிற்கு வைக்கப்படும். சிறுவர்கள் செய்தவற்றில் நல்லவனவற்றை தேர்ந்தெடுத்து அவையும் ஆசிரியர் செய்த பிள்ளையாரின் அருகிலேயே வைக்கப்படும். பிள்ளையார் சதுர்த்தி அன்று ஆகும் செலவிற்கு பிள்ளைகளின் தலைக்கு ஒரணா இரண்டணா என்று தந்து விடுவார்கள். பெற்றோர்களும் இச்சிறு தொகையை மகிழ்ச்சியுடன் பிள்ளைகளிடம் அனுப்பிவிடுவர்.

சரஸ்வதி பூஜைக்கு ஆசிரியர் கோலாட்டக் குச்சிகளை தயாரித்து தந்து விடுவார். இந்தக் கோல்களால் கோலாட்டம் நடைபெறும் போது அப்பாடல் மொழி காதுகளுக்கு இனிமையாக

இருக்கும். கோலாட்ட பாட்டுகளைச் சொல்லித் தருவார் செட்டியார். நவராத்திரி விழாவில் பள்ளியில் படிக்கும் சிறுவர்கள் வீடுதோறும் கோலாட்டம் நடைபெறும். ஆசான் பிறந்த பெரகம்பியில் மூன்று திருவிழாக்கள் நடைபெறும். ஆடி பதினெட்டு, கிருஷ்ண ஜெயந்தி, காமன் பண்டிகை (லாவணி) நடைபெறும்.

ஆசானின் ஏழு எட்டு வயதில் கோலி குண்டு விளையாட்டு, கிட்டிப்புள் விளையாட்டு, பம்பர விளையாட்டு, காற்றாடிச் சுற்றுதல் போன்ற விளையாட்டுகளை சிறப்புடன் விளையாடியுள்ளார். தீபாவளி பண்டிகையின் போது பட்டாசு மத்தாப்பூ கொளுத்துவது போல ஆசானே தயாரித்த காற்றாடியை சிறுவர்கள் சுற்றுவார்கள். பொரிப்பொரியாக பெருகுவதை கண்டு சிறுவர்கள் பெரியவர்கள் அனைவரும் மகிழ்வார்கள். ஆசானின் தாய் மாமனின் முதல் மனைவி இறந்து விடுகிறார். அவர்களுக்கு ஒரே ஒரு குழந்தை செல்ல பாப்பா. தாயைப் பெற்ற தன் பாட்டியாரால் வளர்க்கப்பட்டு வருகிறாள். ஆசானின் தாய் மாமன் மறுமணம் செய்து கொண்டார். இப்பொழுது தான் வீட்டில் புயல் எழும்ப தொடங்குகிறது. ஆசானின் வாழ்வில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. திருமணமான ஊரில் இரண்டு மாதங்களில் ஆசானும் ஆசானை பெற்ற தாயின் பாட்டியும் வீட்டை விட்டு விரட்டப்படுகிறார்கள். ஆசான் அவர்களின் வீட்டை விட்டு திரும்பும் போது ஆசானின் ஆசிரியரையும் தாய் மாமனையும் பிரிந்ததால் அவரது கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

ஆசானின் அம்மாவின் மனநிலை கணித்துப் பார்க்க இயலாத அளவில் இருந்தது. பின்பு ஆசானின் தந்தையாரின் ஊரான கோட்டாத்தூர் என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தனர். ஆசானின் பாட்டி அவரை தாயினும் மேலாக வளர்த்து வந்தார். மேல்படிப்பிற்கு வெளியே செல்ல வேண்டும் என்றால் கண் கலங்குவார்கள். இன்னும் சில நாட்கள் அங்கு இருந்திருந்தால் மேற்படிப்பு பாழடைந்திருக்கும். ஆசானின் பாட்டியும் நான்காண்டுகளில் பரமபதம் அடைந்தார்.

பாட்டி மறைவிற்குப் பிறகு தாய் மாமனின் உறவு தொடர்ந்தது. கோட்டத்தூரில் நான்கு ஆண்டுகள் கழகத் தொடக்கப் பள்ளியிலும் சாமுவேல் பிள்ளை என்பவரால் நடத்தப் பெற்ற ஆங்கில பள்ளியிலும் படித்தபோது அதிகமான நண்பர்கள் ஏற்படவில்லை. இருந்தபோதிலும் குறிப்பிடத்தக்கவர்கள் ராமுடு, சுப்பு ஐயர், சிதம்பரம் போன்றவர்கள் இருந்தனர்.

ஆசானின் செல்வ நிலை மாறியது. பெரிய பண்ணை செல்வத்தில் வளர்க்க பெற்று எல்லா நலன்களையும் பெற்ற ஆசான் அந்த நலன்களை ஓரளவு கூட நன்கு அனுபவிக்க முடியாது

சொந்த வீட்டிற்கு வந்தார். ஆசானின் அன்னை இவற்றையெல்லாம் நினைத்து நினைத்து மனம் குலுங்கி இருக்க வேண்டும் என ஆசான் நினைத்துப் பார்க்கும் அளவுக்கு மனமுதிர்ச்சடைய வில்லை. வீட்டை விட்டு வெளியே செல் என தாய் மாமன் நேரில் சொல்லவில்லை. பிறர் மூலமாக கேட்டு பாட்டியும் தன்மகன் நன்றாக இருக்கட்டும் என கிளம்பினார். தாய் மாமன் அக்காவான அம்மாவும் எந்த ஒரு மனமும் நோகாமல் தம்பி நன்றாக இருந்தால் நல்லது என கிளம்பினார்.

14 ஆம் ஆண்டில் வா என கைகேயி சொன்னது போல் இங்கு ஒருவரும் சொல்லவில்லை. எல்லாம் பேசாத பேச்சாகவே இருந்தது. நிரந்தரமாகவே அப்பிரிவு ஏற்பட்டது என்பது அப்போது ஆசானுக்கு தெரியாது. கோட்டத்தூர் ஆசான் வந்த பிறகும் ஆசானின் அன்னை முந்தைய நிலையை அடிக்கடி நினைத்துப் பார்த்திருக்க வேண்டும் என தோன்றுகிறது. என்ன நினைத்தார்களோ தெரியாது. ஒரு நாள் தாய்மாமன் ஊரில் இருந்து வந்த ஒருவரிடம் இரண்டாவது திருமணத்தன்று அன்பளிப்பாக தந்த சரிகை வேட்டி சரிகை நீல நிறப்பட்டு புதிதாக வாங்கி இருந்த விவேக சிந்தாமணி, அறப்பளீசுர சதகம், அருணகிரி அந்தாதி, அரிச்சந்திர புராணம் ஆகிய நூல்கள் அனைத்தையும் தாய்மாமனிடம் சேர்க்குமாறு அனுப்பி விட்டார்கள். இச்செயலில் எவ்வளவோ அர்த்தம் உள்ளது.

அதுகாறும் தாங்கள் என் மகனை தந்தை போலும் தாய் நிலையிலும் இருந்து வளர்த்தமைக்கு நன்றி. தாங்கள் அன்புடன் என் மகனுக்கு தந்த பொருள்களை எல்லாம் திருப்பி அனுப்பி வைத்துள்ளேன். ஆண்மகன் பெற்றால் அக்குழந்தைக்கு இவற்றை பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஆசானின் வறிய நிலையிலும் இறைவன் அருளால் பிள்ளை நன்கு வளர்வான்; உயர் கல்வி பெறவேண்டும் என்ற கனவும் உள்ளது. இறையருள் படி அது நடைபெற கூடியதே என்ற நம்பிக்கையும் உண்டு. இது எல்லாம் ஆசானின் அன்னையின் மனதில் அடங்கி இருக்க வேண்டும். கோட்டாத்தூர் சூழ்நிலை அப்போது ஆசானுக்கு அர்த்தம் ஆகவில்லை.

கோட்டாத்தூரில் உறவினர் வீட்டில் தங்கி இருந்து ஒரு வயதான அம்மையாருக்கு உதவி புரிந்து அவர் இல்லத்தில் வாழ்ந்து வந்தார். அங்கிருந்த பெண்மணி ஆசானை அன்பாக பார்த்துக் கொண்டார். அங்கிருந்த பழைய நிலங்கள் ஆசானின் அன்னைக்கு உதவவில்லை. தானே ஒன்றரை ஏக்கர் நிலத்தை கஷ்டப்பட்டு வாங்கினார். அதில் ஒரு மாட்டு கொட்டகையும் ஏற்பாடு செய்தார். ஆசானுக்கும் மற்றும் அவரது பங்காளி வீட்டாருக்கும் அதில் பங்கு இருந்தது. அங்கு ஒரு சிறு வீட்டில் அவர்கள் குடியிருந்தார்கள்.

அந்தக் கூரை வீடு மங்களூர் ஓட்டு வீடாக கட்டப்பட்டது. அதற்கு செலவு 250 ரூபாய் ஆனது.

கோட்டத்தூர் பாட்டிக்கு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சில ஆண்டுகளில் இவரும் பரமபதம் அடைந்தார். கோட்டத்தூரில் ஆசான் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். அங்கு அவருக்கு ஆசிரியராக சந்திரசேகர் ஐயர் பணியாற்றி வந்தார். அவர் ஆங்கிலம் அறியாதவர். அவருக்கு சோதிடம் நன்கு தெரியும். ஊரில் உள்ளவர்களுக்கு பத்திரம் எழுதி தருவார். ஆதலால் ஊர் மக்களுக்கு அவரை நன்கு தெரியும். இதனால் அந்த சிற்றூரில் மிகவும் பிரபலமடைந்திருந்தார். அப்பள்ளி கட்டிடம் வாடகையில் அமைந்தது.

அங்கிருந்த வேலூர் வாத்தியார் வாய்ப்பாட்டினை மனப்பாடம் செய்ய சொல்லுவார். கூட்டல் கழித்தல் வகுத்தல் பெருக்கல் கணக்குகளையும் அணா பைசா கணக்கில் கணக்கில் இந்த நாள் வகை கணக்குகளையும் தெளிவாக சொல்லித் தருவார். அது தவிர அருணகிரி அந்தாதி, அறப்பளீசுர சதகம், அரிச்சந்திர புராணம் இவற்றையெல்லாம் வாங்க செய்து ஒவ்வொன்றிலும் சில பாடங்களை சொல்லித் தருவார். மாணவரும் ஆசிரியரும் ஒரே புத்தகத்தை பயன்படுத்தியும் பாடம் நடத்துவார். அவருடைய கற்பித்தல் முறை சிறப்பாக அமைந்திருக்கும். ஆசிரியருக்கு வெற்றிலை போடும் பழக்கமும் உண்டு. ஓர் ஆசிரியர் பள்ளி ஒழுங்காக நடைபெறவில்லை என்பது தணிக்கையாளர் குறிப்பு. இதனை ஒட்டியும் பள்ளியில் அதிக பிள்ளைகள் சேர்வதனாலும் உயர்நிலை ஆசிரியர் அமர்த்தபட்டார். அவர்தான் தலைமை ஆசிரியர்.

வேலூர் வாத்தியார் அவருக்கு கீழ் தான் வேலை செய்ய வேண்டும். சுப்பராய உடையார் நல்ல குடுமியுடன் அங்க வஸ்திரம் அணிந்து கொண்டு முறுக்கு மீசை கனத்த உடல் இவற்றை இயல்பாக கொண்டிருந்த உடையாருக்கு சட்டையும் அங்க வஸ்திரமும் நல்ல தோற்றத்தை தந்தது. பார்ப்பதற்கு கம்பீரமாகவும் இருந்தார். இந்த தோற்றமே மாணவர்களை அடக்கி வைத்தது. ஊர் பெருமக்களும் இத்தோற்றத்தால் ஈர்க்கப்பட்டனர். வேலூர் வாத்தியார் சட்டை அணியாமல் இருந்தாலும் நல்ல பக்தியுடன் இருந்தார். சுப்பராய உடையார் வீட்டில் தனித்த முறையில் மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்தார். அதற்கு மாதத்திற்கு ஒரு ரூபாய் வசூலித்தார். வேலூர் வாத்தியார் சம்பளமாக மாணவர்களுக்கு ஒரு மூட்டை நெல் பெறுவது வழக்கம். அது இப்போது சுப்பராய உடையாருக்கும் கிடைத்தது. சுப்பராய உடையாரால் ஆசான் ஆங்கிலம் நன்கு கற்றுக்

கொண்டார். வேலூர் வாத்தியார் நீதி நூல்களை மிக நன்றாக சிறுவர்கள் மனம் கவருமாறு கற்பிப்பார்.

முன்பின் தெரியாத சாமுவேல் பிள்ளை என்றவர் அப்பள்ளிக்கு ஆசிரியராக வந்தார். சில செல்வர்களைப் பார்த்து தான் ஆங்கிலம் கற்பிப்பவர் என்றும், குறைந்தது பத்து அல்லது பதினைந்து சிறுவர்களை சேர்த்து தந்தால் தம் பணியை தொடங்கலாம் என்றும் விண்ணப்பித்துக் கொண்டார். படி மாதம் ஒன்றரை ரூபாய் கட்டணம் மேலும் நெல் தர வேண்டும் என்று கூறியதும் இருபது மாணவர்கள் சேர்ந்தனர். இப்பள்ளியில் ஆசானும் ஆசானின் ஒன்றுவிட்ட தம்பி விக்னேஷும் சாமுவேல் பிள்ளையிடம் ஓராண்டு காலம் ஆங்கிலக் கல்வியை கற்று முன்னேற்றம் அடைந்தனர். சாமுவேல் பிள்ளை சென்ற பிறகு அரங்கநாத ஐயர் கல்வி கற்பிக்க வந்தார். தமிழும் ஆங்கிலமும் கற்பித்த இவர் விரும்புபவர்களுக்கு வடமொழியும் கற்றுக் கொடுத்தார். இவர் காலத்தில் பள்ளி வேலையில் ஒரு நல்ல ஒழுங்குமுறை கடைபிடிக்கப்பட்டது.

இந்த நாளில் இந்த நேரத்தில் இந்த பாடம்தான் சொல்வது என பாடவேளை பட்டி முறை கடைப்பிடிக்கப்பட்டது. வீட்டு வேலை என்ற ஒரு முறையையும் தம் பாடம் பயிற்றலில் நுழைத்தார். இதனால் மாணாக்கர்களிடம் சில கணக்குகளை வீட்டில் செய்தல் சில எழுத்துப் பயிற்சிகளை வீட்டிலும் செய்தல் போன்ற நற்பழக்கங்களை ஏற்படுத்தினார். அவர் பாடம் கற்பித்தலை தவிர வேறு எந்த தொழிலிலும் ஈடுபடவில்லை. இவருக்கு சோதிடமும் மருத்துவமும் தெரியாது. சின்ன கிராமமாதலால் அங்குள்ள மக்களுக்கு பத்திரம் எழுதுதல், கடிதம் எழுதுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டு சிரமதானம் செய்தார். இப்பணிகளை இவருக்கு முன் இருந்த ஆசிரியர்கள் போல் பணி நேரத்தில் இவர் செய்வதில்லை. ஆனால் அரங்கநாத ஐயரோ பெரு மக்களிடம் அவர்கள் மனம் கோனாது இனிமையாக பேசி நாலரை மணிக்கு மேல் அவர்களை வருமாறு செய்து வேண்டிய உதவிகளை செய்து அனுப்புவார். இவர்களும் கரும்பலகையை நன்கு பயன்படுத்துவார்.

வட்டி கணக்கு, லாப நஷ்ட கணக்கு, காலமும் வேலையும், காலமும் தூரமும், கூட்டுவாணிகம், தசம பின்னம் போன்ற கணக்குகளை கரும்பலகையில் செய்து காட்டுவார். கணக்குகளை செய்யும் போது படிப்படியாக வழிமுறைகளை கரும்பலகையில் எழுதி கற்பிப்பார். இது மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் படியாக இருந்தது. இந்த கற்பித்தல் முறையினால் ஆசான் அறிவிலும் கணக்கிலும் மிகத் தேர்ந்தவராக திகழ்ந்தார். இவரது கல்லூரி வாழ்வு முழுவதிலும் கணிதமும் அறிவியலும் இரண்டு கண்கள் போல் அமைந்தன.

அரங்கநாதர் ஆசானை மாணவர்களுள் தலைவராக நியமித்து அவர்களுக்கு கற்பிக்க செய்தார்.

ஆசானின் தாயார் அவர் உயர்கல்வி பெற வேண்டும் என்பதற்காக பல வசதிகள் செய்து தர வேண்டும் என்று எண்ணினார். ஆசானின் ஊரில் யாரும் அவருக்கு உதவி செய்ய வரவில்லை. அவரது பிறப்பு முதல் அன்று வரை இதேநிலை தான். திக்கற்றவருக்கு தெய்வம் தான் துணை என்பது முதுமொழி அன்றோ. இந்த முது மொழியில் அழுத்தமான நம்பிக்கையுடன் இருந்தார் ஆசானின் தாயார். ஆசானின் தாயார் ஜாதக குறிப்பை நம்புவார். அவர்கள் சொல்வதற்கு ஏற்ப எல்லா ஆலயங்களுக்கும் செல்வார். விளக்கு போடுவார். ஆசானையும் விளக்கு போட சொல்லுவார்.

நவகிரகங்களை ஒன்பது முறை சுற்றிவர செய்வார். உள்ளூரில் உள்ள எந்த கோயிலையும் விட்டு வைப்பதில்லை. கோட்டாத்தூர் வந்த சில ஆண்டுகளில் சொந்தப் பண்ணை வைக்கத் தொடங்கினார். ஆசானின் தாயார் நஞ்சை நிலத்தை ஒருவரிடம் குத்தகைக்கு விட்டிருந்தார். புஞ்சை சாகுபடி மட்டிலும் நேர் பார்வையில் இருந்தது. இதனால் ஆள், மாடுகள், வசதிகள் இருந்தன. ஆசானுக்கு மாலைக்கண் நோய் ஏற்பட்டு இருந்தபோது முருகனுக்கு முடி எடுப்பதாக வேண்டிக் கொண்டார். அதன் பிறகு சுமார் ஓர் ஆண்டில் அந்நோய் நீங்கியது. ஆசான் சிறு வயதில் பல்வேறு விளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்தார். நன்கு வாழ்க்கையில் நல்ல அநுபவம் ஏற்பட்ட பிறகு அவரது இளமைப் பருவ வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகள் மிகுதியாக அவருக்கு எழுந்தன. ஊரில் திருவிழாக்கள் அரியதாக இருந்த நிலையில் அவர்கள் ஊரில் ஒரு முறை ஊரணை கொண்டாடப் பெற்றது. ஆசானின் தாயார் அந்த ஆண்டில் தன் சொந்த செலவில் பஞ்ச உலோகங்களில் மாரியம்மன் திருமேனியை தயாரித்து கோயிலில் வைத்தார்கள். அந்த காலகட்டத்தில் ஆசான் ஊரில் நூலகம் எதுவும் இல்லை.

ஆசான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது விடுமுறை நாட்களில் அவரது மாமனார் வீட்டில் தங்குவதுண்டு. உண்ட நேரம் போக அரட்டைக் கச்சேரி அங்கு நடக்கும். அங்கு அவரது உறவினர் மகனுக்கு நெல்லி மரத்தில் ஏறி கை உடைந்து விட்டது. அவ்வாறு உடைந்த பின்னர் ஆசான் எங்கும் செல்வதில்லை. கருணை உள்ளத்தோடு தன்னைக் காத்து வரும் இறைவனுக்கு நன்றி கூறினார் ஆசான். துறையூர் சின்ன மடத்தில் ஆசானும் அவரது தம்பி விக்னேஷும் சில பணிகளை அன்புடன் செய்தனர். கோட்டத்தூரில் வி.கே.அரங்கநாத ஐயர் நல்ல அடிப்படையை உருவாக்கினாலும் அவர் கணக்கு, ஆங்கிலம்

ஆகிய இரண்டை மட்டுமே கவனிக்க முடிந்தது. வரலாறு, புவியியல், அறிவியல், தமிழ் இந்த பாடங்கள் துறையூருக்கு வந்த பிறகு நன்கு அறிமுகமானது. 1930ல் முசிறியில் சேராமல் துறையூரில் சேர்ந்தது ஒரு விதத்தில் நல்ல வாய்ப்பாகவே அமைந்துவிட்டது. உயர்நிலைப்பள்ளி சூழ்நிலை துறையூரில் அமைந்துவிட்டது. 1931ல் முசிறியில் சேரும்போது நல்லபடியுடன் சேர்ந்தது இறைவன் திருவருளால் ஏற்பட்ட வாய்ப்பாகவே கருதுகிறார் ஆசான்.

ஆசான் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்த போது புதுக்கட்டத்தில் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. பழைய கட்டடம் மாணாக்கர் விடுதியாக மாறியது. ஆசானும் விக்னேஷும் விடுதலை விடுதியில் சேர்ந்து தான் படித்தார்கள். அந்தக் காலத்தில் கே இராமச்சந்திர ஐயரின் தொண்டு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாக இருந்தது. நாட்டுப்புறங்களில் இருந்து நகர்ப்புறத்திற்கு கல்வி பயில வரும் சிறுவர்கள் சீர் கட்டு தான் தோன்றிகள் ஆகாமல் ஒழுங்காக படித்து முன்னேற்றம் அடைவதற்கு மாணாக்கர் விடுதி ஒரு புகலிடமாக இருந்தது. இவர் தன் குடும்பத்தைக் கூட அதிகம் கவனிக்காமல் தான் நிறுவிய சுமார் 30 மாணாக்கர்கள் அடங்கிய மாணாக்கர் விடுதியான பெரும் குடும்பத்தில் தான் அதிக அக்கறை செலுத்தி வந்தார்.

ஆசான் ஐந்தாம் படிவத்தில் பயின்று வந்தபோது முசிறியில் உள்ள செல்வ குடும்பத்தைச் சேர்ந்த மைனர் கிருஷ்ணசாமி பிள்ளை திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் பட்டப்படிப்பு வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அவர் முயற்சியால் முசிறி உயர்நிலைப் பள்ளியில் “**பழைய மாணாக்கர் கழகம்**” என்பதன் ஆதரவில் ஒரு பெரும் கூட்டம் நடைபெற்றது. திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி தமிழ் பேராசிரியர் திரு மு.நடேச முதலியார் “திருக்குறள்” என்ற தலைப்பில் பேசினார். அக்காலத்திலோ பின்னர் கல்லூரி வாழ்க்கையிலோ இத்தகைய ஓர் அழகிய இலக்கிய பொலிவை ஆசான் கேட்டதே இல்லை. அந்தப் பேச்சால் தான் திருக்குறளின் மீது ஆசானுக்கு ஒரு வித ஆர்வமும் மதிப்பும் ஏற்பட்டன. அக்காலத்தில் இப்போது இருப்பது போல் நாளிதழ்கள், வார பிறை திங்கள் வெளியீடுகள் இல்லை. தமிழ் மொழிக்கு அதிக மதிப்பு இல்லாத காலம். உயர்நிலைப் பள்ளியில் இருந்த வரை ஆசான் செய்தித்தாள்களை பார்த்ததே இல்லை. The Hindu என்ற ஆங்கில பத்திரிகை பற்றி கேள்விப்பட்டதுண்டு. சுதேசமித்திரன், ஆனந்த விகடன், பிரசண்ட விகடன் போன்றவற்றை பார்த்திருக்கிறார். ஆனால் தொடர்ந்து படித்ததில்லை. ஈரோட்டிலிருந்து “குடியரசு”, காரைக்குடியிலிருந்து “குமரன்” என்ற பிற இதழ்கள் வெளி வருவதாக கேள்வி. ஆனால் பார்த்ததில்லை. முசிறியில் பொது நூலகமும் படிப்பகமோ இல்லையாதலால் அவற்றைப்

பார்க்க வாய்ப்புகள் இல்லை. கோட்டத்தூரில் திரு. குணம் நல்லப்ப ரெட்டியாருக்குப் “பிரசண்ட விகடன்” வந்து கொண்டிருந்தது. அதனை அவர் ஆசானிடம் படிக்க சொல்வதுண்டு. முசிறியில் பயின்ற போது அவருக்கு வாய்த்த சில நல்லாசிரியர்கள் பற்றி பேசிக் கொண்டிருப்பார் ஆசான்.

கற்றலில் அக்கறை உண்டாக்க கற்பிக்கும் முறைதான் உயர்நாடி என்பதை நன்கு அறிந்தவர் இராமச்சந்திர அய்யர். “***அக்கறை கற்றலின் ஈர்ப்பு விசை***” என்பதை நன்கு புரிந்து கொண்டு பணியாற்றியவர். சிறார்கள் வயதுக்கு ஏற்றவாறு மன வளர்ச்சி இருக்கும் என்றும் இதற்கேற்றவாறு அவர்களின் விருப்பமும் மாறக்கூடியதென்றும் உளவியல் அறிஞர் கூறுவதை அநுபவத்தால் நன்கு தெளிந்தவர். ஹெர்பார்ட் என்று அறிஞர் கூறியவாறு மனத்தை தயாரித்தல், எடுத்துக் கோரல், ஒப்பிடல், பொதுவிதிக்காணல், விதியைச் செயற்படுத்தல் என்ற ஐந்து படிகளையும் தன் அநுபவமாக கொண்ட நல்ல ஆசிரியர். ஹெர்பாத்தின் 5 படிகளில் மனத்தை தயாரித்தல் மிகவும் முக்கியமானது. புதிதாக பயிலப் போகும் கருத்துக்களை ஏற்பதற்கு மாணாக்கர்களின் மனதைத் தயார் செய்வதே இன்றியமையாத நோக்கம். ஏற்கனவே அறிந்து கொண்டானவற்றுடன் புதிய செய்திகளை இணைத்தால்தான் அவை நன்கு பொருந்தி அநுபவமாகும். கற்பிக்கும் பாடத்தை ஒட்டி ஒரு சில தேர்ந்தெடுத்த வினாக்களை விடுத்தால் மாணாக்கர்கள் ஏற்ற விடைகள் பகிர்வர்.

அவ்விடைகளிலிருந்து அவர்களுடைய முன்னறிவிப்பு திறனைத் தெரிந்து கொள்ளலாம். இந்தப் பிடியை சிக்கென பிடித்துக் கொண்டு கே இராமச்சந்திர அய்யர் கற்பித்தார். இன்முகத்துடன் அவர் வகுப்பிற்குள் நுழைவதே அற்புதமாக இருக்கும். காலமும் தூரமும் என்ற ஆரம்ப கணித பாடப்பகுதியை மிகுந்த உற்சாகத்தோடு அவர் கற்பிப்பார். அக்காலத்தில் நாட்டுப்புறங்களில் இருந்து வரும் மாணாக்கர்களில் பெரும்பாலானோர் இரயிலை பார்க்காதவர்கள். நகர்ப்புறத்திலிருந்து வரும் மாணாக்கர்கள் இரயிலை பார்த்தவர்கள். இருந்த போதிலும் இத்தகைய கணக்குகளை செய்யும்போது மானசீகமாக பார்ப்பது அருமை. நேரில் பார்க்கும் போது ஒருவித தெளிவும் பெற வாய்ப்பு உண்டு.

ஆகவே மாணாக்கர்களிடம் அக்கரை தோன்றவும் கணக்கு போடுவதற்கு அவர்கள் மனத்தை தயாரிக்கவும் இராமச்சந்திரா ஐயர் தம் வகுப்பு மாணவர்களை முசிரியிலிருந்து படகுகளின் மூலம் குளித்தலைக்கு இட்டு செல்வார். காலை உணவு உண்டு கையில் சிற்றுண்டியுடன் சுமார் பத்து மணிக்கு புறப்படுவார்கள். குளித்தலை இரயில் நிலையத்தில் எதிர் திசையில் இரயில் வருவதைப் பார்ப்பதற்கும் ஒரே திசையில் வண்டிகள் வருவதை

பார்ப்பதற்கும் வண்டிகள் நிலையத்தை தாண்டுவதை நேரில் காண்பதற்கும் பல மணி நேரம் தவம் கிடப்பார்கள். வண்டி வராத போது வண்டிகள் மேடையைக் கடப்பது பற்றி விளக்குவார். நிலையத்தின் ஒரு கோடியை இஞ்சின் தொட்டு மறு கோடியை வண்டியின் கடைசி பெட்டி கடப்பதை தான் வண்டி மேடையை கடந்தது என்ற உண்மையை நிதர்சனமாக விளக்குவார். வண்டிக்காக காத்திருக்கும் நேரத்தில் கணக்கு பற்றிய பல்வேறு குறிப்புகளை அளிப்பார் என்று அவரது ஆசிரியர் பற்றி அடிக்கடி ஆசான் கூறுவார். ஆசான் வகுப்பிற்குப் பின் அடுத்த பிரிவுக்கு கணக்கு கற்பித்தவர் சந்தானம் ஐயங்கார். மிக அருமையாக விளக்குவதாக அப்பிரிவு மாணாக்கர்கள் சொல்வதை ஆசான் கேட்டிருக்கிறார். ஏராளமான கணக்குகளை கரும்பலகையில் போட்டு காட்டுவதையும் வீட்டு வேலையாக அதிக எண்ணிக்கையில் போடுமாறு செய்வதையும் ஓராண்டில் இரண்டு குயர் குறிப்பேடு நான்கிற்கு மேல் ஆவதையும் சிறப்பாக பேசுவார்கள். ஆனால் கே ஆர் வகுப்பு மாணாக்கர்களுக்கு இரண்டு குயர் குறிப்பேடு ஒன்று கூட முடிவதில்லை. இவர் கருத்துக்கள் மனதில் ஆள பதியவைப்பதையே நோக்கமாக கற்பிப்பவர். இவர் இயற்கணிதத்தில் வாய்ப்பாடுகளை கற்பதில் பெரும் புகழ் பெற்றவர்.

மேலும் இவர் நல்ல அநுபவம் பெற்றவர். கருவிலே திரு உடையவர். அதாவது பிறவியிலேயே ஆசிரியர் கூறு வாய்க்கப் பெற்றவர். பயிற்சி கல்லூரியில் தான் பெற்ற பயிற்சியும் நீண்ட நாள் கற்பித்த அநுபவமும் அவரை சிறந்த ஓர் ஆசிரியராக செய்து விட்டன. இவர் கல்வி புகட்டுதலில் மாணாக்கர்கள்தான் மையமே அன்றி புகட்டப் பெறும் பாடம் அல்ல என்ற கொள்கையை முறையாகக் கொண்டு கற்பித்தவர். வேதியல் பாடம் கற்பித்த டி கே இராமநாத பிள்ளை இளம் ஆசிரியராக இருந்தார். இயன்றவரை எல்லா அறிவியல் உண்மைகளையும் சோதனைகள் மூலம் விளக்குவதில் வல்லவர். சோம்பலே இவரிடம் தலை காட்டுவதில்லை.

ஆசானுக்கு பொது அறிவியலை கற்பித்தவர் ஏ நாராயணசாமி அய்யர். இவர் மெதுவாக பேசுபவர். அளவான சிரிப்பு இவரது உதடுகளில் முகிழ்க்கும். கற்பிப்பதில் மிக வல்லவர் என்று சொல்ல முடியாது. எனினும் உண்மை தொண்டர் என்றே சொல்ல வேண்டும். இவர் கற்பித்த முறை எந்த மாணவனிடமும் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. சிலர் இவரை ஊமையன் என்ற குறும்பு பெயரால் குறிப்பிட்டனர். அதன் பிறகு வின்சென்ட் என்ற அறிவியல் ஆசிரியர் பணி நியமனம் செய்யப்பட்டார். இவர் பொறுப்பு ஏற்றுக் கொண்ட சில திங்களிலேயே மாணாக்கர்களிடம் பெரும் புகழ் பெற்றார். மாணவர்களிடம் அன்பாகவும் எளிமையாகவும் பழகும் முறை கொண்டவர்.

இவர் ஆங்கிலமும் அருந்தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையில் தான் கற்பிப்பார். ஆங்கிலத்திலேயே கற்றவர் ஆதலால் தமிழ் அரிதாகவே இவர் நாவில் தாண்டவமாடியது. எனினும் தமிழ் அன்னையை பக்தியுடன் அணுகினமையால் நாளடைவில் அன்னையின் அருள் சுறந்து இரண்டரை ஆண்டு காலம் இவரிடம் பொது அறிவியல் கற்றதனால் இவர் தமிழில் கற்பித்த முறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. தமிழில் கற்பிக்க முயன்றால் காலப்போக்கில் அனைத்தும் சீர்படும் என்ற உண்மைக்கு வின்சென்ட் அவர்கள் சிறந்த எடுத்துக்காட்டு. இக்காலத்தில் நாராயணசாமி அய்யர் பொது அறிவியல் நூலென்றை நான்காம் படிவ மாணவர்களுக்கு வெளியிட்டார். இது எல்லோரும் வாங்கும் கட்டாயம் ஏற்பட்டது. வின்சென்ட் அற்புதமாக கற்பித்து குறிப்புகள் தந்த பிறகு இந்த நூலை யாரும் விரும்பவில்லை. ஆசானுக்கு தமிழ் கற்பித்த குமார வீரய்யர் பாடம் கற்பிப்பதில் வல்லவர். இவர் இலக்கணத்தை சுவையுடன் பள்ளி மாணவர்களுக்கு கற்பிப்பதில் நிகரற்றவர் என்றே சொல்லலாம்.

ஐந்தாம் படிவத்தில் நான்காம் வேற்றுமை பொருட்களை கற்பித்தார். ஐந்தாம் படிவத்தில் சின்ன தமிழ் ஐயா ஜம்புலிங்க குருக்கள். இவர் தமிழ் கவிதைகளை நல்ல முறையில் கற்பிப்பவர். வகுப்பில் ஆழ்வார் பாடல்களை மிக அழகாக பாடுவதில் வல்லவர். இவர் அவரது வாழ்நாள் முழுவதும் பல சிறுவர்களுக்கு அறிவினை நல்கி வளர்ச்சியை கண்ணாரக் கண்டு அனுபவித்தவர். ஆசிரியப் பணி என்பது நாம் சிறப்பாக பெறும் உரிமை. அது கீதாசாரியனின் பணியை போன்றது.

அப்பணியுடன் ஒரு பெரிய பொறுப்பும் இணைந்தே வருகின்றது. நாம் என்றும், பணிக்கு தம்மை பொருத்தப்பட வேண்டியதும், அநுபவத்துடன் வாழ்வது என்பதும் எளிதான செயலன்று. பிறவியிலேயே குரு சிறிதலவாவது அமையப் பெற்றவர்களுக்கு அ..்து இயலும். ஆசிரியத்துறையில் நம்பிக்கை கொண்டு பயிற்சி கல்லூரிகளில் பயிற்சி பெறுபவர்களுக்கு இது சாத்தியமாகும். ஆசான் உயர்நிலைப்பள்ளி வாழ்க்கையில் மூன்று ஆண்டுகளும் விடுதியில் வாழ்ந்த நிறைவு பெற்றார். கல்லூரி வாழ்க்கையில் திருச்சியில் உணவு விடுதி வாழ்க்கையை மேற்கொள்ளவில்லை. காரணம் வறுமை. அதைவிட குறைந்த செலவில் நல்ல உணவு, நல்ல சிற்றுண்டி, கல்லூரி அருகிலேயே தனி அறை பெற முடிந்தது. இந்த தங்கிப் பயிலும் ஐந்தாறு அறைகள் இருந்தமையால் உணவு விடுதியில் பெரும்பாலும் அனைத்தும் பெற வாய்ப்பாக இருந்தது. சைதாப்பேட்டையில் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் பயின்ற போது ஓராண்டு மாணாக்கர் உணவு விடுதியிலேயே தங்கி இருந்தார்.

அக்காலத்தில் நகரத்தில் இந்த வீடுகள் நல்ல சூழ்நிலையை நல்கியதால் செலவும் குறைவாக இருந்தமையால் உணவு விடுதியிலேயே தங்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டார். முசிறியில் மாணாக்கர் விடுதியில் தங்கி இருந்தபோது எல்லா வசதிகளும் வாய்ப்பாக அமைந்திருந்தன. மாணாக்கர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகவும் தனிப்பட்டவர்களிடம் முந்திரிக்கொட்டை போல் முட்டிக்கொண்டு திகழும் ஒவ்வாத கூறுகள் தேய்ந்து மழுங்கவும் நல்ல வாய்ப்பாக இருந்தது. ஏழை, பணக்காரர் என்ற வேற்றுமை அப்போது தலை தூக்கினாலும் பொதுவாக அப்பண்பு கட்டுக்குள் அடங்கி இருந்தது என்று தான் சொல்ல வேண்டும். இராமசாமி என்ற சிறுவன் மட்டும் இவரிடம் மிகவும் நெருங்கி பழகுவான். அந்த விடுதியில் மாலையில் இறை வழிபாடு நடக்கும். வழிபாட்டில் ஒரு 15 பேர் கலந்து கொள்வர்.

ஐந்தாம் படிவத்தில் இருந்த பொழுது கே ஆர் இராமநாத பிள்ளை அவர்கள் முயற்சியால் மேட்டூருக்கு குறைந்த செலவில் சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாணாக்கர் உணவு விடுதியில் தங்கி இருந்தவர்கள் மட்டும் அச்சுற்றுலாவில் கலந்து கொண்டனர். மேட்டூர் அணை முடிவடையாத நிலையில் இருந்தது. ஆசான் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று முடிவு எடுத்தார். பெரும்பாலான ஆசிரியர்களும் அவருக்கு இக்கல்லூரியையே பரிந்துரைத்தனர். இவரது நண்பனான அரங்கசாமியின் தந்தை காலட்சேபம் செய்தது ஆசானை மிகவும் வியப்புக்கு உள்ளாகியது. அரங்கசாமி ஆசானுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்தார்.

முதலாம் ஆண்டு கல்லூரியில் ஆசான் இணைந்ததும் கல்லூரி வகுப்புகள் முறையாக நடைபெற்றன. ஆங்கிலம் கற்பித்த முதல்வர் லீசாமியார் நாட்டுப்புறத்தில் இருந்து வந்த ஆசிரியர். மாணாக்கர்கள் மீது அன்புடன் இருந்தார். இவரது வகுப்பு மிகச் சிறப்பாக இருக்கும். பேராசிரியர் நடேச முதலியாரிடம் தமிழ் கற்கும் பெயர் கிடைத்தது. இவர் சில மாணாக்கர் மீது அதிக அக்கறையும் பாசமும் கொண்டிருந்தார். அடிக்கடி வந்து தம்மை காணுமாறு சொல்லுவார். அடிக்கடி அறிவுரையும் கூறுவார். கட்டுரை 15 நாட்களுக்கு ஒரு முறை எழுதுதல் வேண்டும் என்னும் முறை அக்கல்லூரியில் உண்டு. இந்தக் கட்டுரைகள் துணைப்பாடங்களிலும் அமையும். பொது தலைப்புகளில் எழுத வேண்டிய வரும். என்ன வகை கட்டுரை எழுத வேண்டும் என்பதை பேராசிரியர் முதலியார் வரையறை செய்வார். தலைப்பை உறுதி செய்து கொண்டு கட்டுரைப் பொருளை வகை செய்து காட்டுவார்.

முன்னுரை, கட்டுரை-உடல், முடிவுரை என வகுத்துக் காட்டி ஒவ்வொரு தலைப்புகளிலும் என்ன எழுத வேண்டும் என்று மனதில் ஆணித்தரமாக பதியும்படி விளக்குவார். அரை மணி நேரம் இவ்வழக்கம் நடைபெறும். பிறகு எல்லோரும் வாலி மண்டபம் என்ற இடத்திற்கு சென்று எழுத வேண்டும். எழுதுவதற்கு வேண்டிய தாள்கள் மேசையின் மீது வரிசையாக விநியோகித்து வைத்துக் கொண்டு திரு கிருஷ்ணசாமி ஐயங்கார் காத்துக் கொண்டிருப்பார். ஐந்து அல்லது ஆறு பக்கங்களில் அழகிய முறையில் எழுத வேண்டும். ஒன்றரை மணி நேரம் இருப்பதால் பொருளை நன்கு நிழல் பட அமைத்து நிறுத்தி எழுதலாம். அழகான முறையில் இங்ஙனம் தரப்பெற்ற பயிற்சியை ஆசான் நன்முறையில் பயன்படுத்திக் கொண்டதால் இன்றும் மணிமணியாக முத்து கோத்தார் போல் அழகாக எழுத முடிகின்றது.

மொழியாக்க பயிற்சிகளை அளித்தவர் திரு கிருஷ்ணசாமி ஐயங்கார் என்பவர். இவரது வகுப்பு கலகலப்பாக இருக்கும். நன்றாக ஆங்கிலம் பேசுவார். மொழியாக்க பயிற்சி தரும் முறையை இவர் அற்புதமாக கையாள்வார். மொழியாக்கம் செய்ய வேண்டிய பகுதியை தேர்ந்தெடுத்துக் கொள்வார். ஒரு வாக்கியத்தை எல்லோரையும் எழுதிக் கொள்ள செய்து அதை தமிழ் மொழியாக்கம் செய்யும்படி சொல்லுவார். தான் முன்னரே அந்த வாக்கியத்தை மொழியாக்கம் செய்து வைத்திருப்பார். மாணாக்கர் மொழியாக்கம் செய்திருப்பதை அங்கு ஒருவர் இங்கு ஒருவராக படிக்க செய்வார். திருப்பி படிப்பார். இவற்றால் எல்லோரும் தத்தம் குறை நிறைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். இவ்வாறு ஒரு மணி நேரத்தில் அவர் ஆறு அல்லது ஏழு வாக்கியங்களை மொழியாக்கம் செய்து காட்டுவார். இந்த முறை சிறந்தது என்பது ஆசானின் கருத்து.

புனித சூசையப்பர் கல்லூரியில் இடைநிலை வகுப்பின் போது கணிதம், அறிவியல் பாடங்களை கற்பித்தவர்கள் நல்லாசிரியர்களாக அமைந்தனர். ஆசிரியர் பயிற்சி முறையை பண்டையோர் ஈதல் இயல்பு என்று குறிப்பிடுவர். இயற்பியல் பாடம் நடத்திய சவரி முத்து அவர்கள் பாடத்தை நிதானமாக மாணாக்கர் உள்ளம் மகிழும் வகையில் அற்புதமாக நடத்தினார். அவர்தம் இனிமையான குரல் இன்றும் ஆசான் காதுகளில் ஒலிப்பது போல் உள்ளது என்று அடிக்கடி கூறுவார். ஆசான் வகுப்பிற்கு செல்லும்போது தேதி போட்டு எழுதும் பழக்கத்தை மாணாக்கர் பருவத்தில் இருந்து தன் எழுபத்திரண்டு வயது வரை கடைபிடித்து வந்ததை கூறுவார். ஆசான் படிக்கின்ற வேளையில் ஒவ்வொரு மாலை வேலையிலும் அறைக்கு திரும்பியதும் ஒவ்வொரு பாடத்திலும் அந்தந்த வினாத்தாளுக்கு உரிய பகுதிகளை வரிசை தவறாமல் எடுத்து கோர்த்து வைத்திருப்பார். இப்பணியை அமல் செய்து வருவார். தேர்வு காலங்களில் பாடங்களை திருப்பி படிக்கும்போது வகுப்பில்

ஆசிரியர் கற்பித்த காட்சிகள் நாடா பதிவு செய்து தொலைக்காட்சியிலோ வானொலியிலோ மானசீகமாக பார்ப்பது போன்ற அல்லது கேட்பது போன்ற அநுபவ நிலை ஏற்பட்டு பாடங்கள் மனதில் ஆழமாக பதியும்.

ஆங்கிலம் தமிழ் பாடங்களில் முதல் நாள் வகுப்புகளில் நடைபெற்ற பாடங்களை படித்துக் கொண்டும், புதிதாகத் தொடங்க வேண்டிய பகுதிகளை அகராதிகள் குறிப்பு நூல்கள் இவற்றின் துணை கொண்டு முன்கூட்டியே படித்துக் கொண்டும் செல்வதை ஒரு முக்கிய பழக்கமாகவே மேற்கொண்டிருந்தார். இதனால் மொழிப்பாடங்களைப் படித்து புரிந்து கொண்டு மனதில் நிலை நிறுத்துவது எளிதாகவே இருந்தது. மொழி பாடங்களில் ஆசானுக்கு எவ்வித சிரமமும் ஏற்படவில்லை. கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களில்தான் அதிகம் உழைக்க வேண்டியிருந்தது.

ஆதலால் ஆசான் இயற்பியல், வேதியியல்களில் கேட்கப்படும் கணக்குகளை ஒவ்வொன்றாக செய்வார். முறையாக பயிற்சி மேற்கொள்வார். ஆதலால் தேர்வு காலங்களில் அப்பாடங்கள் சுலபமாக அமைந்தன. ஆசான் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு இடைநிலை வகுப்பிலிருந்த போது சவுக்கு பகுதியிலுள்ள காசியப்பா ராவுத்தர் ஸ்டோரின் மேல் மாடியில்தான் தங்கி இருந்தார். விடுமுறை நாட்களில் சிறிது நேரத்தை கூட வீணடிக்க மாட்டார். அதிகாலை நான்கரை மணி முதல் ஆங்கிலம், தமிழ் படிப்பார். விடுமுறை நாட்களில் காலை ஒன்பது முப்பது மணிக்கு ஆத்திசூடி படிப்பார். வேங்கட்டராம உணவு விடுதிக்குச் சென்று பத்தரை மணிக்கு திரும்பி விடுவார். வரும்போது மலை வாழைப்பழம் ஒரு டஜன் வாங்கி வருவார். எப்பொழுதும் அறையில் பத்து பழத்திற்கு குறைவாக வைத்திருக்க மாட்டார்.

அதிகாலையில் எழுந்து படிக்கும் போது பசி எடுப்பதால் அப்போது வாழைப் பழங்களை உண்டு மண் கூசா நீரைப் பருகி பசியைத் தணித்துக் கொள்வார். அவர் காலையில் காபி பானம் அருந்துவதில்லை. உணவு கொண்டு திரும்பியதும் சோர்வு இருக்கும் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் உறங்குவார். அவரது அறையில் மின் விளக்குகள் இல்லை. அரிக்கேன் விளக்குகளைக் கொண்டுதான் படித்தார். ஆசான் அறையில் மிகச் சிக்கனமாக வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. அச்சமயத்தில் உணவு விடுதிக்கு செல்லும் போது மாலையில் ஆறு மணிக்கு சென்று இந்த சாலையில் நாளிதழ்களை புரட்டுவார். காரைக்குடியில் இருந்து வெளிவந்த குமரன், விடுதலை, சுதேசமித்திரன், குடியரசு

போன்றவற்றில் அரை மணி நேரமும் இந்து, மெயில் என்ற ஆங்கில நாளிதழ்களில் அரை மணி நேரமும் செலவிடுவார். ஒன்றரை ஆண்டுக் காலம் இவ்வாறு கழிந்தது.

விடுமுறை நாட்களில் காலை ஒன்பது முப்பது மணிக்கு பகல் உணவு கொள்ளச் செல்லும்போது அந்தச் சாலையில் உள்ள மாவட்ட நூலகத்தில் சில நூல்களில் ஆழங்கால்படுவார். திரு வி க எழுதிய பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கை துணை, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், தமிழ் தென்றல் என்ற நூல்கள் ஆசானின் உள்ளத்தைக் கவர்ந்தன.

இவற்றால் அப்பெருமானிடம் ஈடுபாடும் பக்தியும் வளர்த்துக் கொள்ள நூல்கள் அமைந்தன என்று ஆசான் கூறுவார். மறைமலை அடிகள் எழுதிய முற்காலப் புலவர்களும் பிற்காலப் புலவர்களும், சிந்தனை கட்டுரைகள், பண்டைக்காலத் தமிழரும் ஆசிரியரும், குமுதவல்லி, நாகநாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள், அறிவுக்கொத்து போன்ற நூல்களில் ஆழங்கால் படுவார்.

உ வே சாமிநாதய்யரின் நான் கண்டதும் கேட்டதும், பழையதும் புதியதும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சரித்திரம் ஆகிய நூல்களை புதன் ஞாயிறு விடுமுறை நாட்களில் பகல் பத்து முதல் 12 மணி வரை படித்து முடிப்பார். பேராசிரியர் ரா பி சேது பிள்ளையின் பன்னிரு கட்டுரைகள், வீரமாநகர் போன்ற உரைநடை நூல்கள் ஆசானின் உள்ளத்தை கவர்ந்தன. நூலகங்கள் திருக்கோயில்கள் போன்றவை. கல்வெட்டுக்களில் இவை சரசுவதி பண்டாரம் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளன.

இவை கடந்தகால முனிவர்களின் கருத்துக்கள் நிரந்தரமாக வாழும் இடங்களாகும். பண்டைக்காலப் பெரியோர்கள் கல்லறையில் அடங்கிக் கிடந்தாலும், தீயில் சாம்பலாகப் போனாலும், அவர்கள் நூல்களில் அடங்கிக் கிடந்து நம்மிடம் பேசுகின்றனர். நமக்கு அறவுரைகள் தந்த வண்ணமுள்ளனர். இந்த அறவுரைகள் அவர்தம் வாழ்க்கையினின்றும் மலர்ந்தவை. இதனால்தான் “நூல்கள் கூடுவிட்டுக் கூடு பாய்தல் செயல்களை நிறைவேற்றுகின்றன. இவை இறவாமையின் குறியீடுகள். சாவாமையின் அறிகுறிகள். மாண்டவர்கள் - மறைந்தவர்கள் சிதறிப் போயினர். அவர்களை நாம் கண்டறிய முடியாது. ஆனால் அவர்கள் நூல்களில் வாழ்கின்றனர்” என்று ஆங்கில அறிஞர் ஒருவர் கூறியுள்ளதிலிருந்து புலப்படுகின்றது.

நூலகங்கள் இலக்கியத்தின் பேழைகள். நாம் நல்ல நூல்களின் மூலம் மனத்திற்கேற்ற அணிகலன்களைப் பெறலாம். இங்கு நம் விருப்பத்திகேற்ப விருந்துண்ணலாம். வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக உள்ளவற்றையும் கண்டறியலாம். நூலகத்திலுள்ள பன்னூல்களைப் புரட்டும் போது இந்த நான்கு சுவர்களின் எல்லைக்குள் எழில் கொழிக்கும் காஷ்மீரத்தைக் காண்கின்றோம். கண்ணன் கன்று காளைகளை மேய்த்துக் குழலூதி வேடிக்கையாகப் பொழுது போக்கிய பிருந்தாவனத்தைக் காண முடிகின்றது. மைசூருக்கருகிலுள்ள இக்கால பிருந்தாவனமும் நம் கண்ணில் படுகின்றது. பண்டைய உலகின் இடிபாடுகளையும் மிக்க புகழ் கொண்ட இன்றைய நாகரிகத்தையும் ஓரிடத்தில் ஒருங்கே காண முடிகின்றது என்பது ஆசானின் வாக்கு.

காசியப்ப ராவுத்தர் ஸ்டோர் அருகிலிருந்த நகர்மன்ற மைதானத்தில் சில பொதுக் கூட்டங்கள் அடிக்கடி நடைபெறும். அக்காலத்தில் பேச்சினால் ஆசானின் மனத்தைக் கவர்ந்தவர்கள் கி ஆ பெ விசுவநாதன், தந்தை பெரியார், பட்டுக் கோட்டை அழகிரிசாமி, வல்லத்தரசு, ப ஜீவானந்தம், நீலாவதி, இராமசுப்பிரமணியம் ஆகியோர். ஒருமுறை குளித்தலையில் திரு வி க பேச்சைக் கேட்டதுண்டு.

தேசியக் கல்லூரியில் பேராசிரியர் சாரநாதன் முதல்வராக இருந்த காலத்தில் நீலாவதி அம்மையாரும், ஜீவானந்தமும் பேசிய புரட்சிகரமான இலக்கிய உரைகள் இன்னும் அவர் மனத்தில் ஒலிப்பதாகக் கூறுவார். அக்காலத்தில் மிக்க புகழுடன் விளங்கிய மறைமலை அடிகள், ஞானியார் சுவாமிகள் இவர்களைப் பார்க்கவும் பேச்சுக்களைச் செவிமடுக்கவும் நற்பேறு பெறவில்லை என்றும் ஆசான் கூறுவதுண்டு.

ஆசான் இடைநிலை வகுப்பில் இரண்டாவது ஆண்டு படிப்பில் இருந்த பொழுது "ரெட்டிஜனசங்கம்" ரெட்டிகுல இளைஞர்களுக்கு மாணவர் படிப்பு உதவி சம்பளம் தருவதாக சிலர் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறார். செய்தித்தாள்களிலும் இச்செய்தி வெளிவந்திருந்தது. இளங்கலை வகுப்பில் சேர்ந்து பயிலும்போது இதை பார்த்துக் கொள்ளலாம் என்று கருதி இருந்தார்.

கல்லூரியில் சேர்வதற்கு முன் கோட்டத்தூர் சென்று அவர் ஒன்றுவிட்ட தமையன் திருஞானி சதாசிவ ரெட்டியாரை இட்டுக்கொண்டு துறையூர் சென்று திரு பிரசன்னமுத்து வேங்கடாசலதுரை என்பவரை சந்தித்து படிப்பு உதவி சம்பளம் பெறுவதற்குரிய எல்லா தகுதிகளும் தனக்கு இருப்பதாக சான்றிதழ் ஒன்றையும் அக்காலத்தில் சென்னையில்

மிகவும் புகழ்வாய்ந்த வழக்கறிஞராக இருந்த திரு இ வி சுந்தர ரெட்டி என்பவருக்கு ஒரு பரிந்துரை கடிதமும் பெற்றார்.

அக்காலத்தில் ரெட்டியார் வகுப்பில் பட்டம் பெற்றவர்கள் நால்வர் தான். இருவர் துறையூர் பெருநிலக்கிழாரின் இரு மக்கள். பிரசன்ன விசய வேங்கடாசலதுரை, பிரசன்னா முத்துவேங்கடாசலதுரை என்ற இருவரும், நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த அலங்காநத்தம் என்ற ஊரைச் சேர்ந்த பொன்னுசாமி ரெட்டியார் என்பவரும் ஆவர். மூவரும் இளங்கலை பட்டம் பெற்று சட்டம் பயின்று அத்துறையிலும் பட்டம் பெற்றவர்கள். நான்காவதாக பி ஏ பட்டம் பெற்றவர் ஆசானின் அரிய நண்பர் கல்லூரி தோழர் திரு பா அரங்கசாமி ரெட்டியார். ஐந்தாவது பட்டதாரி ஆசான்.

அக்காலத்தில் துறையூர் பெருநிலக்கிழாராக இருந்தவர் கல்வி அறிவில்லாதவர். அரண்மனையை விட்டு வெளியில் வராதவர். துறையூரில் அவரை நேரில் பார்த்தவர்கள் ஒரு சிலரே. இவருக்கு மூன்று ஆண் மக்கள். துணைவியாரையும், மக்களையும் அரண்மனையை விட்டு விரட்டி விட்டு வேறு விதமாக சிற்றின்பத்தை நுகர்ந்து வந்தவர். மனைவிமாரும் பிள்ளைகளும் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து பிழைப்பு தேவைகட்காக ஒவ்வொருவரும் தங்கள் ஒருவருக்கு ரூபாய் 250 வீதம் தொகை பெற்று வாழ்ந்து வந்தனர்.

இவர்களுள் மூத்தவருக்கு ஒரு மகன் உண்டு, இவரும் இவர் மனைவியும் மறைந்தனர். சிறுவனுக்கும் பாட்டிக்கும் சிற்றப்பன்மார்கள் உதவியாக இருந்தனர். தந்தையை விட்டுப் பிரிந்து விட்டதனால்தான் இருவரும் உயர்கல்வி பெற்று வழக்குரைஞர்களாக வர முடிந்தது. பிரசன்னா செய்ய வேங்கடாசலதுரை, அவர் தாயார், அண்ணன் மகன் சிறுவன் இவர்கள் திருச்சியில் வாழ்ந்து வந்தனர். ஆசான் கல்லூரியில் சேர்ந்ததும் குல சங்கத்திற்கு சான்றிதழுடன் விண்ணப்பம் அனுப்பினார். அஃது ஏற்கப்பட்டு மாதம் ஒன்றுக்கு பத்து ரூபாய் வீதம் வழங்கப்பட்டது.

இரண்டாவது ஆண்டு அதை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஆசானுக்கு குல சங்கத்திலிருந்து கடிதம் வந்தது. அந்த காலத்தில் ஆசானுக்கு அது பேருதவியாக அமைந்தது. ஆண்டு ஒன்றுக்கு கல்லூரி கட்டணம் 90 ரூபாய். அதையும் குல சங்கம் தான் அளித்தது. இவ்வாறாக இரண்டு ஆண்டுகள் அத்தொகையைப் பெற்றார் ஆசான். திருமணத்திற்கு பின்பு இரண்டு வருடங்கள் படிப்பும், ஒரு வருடம் ஆசிரியர் பயிற்சி வகுப்பு பயின்றார். பட்டம் பெற வேண்டும் என்ற அவா மனதிற்குள் இருப்பின் இல்லற வாழ்வு கல்விக்கு தடையாக இருக்காது என்பதற்கு ஆசான் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக

விளங்கினார். ஆசானின் இளங்கலை முதல்வரான ஜெரோம் சாமியாரின் சிறப்புகளை ஆசான் அடிக்கடி கூறுவதுண்டு. ஆசானின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு ஜெரோம் சாமியார் ஆசானுக்கு உதவி புரிந்தார்.

பட்டப்படிப்பு முதலாம் ஆண்டு கல்லூரியில் சேர்ந்ததும் ஆசான் மாணவர் படையில் சேர்ந்து பல பயிற்சிகளைப் பெற்றார். சென்னையை அடுத்த பல்லாவரத்தில் பயிற்சி முகாம் சென்று 20 நாட்கள் அங்கேயே தங்கி கடுமையான பயிற்சிகளை பெற்றார். ஆசான் படித்து முடித்ததும் அவருக்கு துறையூரில் ஒரு நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. விருத்தாச்சலம் என்னும் அறைத் தோழன் வாங்கி வந்த புத்தகங்களை விடுமுறை நாட்களில் ஆசான் கற்றுத்தேர்ந்தார். ஆசானின் நண்பரான விருத்தாச்சலம் வழக்கறிஞராக இருந்து குற்றம் பற்றிய வழக்குகளில் மட்டுமே கவனம் செலுத்தி வந்தார். எத்தனையோ தூக்கு தண்டனைகளை ஆயுள் தண்டனைகளாக மாற்றிய பெருமை இவருக்கு உண்டு. சூசையப்பர் கல்லூரியில் மாணவர் விடுதியில் காவலர் அடாவடித்தனமாக நடந்து கொண்ட வழக்கு பற்றி எல்லோரும் அறிவார். இது நாடறிந்த பெரிய வழக்காக மாறி பல மாதங்கள் நடந்தது.

பழைய மாணவர் என்று கருதி புனித சூசையப்பர் கல்லூரி நிர்வாகம் அந்த வழக்கை நடத்தும் பொறுப்பை இவரிடம் தந்தது. மிகத் திறமையாக நடத்தி வெற்றி பெற்றார். அறிஞர்கள் அதிசயிக்கத்தக்க நிலையில் வாதிட்டார் விருத்தாச்சலம். முதல்வர் இவருடைய திறமையை மெச்சி தொகை போடாமல் ஒரு காசோலையை இவரிடம் தந்து விருப்பமான தொகையை போட்டுக் கொள்ளும்படி பணித்தார். சாதாரணமாக அவருக்கு குறைந்தது 25 ஆயிரம் தரலாம். ஆனால் முதல்வரை நோக்கி நான் பழைய மாணவன். இக்கல்லூரியில் படித்தமையால்தான் பல திறன்கள் பெரும் வாய்ப்புகள் கிடைத்தன. ஆகவே என் உழைப்பு இந்த கல்லூரிக்கு அன்பளிப்பாக இருக்கட்டும். பழைய மாணவர் ஒருவர் இங்கு இப்போது பயிலும் மாணவர்களுக்காக பாடுபட்டார் என்று வரலாறு கூறட்டும் என்று தன் உழைப்புக்காக பெற வேண்டிய ஊதியத்தை பெற மறுத்துவிட்டார்.

ஆசான் தனது கல்லூரி வாழ்க்கையில் நூலகத்தை நன்றாக பயன்படுத்திக் கொண்டார். 15 நாட்களுக்கு ஒரு முறை மூன்று நூல்கள் வீதம் தொடர்ந்து பெற்று படிக்கும் பழக்கத்தை கொண்டிருந்தார். திருச்சியில் உள்ள நூலகத்திற்கு சென்று சில இலக்கிய நூல்களையும் பொது அறிவு நூல்களையும் படிப்பார்.

சேலம், கோவை மாவட்டங்களில் சித்திரை வைகாசி மாதங்களில் மாரியம்மன் திருவிழாக்கள் கண்கொள்ளாக் காட்சிகளாக இருக்கும். வறண்ட பகுதிகளில் இந்த அம்மனுக்கு வழிபாடுகள் அதிகம் இருக்கும். திருவிழாக்களும் சிறப்பாக இருக்கும். மாரியம்மன் அருளால் தான் மழை பெய்தது.

உழவர் பெருமக்கள் அதிராத நம்பிக்கையுள்ளவர்கள் என ஆசான் அவ்வப்போது சொல்லுவார். ஆசான் இளங்கலை தேர்வில் முதல் வகுப்பில் கல்லூரியில் முதல் மாணவராகவும், பல்கலைக்கழக நிலையில் மூன்றாவது மாணவராகவும் தேர்ச்சி பெற்றிருந்தார். அக்காலத்திலும் நாட்டில் வேலை கிடைப்பது குதிரைக்கொம்பாய் இருந்தது. ஆசான் வேலைக்காக பல இடங்களில் விண்ணப்பங்களை அனுப்பி தொடர்ந்து முயன்று கொண்டிருந்தார். ஆனால் எங்கும் வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. இருப்பூர்தித் துறையில் விடுவிக்கும் பயணச் சீட்டு திரட்டுபவர் பதவிக்கு விண்ணப்பித்தார். அக்காலத்தில் அப்பணிக்கு 40 ரூபாய் சம்பளமாக இருந்தது. நந்தி ரெட்டி என்ற ஒரு அதிகாரியை ஆசான் சந்தித்தார். ஆனால் வேலை கிடைக்கவில்லை. ஆசான் தனது கல்லூரி செலவிற்காக ரூபாய் 700க்கு நிலத்தை விற்றார். அப்பணத்தை அஞ்சல் நிலையம் கணக்கில் போட்டு வைத்தார். பிறரது கையை எதிர்பார்க்காமல் படிப்பு யாதொரு தடையும் இன்றி செல்வதற்கு அப்பணம் உதவியது. ஆசானின் படிப்பு நிறைவு பெறுவதற்குள் ஆசானின் நிலத்தை வாங்கியவர்கள் ஆறு மாதத்திற்குள் ரூபாய் 1500க்கு அதனை விற்று விட்டதை ஆசான் அறிந்தார்.

ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் ஆசான் சேர்ந்தார். அந்நாளில் சைதையிலுள்ள ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரியில் இடம் கிடைப்பது சற்று கடினம். கேரளம், ஆந்திரம், கர்நாடகம் என்ற பகுதியுள்ளவர்களுக்கும் சென்னைதான் புகலிடம். பேராசிரியருக்கு தகுதி அடிப்படையிலேயே இடம் கிடைத்தது. ஆசான் அந்நாளை தன் நல்வினைப்பேறாக எண்ணி மகிழ்ந்தார்.

பயிற்சிக் கல்லூரியின் உளவியல் பேராசிரியர் குருசாமி ரெட்டியாரிடம் பெற்ற அநுபவத்தினை ஆசான் நினைந்து மகிழ்கின்றார்:

> “பேராசிரியர் குருசாமி ரெட்டியாரின் வகுப்புதான் அற்புதமாக இருக்கும். இருநூறு மாணாக்கர்கள் அடங்கிய வகுப்பை அற்புதமாகக் கையாளுவார். வகுப்பிற்கு வருங்கால் இவர் உதவியாள் இருபதிற்குக் குறையாமல் நூல்களை மேசைமீது கொண்டுவந்து வைப்பான். ஒவ்வொரு நூலின் பெயர், அதனை இயற்றிய ஆசிரியரின் பெயர் கூறி அந்த நூலின் உள்ளுறையை (Contents) மாற்றி மாற்றிப் படிப்பார். இவர் செய்கையை கூர்ந்து கவனித்தால் இந்த நூல்களின் துணை கொண்டுதான் கல்வி

> உளவியல் பாடத்திட்டத்தை வகுத்தனர் என்பதை விளக்குவது புலனாகும். இடை இடையே பாடத்திட்டத்திலுள்ள பல கருத்துகளை மின்வெட்டு போல் ஒளி காட்டி விளக்குவார். நடந்து கொள்ளும் முறையை உன்னிப்பாகக் கவனித்தால் கல்விஉளவியல் பற்றிய கருத்துக் களஞ்சியத்தை நன்கு பெறலாம்."

இவரது கல்வித்தகுதியையும், திறமையையும் வியந்து நோக்கி துறையூரில், விஜய வேங்கடாசல துரை மற்றும் முத்து வேங்கடாசல துரை ஆகியோர்களால் தொடங்கப்பெற்று இருந்த ஜமீந்தார் நடுநிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் பணி ஆசானுக்கு வழங்கப்பெற்றது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் தேர்வுகள் முடிவுற்ற அடுத்த மாதமே (1 ஜூன் 1941) தலைமையாசிரியர் பணியில் ஆசான் சேர்ந்தார். 1941ல் தொடங்கிய கல்விப்பணி ஆசானின் வாழ்நாள் முழுதும் தொடர்ந்தது.

(😊)(😊)(😊)(😊)(😊)







தலைமையாசிரியர்

முன்னமேயே நிறுவப்பெற்று இருக்கும் ஒரு துறையில் அல்லது ஒரு நிறுவனத்தில் சேர்ந்து அதை திறமையாக நடத்தி அதை மேம்படுத்துவதென்பது ஓர் இயல்பான செயல். ஆனால், ஆசான் பணியில் சேர்ந்த மூன்று இடங்களிலும் (பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம்), இவர்தான் முதன் முதலில் சேர்ந்து தொடங்குகின்றார். அனைத்துமே சவால்களாகவும், புதிய அநுபவங்களாகவும் அமைந்தன. பள்ளியில் பெற்ற அநுபவத்தினை பின்புலமாக வைத்து கல்லூரியிலும், கல்லூரியில் பெற்ற அநுபவத்தினை பின்புலமாக வைத்து பல்கலைக் கழகத்திலும் திறமையாக பணியாற்றிய பாங்கு சிறப்புமிக்கது. நிறுவனங்களில் 36 ஆண்டுகள் பணியாற்றிய அநுபவம், பல்வேறு நிறுவனங்கள் மற்றும் சான்றோர்களின் தொடர்பு ஆகியவைகளின் துணைக்கொண்டு, ஓய்வுக்குப் பின்னரும் 29 ஆண்டுகள் ஆசானின் கல்வி மற்றும் தமிழ்ப்பணி தொடர்ந்தன.

பல்வேறு இடங்களில், பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றிய நாட்களில் ஒரு நாள் கூட பணியில் இடைவெளி இல்லாதிருந்தது வியக்கத்தக்கதொன்று: தலைமையாசிரியாக 4.7.1950அன்று துறையூரிலிருந்து விடைபெற்று, 5.7.1950அன்று காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி பொறுப்பில் சேர்தல், பேராசிரியராக 31.7.1960அன்று காரைக்குடியிலிருந்து விடைபெற்று, 1.8.1960அன்று திருப்பதியிலுள்ள திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் பணியில் சேர்தல். 1.6.1941முதல் 25.10.1977வரை (36 அண்டுகள்) பணியாற்றிய காலத்தில் ஒரு நாள் கூட பணி இடைவெளி இல்லாது பணியாற்றியது ஆசானின் சிறப்புகளில் குறிப்பிடத்தக்கதொன்று.

இறைவன் அருளால் புதுப்பள்ளிக்கு தலைமை ஆசிரியர் பொறுப்பும் ஆசானை வந்து சேர்ந்தது. ஜூன் ஒன்றாம் தேதி பணியில் சேர்ந்தார்.

திருமணம் ஆகி, ஐந்து அண்டுகள் சென்று விட்டன. இதுகாறும் தனிக் குடும்பம் நடத்திய பழக்கம் இல்லை. உணவு விடுதிகளில் உணவு, மாமனார் வீட்டு உணவு என்ற முறையில் தான்

ஆசானின் வாழ்க்கை பொறுப்பற்ற முறையில் நடைபெற்று வந்தது. துறையூர் பள்ளியின் வடபுரமுள்ள பகுதியில் உள்ள இரண்டு அறைகள் குடும்பம் நடத்துவதற்கேற்றவாறு பிரிவு செய்யப்பெற்று இருந்தன. இந்த இரண்டு அறையை பின்புறமாகத் தாழ்வாரம் இறக்கிக் குளியலறையும், விறகு வைக்கும் இடமும் அமைந்திருந்தன.

நிர்வாகம் அப்போதைய பள்ளிக் கட்டடத்திற்கு எதிரில், துறையூர்-திருச்சி நெடுஞ்சாலைக்குக் கீழ்ப்புறமாகப் பத்து ஏக்கர் நிலம் வாங்கியது. எதிர்காலத்தில் பள்ளியின் பன்முக வளர்ச்சிக்கு இதுபோதும் என்ற மனநிறைவினைத் தந்தது. யாரோ ஒருவரின் உதவியால் நிலம் விற்கும் உளவு தெரிந்து பத்து ஏக்கர் நிலம் குறைந்த விலைக்கு வாங்கப்பெற்றுவிட்டது. இது பள்ளி முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியாக இருந்தது.

அந்நாளில் திருச்சி மாவட்டத்தில் தமிழ்படித்த - வித்துவான் பட்டம் பெற்ற - தலைமையாசிரியர் ஆசான் ஒருவரே எனும் சிறப்பையும் பெற்றுள்ளார். துறையூர் ஜமீன்தார் உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றியபோது பள்ளி மேம்பாட்டுக்காக மிகவும் கடினமாக உழைத்தார் ஆசான். மாணாக்கர் நலனுக்காக மனமாரப் பணியாற்றினார். தலைமையாசிரியராகப் பெறுப்பேற்றுப் பணிபுரிந்த காலத்தில் ஆசான் அடைந்த இன்னல்களும், இடர்ப்பாடுகளும் “விரிப்பின் நீளும், தொகுப்பின் மிஞ்சும்” என்ற முறையிலேயே அமைந்தது. “மடி நிறையப் பொருளும், மனம் நிறைய இருளும்” படைத்தவர்களால் தொடங்கப் பெற்ற பள்ளியில் பல பிரச்சனைகளை சமாளித்து திறம்பட செயல்பட்டார்.

பொதுவாக ஆசிரியர்கள் சிறந்த நிர்வாகிகளாக இருப்பதில்லை; நிர்வாகிகள் சிறந்த ஆசிரியர்களாக இருப்பதில்லை. இஃது உலகில் நாம் நாள்தோறும் காணும் நடைமுறையாகும். ஆனால், ஆசானவர்கள் இரண்டிலும் சிறந்து செயல்பட்டார். பள்ளி ஆசிரியர்கள் நியமனம், பள்ளிக் கணக்கு வைப்புமுறை, மாணவர்களிடமிருந்து கட்டணம் தண்டலுக்கான ஏற்பாடு, மேலிடங்களிலிருந்து வரும் கடிதங்களுக்கு மறுமொழி அனுப்புதல், வகுப்புகளுக்கு இடவசதி செய்தல், பள்ளி நூலக மேம்பாடு, கற்பிப்புச் சாதனங்களை வாங்குதல், வகுப்புகளுக்குத் தேவையான அறைகளை வசதி செய்தல் ஆகியன ஆசானின் சிறந்த நிர்வாகத்திறனை எடுத்துக் காட்டுவனவாகும்.

அல்லும் பகலும் பள்ளி முன்னேற்றத்திலேயே சிந்தித்துக் கொண்டிருக்கும் போது தன்னுடைய சொந்த வளர்ச்சியிலும் கவனம் செலுத்தவேண்டியதாயிற்று. அந்த காலத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிகள், மாவட்ட கழக (District Board) ஆட்சியின் கீழ் உள்ள பள்ளிகள்

இவற்றில் பணியாற்றும் தலைமையாசிரியர்கள் வரவு-செலவு கணக்கு பற்றிய தேர்வில் (Account Test for Subordinate Officers-Part I) வெற்றியடைந்திருக்க வேண்டும் என்ற விதி இருந்ததைக் கேள்வியுற்றார் ஆசான். மாவட்ட கழக உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் தலைமையாசிரியர்கள் இத்தேர்வு பற்றிக் கவலை கொள்வதில்லை. தனியார் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் தலைமையாசிரியர்கள் பெரும்பாலோருக்கு இப்படி ஒரு தேர்வு உண்டா என்று கூடச் சிந்திப்பதில்லை. ஆசான் இத்தேர்வு எழுதி வெற்றியடைந்தார்.

முசிறிக் கழக உயர்நிலைப் பள்ளியைத் தவிர துறையூரைச் சுற்றிலுமுள்ள ஊர்களில் வேறு உயர்நிலைப் பள்ளிகள் இல்லாமையால், எல்லோரும் துறையூர்ப் பள்ளியையே நாட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 4 கல் தொலைவிலுள்ளவர்கள் கூட நடந்தோ, மிதிவண்டியிலோ வந்து சேர்ந்து பயின்றனர். அக்காலத்தில் சில ஊர்களை இணைக்கும் பாதைகள் சரியாக இல்லை. மழைக்காலத்தில் மிதிவண்டிகள் செல்ல முடியாத நிலை. இவ்வூர்களிலிருந்து வரும் மாணவர்கட்குத் தங்க இடமும் உணவு வசதியும் இருந்தால் நலம் என்று ஆசான் உணர்ந்தார். அந்தந்த ஊர்களிலுள்ள பெற்றோர்களும் இதை உணர்ந்தனர். ஆசானும், திரு.வி.சி.கிருஸ்ணசாமி ரெட்டியாரும் இதைப்பற்றிப் பல நாட்கள் யோசித்து "**மாணவர் இல்லம்**" ஒன்று தொடங்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர். பள்ளி நிர்வாகம் இதைப் பற்றிக் காதில் போட்டுக் கொள்வதே இல்லை. என்றாலும் தொடங்குவதற்கு இசைவு பெற்று ஆசான் மாணவர் இல்லம் தொடங்கப்பெற்றது.

சுதந்திரம் வந்தபிறகு திரு.தி.சு.அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்தபொழுது **குடிமைப் பயிற்சி முகாம்** என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பெற்றது. இதன் விவரங்கள் எல்லா உயர்நிலைப் பள்ளிகட்கும் அனுப்பப்பெற்றன. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் இத்திட்டம் பற்றிய பயிற்சிகள் பயிற்சிபெறும் ஆசிரியர்கட்குத் தரப்பெற்றன. பள்ளியில் மாணாக்கர்கட்கு இப்பயிற்சி தருவதைவிட பள்ளிக்கு வெளியே இது தரப்பெற்றால் சிறக்கும் என்று ஆசான் கருதினார். ஆசானின் தீவிர முயற்சியால் 1948ல் குடிமைப் பயிற்சி முகாம் வைரிசெட்டிப் பாளையத்தில் நடைபெற்றது.

விதிக்கு புறம்பான தன்மையில் பள்ளி நிருவாகத்துடன் பெரிதும் இணங்கி தம்முடைய சொந்த வசதிகளைப் பெருக்கிக் கொண்டு "சிவனே" என்று ஆசான் தம் வாழ் நாளைக் கழிக்காமல், தம்முடைய பணி தலைமையாசிரியர்கென விதிமுறைகளில் வரையறுக்கப்பட்ட பணிகளுடன் முடிவடைவதாக அவர் கருதாது பள்ளியின் முன்னேற்றத்திற்காக எல்லா வகைகளிலும் பாடுபட்டார். தரத்திலும், அளவிலும் பள்ளியை

மேம்படுத்தினார். பள்ளியில் "**மாணவர் இலக்கியக் கழகம்**" எனும் அமைப்பினை நிறுவி வழக்கமாக கூட்டங்களை மட்டுமின்றி, பெருமக்கள் பலரையும் வரவழைத்து மாணவர்களுக்குப் பல இலக்கியங்களையும் அறிமுகம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். துறையூரிலும் அண்மையில் உள்ள ஊர்களிலும் செல்வாக்கு வாய்ந்த பெருமக்கள் உதவியுடன் தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள் நடத்துவதை பேராசிரியர் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அன்புள்ளமும், செயல் திறனும் இணையும் போது பயன்மிகு விளைவுகள் ஏற்படும் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். ஏழை மாணவர் நிலைக்கு இரங்கி காலம் தாழ்ந்த நிலையில் முன் தேதியிட்டுக் கட்டணம் பெற்றமை, அரசு விதிகளின்படிக் கட்டணச் சலுகைக்குத் தகுதியற்ற பரமஏழை மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை ஏற்பாடு, துறையூரிலும் சுற்றுப்புறச் சிற்றூர்களிலும் சாதி வேற்றுமை பாராமல் செல்வர்களை நாடி கட்டணச் சலுகைத் திட்டத்திற்கென நன்கொடை திரட்டியமை, முதல், இரண்டாவதாகத் தேறிய மாணவர்களுக்குப் பரிசுத் திட்டம், ஏற்படுத்தியமை, **"இளைஞர் அறிவுச் சுடர்"** கையெழுத்து இதழ் தொடங்கியமை, வீட்டில் இடவசதியற்ற ஏழை மாணவர்களுக்கு இரவில் படிப்பதற்காகப் பள்ளியில் மின்விளக்கு வசதியுடன் இடவசதி ஏற்பாடு செய்தமை, பள்ளியில் பயிலும் மாணவர்கள் அனைவருமே தம் குழந்தைகள் எனக்கொண்டு இரவு நேரத்திலும் மாணவர் தம் ஐயங்களைப் போக்கி அவர்களை நன்கு படிக்க வைத்தமை, நன்கொடை திரட்டி சமையல் பாத்திரங்கள் வாங்கித் தக்க பணியாளர்களைக் கொண்டு விடுதிக்கட்டணம் திங்கள் ஒன்றுக்கு ரூ.10க்கு மேற்படாத வகையில் மாணவர்களுக்கு உணவும் உறையுளும் அளித்தமை ஆகியன ஆசான் அவர்களின் அன்புள்ளத்தின் அடிப்படையில் விளைந்த அருஞ்செயல்கள்.

உலகம் சிலர் எவரோடும் கலந்து பழகாமல் தனியராக வாழ்ந்து வருவதனைக் காண்கிறோம். அவர்கள் இணைப்புப் பாலங்களைக் கட்டிக் கொள்ளாமல் தங்களைச் சுற்றித் தடுப்புச் சுவர்களைக் கட்டிக் கொள்வதே அதற்கு காரணமாகும். ஆசான் அவர்கள் துறையூரில் பணியாற்றிய போது சுற்றுப்புற ஊர்களிலுள்ள மக்களுடன் நன்கு பழகியவர். திருமணம், இறப்பு நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொள்வார். சாதி, சமய வேற்றுமையின்றி அனைவரிடமும் பழகினார். இதனால் பள்ளி வளர்ச்சிக்கும் மாணவர் நலனுக்கும் பொது மக்களின் ஒத்துழைப்பினை அவரால் பெற முடிந்தது. உள்ளூரில் செல்வாக்கு வாய்ந்த பெருமக்கள் உதவியுடன் பள்ளியில் இலக்கியச் சொற்பொழிவுகளை நடத்தினார்.

சிறுதிறப்பட்ட நேர்வுகளில் கூட அநீதியை எதிர்த்து குரல் கொடுக்க மனமில்லாமை, அடுத்தவர்கள் மனம் புண்படக்கூடாது என்ற எண்ணம் அல்லது இடையூறு ஏற்படும் என்ற அச்சம் ஆகியன மெல்ல மெல்ல ஒருவருடைய நேர்மையுணர்வினை அழித்து அதன்மூலம் நம்முடைய சமுதாயத்தையே பொய்யர்கள் நிறைந்த கூட்டமாக மாற்றி வரும் நிலைமையினைக் காண்கின்றோம். ஆனால் ஆசான் அவர்கள் தம் சொந்த எண்ணத்தில் எழுபவை பெரும்பாலும் சரியாக இருக்கும் என்பதில் நம்பிக்கையுடையவர். துணிவையே துணையாகக் கொண்டவர்.

"வக்கற்றவனுக்கு வாத்தி தொழில்" என்பது உலக மொழியாயினும், "அன்புடைய மனைவி இறுதிவரை கணவனே தெய்வம் என்று வாழ்வதைப் போன்று" ஆசான் அவர்களும் தாம் மேற்கொண்ட பணியைத் தெய்வப் பணியாகக் கருதி ஓய்வுபெறும் வரையில் அதே ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்தார். குறைந்த சம்பளத்திலும், இடர்ப்பாடுகள் நிறைந்த நிலையிலும் துறையூர்ப் பள்ளியில் அவர் தொடர்ந்து தலைமையாசிரியராகப் பணியாற்றியதற்கு அவர் பணியில் கொண்டிருந்த மன நிறைவுதான் காரணமாகும். இத்தகைய பணியலான மன நிறைவு யாவருக்கும் வாய்ப்பதில்லை. அதிகாரங்களோ உயர்ந்த சம்பளமோ, வேறு வகையிலாக ஆதாயங்களோ உண்மையான மன நிறைவினை அளிப்பதில்லை. அவையாவும் வெளித்தோற்றங்களே. இதனை அறிந்து வாழ்வோர் மிகச்சிலரே. தன் முயற்சி விளம்பரங்கள், வெற்றி ஆரவாரங்கள், ஈனச்செயல் புரிந்தேனும் தான் முந்தியிருப்பதற்கான ஏற்பாடுகள் போன்றவற்றில் முனைந்து "உள்ளமும் வாக்கும் புளியம் பழமும் ஓடும் போல" வாழ்வார் தொகை பெருகி வந்த அந்நாளில், ஆசான் அவர்கள் அமைதியான முறையில் கல்விப் பணிமூலம் அருந்தொண்டாற்றி வந்தது சிறப்புக்குரியதாகும்.

ஆசான் இயல்பாகவே அனைவரிடமும் அன்பாக பழகும் குணம் உடையவர். துறையூரிலிருந்த போது உள்ளூர் பொதுமக்களிடமும் சுற்றுப்புற சிற்றூர் பெரியவர்களிடமும் நன்றாக பேசிப் பழகுவார். இந்தப் பழக்கம் புதிய உயர்நிலைப் பள்ளியின் மேம்பாடு பற்றியதாகவே இருக்கும். அவர்கள் பிள்ளைகளின் கல்வி மேம்பாடு பற்றியே இருக்கும்.

ஆசான் துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணி புரியுங்கால் நான்காம் படிவத்தில் இருந்து பள்ளி இறுதி தேர்வு வரை ஆரம்ப கணிதமும், ஐந்து ஆறு படிவங்களில் இயற் கணிதமும், வடிவ கணிதமும், பள்ளி இறுதி தேர்வு மாணாக்கர்களுக்கு ஆங்கிலமும் கற்பித்தார். அப்போது இடைநிலை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பி.இடி.தேர்வு பெற்றவர்கள்

தமிழ் கற்பித்தனர். தமிழாசிரியர்கள் கற்பிக்கும் முறையை கவனிக்கும் வாய்ப்பு ஆசானுக்கு ஏற்பட்டது.

திருச்சி மாவட்ட தமிழாசிரியர்கள் ஒன்று கூடி “**திருச்சி மாவட்ட தமிழாசிரியர் கழகம்**” என்ற ஓர் அமைப்பினை ஏற்படுத்தினர். இக்கழகத்திற்கு ஆசான் தலைவராக நியமிக்கப்பெற்றார். மதுரைத் தமிழ்ச்சங்கம், சென்னை மாணவர் மன்றம் பள்ளியிறுதி மாணாக்கர்கட்கு பொதுத்தேர்வு நடத்தி வெற்றி பெற்றோர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவது போன்று, திருச்சி மாவட்ட தமிழாசிரியர் கழகமும் திருச்சி மாவட்ட மாணாக்கர்கட்கு தேர்வு நடத்தி சான்றிதழ்கள் வழங்கியது.

ஓரிரு ஆண்டுகள் “**உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டிகள்**” நடத்தப்பெற்றன. சரியான இடவசதி பள்ளியில் இல்லாததால் முதல் இரண்டு ஆண்டுகள் “**பள்ளி ஆண்டு விழா**” கொண்டாடப் பெறவில்லை. 1943-44ல் நடைபெற்ற மூன்றாம் ஆண்டு விழாவிற்கு தவத்திரு சித்பவானந்த அடிகள் தலைமை தாங்கினார். பேராசிரியர் துறையூரில் ஏற்பாடு செய்திருந்த “**திருச்சி மாவட்ட ஆசிரியர் மாநாட்டில்**” திரு அ மு பரமசிவாநந்தம் மற்றும் திரு அன்பு கணபதி ஆகியோர் கலந்து கொண்டனர். துறையூர், அதன் சுற்றுப்புற ஊர்களிலுள்ள உயர்நிலைப்பள்ளி, தொடக்க மேல்நிலைப்பள்ளி மற்றும் தொடக்கப்பள்ளி இவற்றின் ஆசிரியர்கள் ஒன்றுகூடி “**துறையூர் ஆசிரியர் கூட்டு இணைப்பு**” என்ற ஓர் அமைப்பினைத் தொடங்கி ஆசானை அதன் தலைவராக நியமித்தனர். 1948ல் இவ்விணைப்பால் திட்டமிடப்பெற்ற மாநாட்டிற்கு அக்காலத்தில் கல்வி அமைச்சராக இருந்த திரு தி சு அவிநாசிலிங்கம் செட்டியார் தலைமை ஏற்று சிறப்பு செய்தார். இம்மாநாட்டில் சுமார் 700க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அக்காலத்தில் பெரிசாமி தூரனை ஆசிரியராகக் கொண்டு கோவையிலிருந்து வெளிவந்த கால சக்கரம் என்ற திங்கள் இதழுக்கு தான் எழுதிய கட்டுரைகளை ஆசான் அனுப்பி வைத்தார். பத்து கட்டுரைகள் இந்த இதழில் வெளிவந்தன. அப்போது உயர்நிலை பள்ளியில் மாணவியாக இருந்த திருமதி சவுந்திரா கைலாசம் அம்மையார் இவற்றைப் படித்து அநுபவித்ததை அண்மையில் ஒரு சமயம் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது ஆசானிடம் தெரிவித்தார்கள். வெளிவந்த 10 கட்டுரைகளையும் வெளிவர இருந்த 15 கட்டுரைகளையும் தொகுத்து “***கவிஞன் உள்ளம்***” என்ற பெயரில் ஒரு நூலாக வெளியிட்டார் (சனவரி 1949). இது தான் ஆசானின் முதல் வெளியீடு : கன்னி வெளியீடு.

திருமணமாகி பத்து ஆண்டுகள் ஆகியும் குழந்தைப்பேறு இல்லாதது கண்டு, பேராசிரியரின் அன்னையார் மிகவும் கவலையுற்றார். அன்னையின் அறிவுறுத்தலால், ஒரு திருத்தலப்பயணத்தை 1948 கோடை விடுமுறையில் மேற்கொள்ள ஆசான் முடிவெடுத்து ஒரு திட்டத்தினை உருவாக்கினார். குடும்ப நண்பராகவும், தமிழறிஞராகவும் இருந்த திரு கே.எஸ்.முத்துவேல் பிள்ளையவர்களின் ஆலோசனையின் பேரில் இராமேஸ்வரம், மதுரை (திருப்பரங்குன்றம், அழகர்கோயில்), திருநெல்வேலி (குறுக்குத்துறை, நெல்லையப்பர் கோயில்), ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, திருச்செந்தூர், வானமாமலை, கன்னியாகுமரி, சுசிந்திரம், நாகர்கோயில், திருவனந்தபுரம், கோயம்புத்தூர் (பேரூர்), பழநி, திருவண்ணாமலை, திருப்பதி, திருத்தணி, சென்னை, ஸ்ரீரங்கம் என்ற வரிசைமுறையில், ஆசான் 40 நாட்கள் தலச்சேவையை மேற்கொண்டு வெற்றிகரமாக நிறைவேற்றினார். 40 நாட்கள் கடை உணவு உட்கொண்டால் உடல்நலம் கெடும் என்று கருதி தேவையான அரிசி, பருப்பு முதலிய மளிகைப் பொருட்களை எடுத்துக் கொண்டு, நண்பர்கள், உறவினர்கள் என 11 பேர் கொண்ட குழு தலச்சேவையை மேற்கொண்டது. இறையருளால் ஆசானுக்கு 1949ல் முதல் மகனும் 1953ல் இரண்டாம் மகனும் பிறந்தனர்.

ஆசானின் மைத்துனர் இரண்டாம் திருமணம் செய்தபின்பு சில பல சிக்கல்கள் ஏற்பட்டன. அவைகள் சரியான முறையில் தீர்க்கப்பெறாமையால், நீதிமன்ற வழக்குகளாக மாறின. வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்குங்கால், அவைகளை சுமூகமாக முடித்துவைக்க ஆசான் எடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. ஆசானின் துணைவியின் அன்னையார் தன் புதல்வியுடனேயே வாழ்ந்து வந்தார். நீதிமன்ற முடிவுகள் ஆசானின் மாமியாருக்கு சாதகமாக வந்தன. நீதிமன்ற தீர்ப்புகள் சுமார் பத்தாண்டுகள் அமலில் இருந்தன. பத்தாண்டுகள் முடிந்த நிலையில், குடும்பத்தினர் சமாதானமாகி ஒன்று சேர்ந்து வாழ்ந்து வந்தனர்.

கம்பன் அடிப்பொடி சா கணேசன் அவர்களின் அழைப்பிற்கிணங்கி காரைக்குடியில் வள்ளல் அழகப்பச் செட்டியார் தொடங்கியிருந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராக 5.7.1950ல் சேர்ந்தார். சுமார் 9 ஆண்டு (1941-1950) கால கல்விப்பணி (தலைமையாசிரியராக) நிறைவுற்றது.

(😊)(😊)(😊)(😊)(😊)



பேராசிரியர்

ஆசானின் உயர்கல்விப் பணிக்குப் "பிள்ளையார் சுழி" போட்டவர் கம்பன் அடிப்பொடி சா கணேசன் அவர்கள். துறையூரில் தலைமையாசிரியர் பதவியிலிருந்து விலகி, ஆசான் காரைக்குடியில் அழகப்பச்செட்டியார் பயிற்சிக் கல்லூரியில் சேர்கின்றார். காரைக்குடி கவின்மிகு நகர். கற்றோரைப் போற்றும் நகர். கம்பனுக்கு விழா எடுக்கும் நகர். செல்வர்கள் பலர் சிறப்போடு வாழும் திருநகர். சொ முருகப்பாவும், இராய சொக்கலிங்கமும், கம்பன் அடிப்பொடி கணேசனும், கண்ணதாசனும் வாழ்ந்த நகர். பல பத்திரிக்கை ஆசிரியர்களை உருவாக்கிய நகர். நாடெங்கும் நற்பணிகள் பல செய்யும் நகரத்தார்கள் வாழும் நன்னகர். ஆசானின் வாழ்வில் சிறந்த பகுதியாகிய காரைக்குடி வாழ்வு திகழ்கின்றது. இத்தகைய சீரிய காரைக்குடியில் பணி புரிந்தமையையும், வாழ்ந்தமையையும் ஆசான் தம் வாழ்க்கையின் பெரும் திருப்புமுனையாக எண்ணி மகிழ்கின்றார்.

வள்ளல் அழகப்பர் தொடங்கிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதல் முதலாகச் செயல்பட்ட தனியார் கல்லூரிகளில் முதன்மையானது. இட நெருக்கடியுடன் அறிவியல் கட்டடத்தில் செயற்பட்ட அழகப்பர் ஆசிரியர் கல்லூரி தமிழகத்தில் முதல் முதலாகச் செயற்பட்ட தனியார் கல்லூரியில் முதலாவது, முன்மையானது. பின்னர் தொடங்கப்பெற்ற அரசினர் கல்லூரிகள் எல்லாம் இதன் தகுதியை எப்பொழுதும் பெறவில்லை. வள்ளல் அழகப்பரின் கவனம் ஆசிரியர் நியமனத்திலும் சென்றது. நாட்டில் திறமையான ஆசிரியர்களையெல்லாம் தம் கல்லூரிகளில் சேர்த்து விட வேண்டும் என்று அவர் நல்லுள்ளம் விழைந்தது. பயிற்சிக் கல்லூரி திறக்கப்பெற்ற ஆண்டே நாற்பது பேர் தங்கக் கூடிய உணவு விடுதியும் திறக்க ஏற்பாடு செய்யப் பெற்றது. காரைக்குடிச் சிவன் கோயில் அருகிலிருக்கும் மீனாட்சிசுந்தரேசுவரர் பள்ளிக்குச் சொந்தமான அமிர்தவல்லி உணவு விடுதிக் கட்டடம் பல ஆண்டுகள் மூடிக் கிடந்தது. இதனை கல்லூரி உணவு விடுதிக்குப் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்யப்பெற்றது.

விரைவில் குடும்பத்தைக் காரைக்குடி கொணர வேண்டும் என்று துறையூரில் சில ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. ஒரு வாரம் "வீடு தேடும் படலம்". காரைக்குடியில் தொடர்ந்து இருபது நாட்களுக்குள் வீடு கிடைத்தது. ரூ.38/- வாடகை பேசி ஆசான் முன் பணமும் கொடுத்துவிட்டார். வீட்டுக்கு உரிமையாளர் திரு சு ராம கிருஷ்ணப்ப செட்டியார் மிக நல்லவர். பொதுவாக தன வைசிய இளைஞர்கள், பெரியவர்கள் புதியவர்களுடன் மிக அன்பாகப் பழகி வேண்டிய உதவிகளைச் செய்வது அவர்களின் தனிச்சிறப்பு - உயரியபண்பு. நல்ல நாள் பார்த்து பால் காய்ச்சப்பெற்றது. வீடு புதிதாகக் கட்டப்பெற்றிருந்த வீடு, சந்துக்குள் இருந்தாலும் எல்லா வசதிகளுடன் அமைந்திருந்தது. ஒரு நல்ல நாள் பார்த்து அன்று குடும்பத்தையும் சாமான்களையும் கொணர்வது என்று நாளும் உறுதியாயிற்று.

இறையருளாலும், அன்னையாரின் விடாமுயற்சியாலும், ஆசான் BSc., LT., (Licentiate of Teaching) திறம்பட கற்றுத்தேரினார். தமிழின்பால் உள்ள ஆர்வத்தினால், ஆசான் தன் கல்வியை மேலும் தொடர எண்ணினார். தான் பெற்ற இளங்கலை (வேதியியல்) பட்டத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு தமிழ் முதுகலை (MA) பயில முயன்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் அப்போதைய நெறிமுறைகள் உதவாமையால், ஆசான் தமது சொந்த வழியைக் கையாண்டார். தனியாக வித்துவான் (தமிழ்-1944), இளங்கலை தமிழ் (BA-1947), முதுகலை தமிழ் (MA-1951) முதலிய பட்டங்களை ஆசான் தனது அரிய முயற்சியால் பெற்றார்.

எதுமலை என்னும் சிற்றூர் காவிரியின் வடபால் திருச்சியிலிருந்து இருபது கல் தொலைவிலுள்ளது. அந்த ஊரில் காமாட்சியம்மன்-கறுப்பண்ண சுவாமி-தங்கை அண்ணன் முறையில் -எழுந்தருளியுள்ளனர். இப்போது திருச்சியிலிருந்து பேருந்து வசதி உண்டு. 1952-இல் இந்த வசதி இல்லை. ஆசானது குடும்பத்தில் முதல் மகனுக்கு இத்திருக்கோயிலில் முடி இருக்கும் வழக்கம் வழி வழியாக வந்து கொண்டுள்ளது.

குறிப்பிட்ட நாளில் செட்டிக்குளம் வந்து, ஆசானும் மனைவியுடனும் குழந்தைகளுடன் மாட்டு வண்டியில் தோப்பை அடைந்தனர். ஆசானது அம்மான், சிற்றப்பா முறையிலுள்ள நெருங்கின உறவினர் (ஆசானின் தாயாரைப் பெற்ற பாட்டி குடும்பத்தைச் சேர்ந்தவர்) வந்தார்கள். மூத்த புதல்வனுக்கு கிராப்புத் தலை. இளைய புதல்வனுக்குத் தலைவாரி இரண்டு சடைகள் போட்டு ஆரஞ்சு வண்ண நாடாக்கள் சூட்டப்பெற்றிருந்தன. இருவருக்கும் தோப்பில் முடி இறக்கப் பெற்றது. இளைய புதல்வன் முடி துறந்த இளவரசன் போல் திகழ்ந்தான். வெந்நீரால் இருவரையும் குளிப்பாட்டினர். ஆசானின் மனைவி, குழந்தைகள், ஆசானின் தாய் மாமன், சிற்றப்பா, தியாகராஜ ரெட்டியார், அவர் தந்தையார், ஆசானின் தாயார் இவர்களுடன்

ஆசான் மலைக்குப் புறப்பட்டார். கோட்டாத்தூரிலிருந்து குதிரை வண்டியில் வந்திருந்த நல்லப்பரெட்டியாரும் மலைக்கு வந்தார். ஆசானின் தம்பி துணைவியுடன் வந்திருந்தார். இருவரும் மலைக்கு வந்தனர். சின்ன மலை தான். குழந்தைகளால் ஏற முடி வில்லை. தூக்கிக்கொண்டார்கள். முருகனை அருச்சனை செய்து வழிபட்டார்கள். வெள்ளிக்காவடியை முருகன் திருவடியில் வைத்து வணங்கினான் மூத்த புதல்வன். சுமார் முற்பகல் 11.30க்குக் கீழே இறங்கிவிட்டார்கள். இறங்கும் போது ஆசான் இளைய புதல்வனைக் தூக்கிக்கொண்டார். தியாகராசரெட்டியார் மூத்த புதல்வனை தூக்கிக் கொண்டார்.

புதிதாக தொடங்கப்பெற்ற கல்லூரியாதலால், நூலகத்தை அமைக்கும் பொறுப்பு ஆசானிடம் ஒப்படைக்கப்பெற்றது. ஆசான் ஒரு தனித்தன்மை வாய்ந்த திட்டத்தினை வகுத்துக்கொண்டு பணியைத் தொடங்கினார். பதிப்பு நிறுவனங்களிடமிருந்து விலைப்பட்டியலை வரவழைத்த பின்னர், ஆங்கில நூல்கள், தமிழ், அறிவியல், கணிதம், கல்வி உளவியல், தமிழ் இலக்கிய, இலக்கண நூல்கள், கலைக்களஞ்சியங்கள், இருபதாம் நூற்றாண்டின் தமிழ் நூல்கள், தொடக்க நிலை, உயர் நிலை, கல்லூரி-பல்கலைக் கழக மட்ட நிலைகளில் வெளியிடப்பெற்ற அறிக்கைகள், முக்கியமான வார, திங்கள், பிறை முதலிய சஞ்சிகைகள், நாளிதழ்கள் முதலியவற்றை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து அவைகளை நூலகத்திற்கு வாங்குதலில் ஆசான் கவனம் செலுத்தினார்.

வள்ளல் அழகப்பர் கல்வித்தொண்டில் தம் முழு கவனத்தையும் செலுத்தினார். ஓர் அரசு செய்ய வேண்டிய பணியினையும் மிஞ்சி கல்விப் பணியில் முழுமனதுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். புதுப்பள்ளிகள் தொடங்கும் காலகட்டங்களிலெல்லாம் பேராசிரியர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தன்னாலான சிறுஉதவியை செய்து வந்தார். வள்ளல் அழகப்பர் தோற்றுவித்த கல்வி நிறுவனங்களில் சில இங்கு குறிப்பிடப்பெறுகின்றன: (1) அழகப்பர் மாதிரி உயர்நிலைப்பள்ளி (ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் ஓர் அங்கம்), (2) அழகப்பர் தொடக்கநிலைப் பள்ளி (பணியாற்றும் ஊழியர்களுக்காக), (3) அழகப்பர் முன்னேற்பாட்டுப் பள்ளி, (4) மாண்டிச்சாரிப் பள்ளி, (5) அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, (6) அழகப்பா கலைக் கல்லூரி.

இதனைத் தொடர்ந்து இதுகாறும் எழுதி வைத்திருந்த கட்டுரைகள் காலமும் கவிஞர்களும், கவிதையும் கற்பனையும், இயற்கைக் கூத்து, பண்டைத் தமிழரின் அறிவியல் அறிவு, திராவிட நூலின் வரலாறு, வளரும் பயிர் (ஆறு கட்டுரைகள்), வானொலிப் பேச்சுகளாக அமைந்த

திருவள்ளுவர் கண்ட நாடு, தமிழொடு ஆங்கில உறவு, சோழர் கால வாணிகம், புத்தர் காட்டிய நெறி (நான்கு கட்டுரைகள்), பாரதியின் "பாஞ்சாலி சபதம்" (குமரி மலரில் வெளி வந்தது), பாவை நோன்பு (கலை மகளில் வெளி வந்தது) ஆகிய 12 கட்டுரைகளைத் தொகுத்துக் ***காலமும் கவிஞர்களும்*** என்ற பெயரில் நூலாக வெளியிட்டார் ஆசான் (சனவரி-1958). இ∴து ஆசானின் ஐந்தாவது வெளியீடு. இந்நூல் நூல் தாளாளர் C.V.CT.V வேங்கடாசலம் செட்டியார் அவர்கட்கு அன்புப் படையலாக்கப்பட்டது.

"குன்றக்குடி அடிகளார்" தருமபுர ஆதீனத்தின்கீழ்க் கட்டளை தம்பிரானாக இருந்தவர்தான் திருவண்ணாமலை ஆதீனத்தின் தலைவரானார். ஆசான் காரைக்குடி சென்ற (1950) சில மாதங்கட்கு முன்னர் தான் (அல்லது ஓராண்டுக்கு முன்னர்) குன்றக்குடியில் பதவி ஏற்றார். அடிகளார் மடாபதிகளுள் ஒரு பெரும் புரட்சியாளர். தமிழ்ப் பற்று மிக்கவர். சங்க இலக்கியத்தில் ஆழ்ந்த புலமையுள்ளவர். திருக்குறள்பால் பெரும் ஈடுபாடு கொண்டவர். குன்றக்குடிக்கு வந்த புதிதில் அப்பகுதியிலுள்ள எல்லா மேடைகளிலும் தோன்றுவார். பள்ளி, கல்லூரி ஆண்டு விழாக்களிலும் தொடக்க விழாக்களிலும் இவர் பேச்சு இருக்கும். பேசவிரும்புவர், பேச்சுச் சுவையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற பேராவலினால் கோயில் விழாக்களிலெல்லாம் பேசுவார். இந்து மதாபிமான சங்கத்திலும் பேசியுள்ளார்.

அன்றைய உயர்நிலைப்பள்ளிக் கல்வித் திட்டத்தில் மாணாக்கர்கட்குக் குடிமைப் பயிற்சி அளிக்க வேண்டியது அவசியம். அதைப் பயிற்சிக் கல்லூரியிலேயே அளிக்க வேண்டிய சூழ்நிலை. 10 நாட்கள் வெளியூர்களில் பயிற்சி முகாம்கள் நடத்தப்பெற்றன. இடங்களைத் தேர்ந்தெடுத்தல், முகாம் அமைத்தல், தங்குதல், வகுப்புகள் நடத்துதல், உணவு தயாரித்தல் முதலியவற்றில் மற்ற ஆசிரியர்களோடு ஆசான் தன்னை உற்சாகத்தோடு ஈடுபடுத்திக் கொண்டார்.

அதைப் பயிற்சிக் கல்லூரியிலேயே பயிற்சி பெறும் பி.டி.மாணாக்கர்கட்கு அளிக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. ஆண்டு தோறும் கல்லூரிக்கு வெளியே (வெளியூர்களில்) 10 நாட்கள் இந்தப் பயிற்சி அளிக்கப்பெற்று வந்தது. இளையாத்தாங்குடி, பிள்ளையாட்டி, மாற்றூர், இராமேச்சுவரம், சூரைக்குடி என்ற இடங்கள் ஆசான் முகாம் அமைக்கவும், பயிற்சிக்களனாக அமையவும் பயன்பட்டன. இங்கெல்லாம் செட்டியார்கள் விசேட காலங்களில் தங்குவதற்கு பெரிய பெரிய விடுதிகள் கட்டிப் போட்டிருந்தமையால் அவை மாணவர்கள் தங்குவதற்கும், வகுப்புகள் நடத்துவதற்கும், உணவு தயாரித்து உண்பதற்கும்

வசதியாக இருந்தன. இளையாற்றங்குடியில் நடைபெற்ற முகாமை அப்பொழுது சென்னை மாநிலப் பொதுத்துறை அமைச்சர் திரு B கோபாலரெட்டியும், அவரது துணைவியாரும் பார்வையிட்டனர். சூரைக்குடியில் நடைபெற்ற முகாமிற்கு அபிசீனியா பழ நாச்சியப்பன் வருகை தந்து உரையாற்றினார். மாற்றூரில் நடைபெற்ற முகாமிற்கு திரு எஸ் சங்கரராஜு நாயுடு தன் துணைவியாருடன் வந்து தேசியக் கொடியேற்றி மாணாக்கர்களிடையே 10 நிமிடங்கள் உரையாற்றினார். திருப்பராய்த்துறையில் நடைபெற்ற குடிமைப்பயிற்சி முகாம் சித்பவானந்த அடிகளின் ஆசியோடு நடைபெற்றது. மற்றும் பிள்ளையார்பட்டி, இராமேஸ்வரம் ஆகிய இடங்களிலும் குடிமைப்பயிற்சி முகாம்கள் நடைபெற்றன.

ஆசானுக்கு இந்து மதாபிமான சங்கத்துடன் அதிகமான தொடர்பு இருந்தது. விழாக்கள் ஏற்பாடுகளில் கூட அதிகமாக ஈடுபட்டிருந்தார். ஒரு சமயம் அண்ணாமலை நகருக்கு ஆசானை அனுப்பி டாக்டர் ஏ.சி.செட்டியாரை எப்படியும் அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்பது ராய.சொ.வின் ஆணை. ஆசான் அங்ஙனமே சென்று அவரை விழாவில் கலந்து கொள்வதற்கு ஒப்புக் கொள்ளுமாறு செய்தார். ஒரு வழி பயணப்படியும் தந்து திரும்பினார். ஒரு சமயம் ஏதோ ஒரு விழாவிற்குத் தினமணி உதவி ஆசிரியர் (சுடர் பொறுப்பிலிருந்தவர்) திரு.வேங்கடாசாரி விழாவிற்கு வந்திருந்தார். ராய.சொ. ஆசானை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அவரும் ஆசானைக் "கலிங்கத்துப்பரணி" பற்றி ஒரு ஆறு கட்டுரைகள் "சுடருக்கு" எழுதுமாறு கேட்டுக் கொண்டார். ஆசானும் தென்தமிழ் தெய்வப்பரணி, கடைதிறப்பு, பேய்கள் உலகம், வரலாற்றுக் கருவூலம், கற்பனை ஊற்று, சுவைகளின் களஞ்சியம் என்ற ஆறு தலைப்புகளில் எழுதித் தந்தார், அவை வெளி வந்தன. இவற்றால் ஆசான் தமிழகமெங்கும் அறிமுகமானார். இதன் பிறகு தினமணிக் கதிருக்கு எழுதுமாறு அழைப்பு வந்தது. பத்துக் கட்டுரைகட்குமேல் ஆசான் எழுதினார். இவற்றால் ஆசானின் அறிமுகம் மேலும் அதிகமாயிற்று.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரால் பாடப்பெற்ற ஒரே சங்கம் இந்து மதாபிமான சங்கம். காரைக்குடி இளைஞர்கள் ஒன்று கூடி - சொ முருகப்பா, இராய சொக்கலிங்கம், சா கணேசன் உட்பட - இச்சங்கத்தினை தோற்றுவித்தனர். இச்சங்கத்தின் மீது பாரதியார் ஏழு பாடல்கள் பாடியுள்ளார். (பாரதியார் கவிதைகள் : தனிப்பாடல்கள் - இந்து மதாபிமான சங்கத்தார்). 9.11.1919ல் பாரதியார் இச்சங்கத்திற்கு வருகை தந்தார்.

பலநூல்கள் பதிப்பித்தும், பல பெரியோர்
பிரசங்கம் பண்ணு வித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசா

லைபலவும் நாட்டி யுந்தம்
குலமுயற நகருயர நாடுயர
உழைக்கின்றார் கோடி மேன்மை
நிலவுறஇச் சங்கத்தார் பல்லூழி
வாழந்தொளிர்க நலத்தின் மீதே

ஆசான் இச்சங்கத்தின் நிர்வாகக்குழுவின் ஆயுள் உறுப்பினர். காரைக்குடிவாழ் மக்கள் பெரும்பாலும் தேசபக்தி மிக்கவர்கள். தமிழ்ப்பற்றும் சமயப்பற்றும் மிக்கவர்கள். சிவம் பெருக்கும் சீலர்கள். சிவன்கோயில் மேற்கு வீதியில் இருக்கும் அறுபத்துமூவர் மடமும், இந்து மதாபிமான சங்கமும் சிறப்பான சான்றுகளாகத் திகழ்கின்றன. இச்சங்கம் நடத்தும் தமிழ் இலக்கிய கூட்டங்களில் இராய சொக்கலிங்கம், சொ முருகப்பா இன்னபிற தமிழறிஞர்கள் கலந்து கொண்டு இலக்கிய சொற்பொழிவாற்றுவர். சங்க ஆண்டு விழாக்களில் தமிழ்த்தென்றல் திரு வி க, பண்டிதமணி கதிரேசச் செட்டியார், டாக்டர் ஏ சி செட்டியார், சுவாமி சித்பவாநந்தர், பன்மொழிப்புலவர் தெ பொ மீனாட்சிசுந்தரனார், வள்ளல் அழகப்பர், தொழிலதிபர் தியாகராசச் செட்டியார் முதலியோர் பங்கு கொண்டு சிறப்பித்துள்ளனர். இராய. சொ.வின் நினைவினைப்போற்றும் வகையில் ஆசான் 1998ல் **தமிழ்க்கடல் இராய சொ** எனும் நூலினை வெளியிட்டார்.

ஆசானின் அறிவியல் நூல்களை கண்டும் கேள்வியுற்றும், 1958ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் TM நாராயணசாமி பிள்ளை PUC வகுப்பிற்குத் தமிழில் அறிவியல் பாடங்களைப் பயிற்றுவிப்பது பற்றிய ஆறுவாரக் கருத்தரங்கினை முன்னின்று நடத்துமாறு ஆசானுக்கு அழைப்பு விடுத்தார். பல்கலைக்கழக விருந்தினன் என்ற சிறப்பு ஆசானுக்கு வழங்கப்பெற்றது. ஊதியமோ, சன்மானமோ ஏதும் இல்லை. “பணியே பரமன் வழிபாடு” என்ற கொள்கையுடைய ஆசான் இந்த அழைப்பையேற்று சிதம்பரம் சென்றார். கருத்தரங்கு கல்வியியல் துறையின் சார்பில் நடத்தப்பெற்றது. அறிவியல் துறைகளில் துறைக்கு இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பெற்று நாள்தோறும் முற்பகல் 10 மணிக்கு அறிவியல் அறையொன்றில் கூடினர். நாள்தோறும் அறிவியல், பல துறைகளிலும் கலைச் சொற்கள் உருவாக்கம் பற்றி விரிவாகக் கலந்தாயப்பெற்றது. ஒவ்வொரு துறையிலும் மாதிரிப் பாடங்கள் நடத்திக் காட்டப்பெற்றன. பல்கலைக் கழகத் துணைவேந்தர் வெகுவாக பாராட்டுமளவிற்கு கருத்தரங்கினை ஆசான் வெற்றிகரமாக நடத்தி முடித்தார்.

காரைக்குடியில் இருந்த பத்தாண்டுக் காலத்தில் மூன்று, நான்கு முறைகள் நகைக்கடையில் ஆசான் வேலை வைத்துக் கொண்டார். M.S.இராஜமாணிக்கம் செட்டியார்

முதலில் பழக்கமானார். ஆசானது நண்பர் திரு. ஏ சொக்கலிங்கம்பிள்ளை (நகராண்மைக்கழக உயர் நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் - இவர் சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 1940-41 ஒரு சாலை மாணாக்கர்) சில சமயம் அக்கடையில் மாலை நேரத்தில் வந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார். அவரால் தான் இந்தக் கடைத் தொடர்பு ஏற்பட்டது. இவருடன் தொடர்பு ஏற்பட்ட பிறகு இவர் நகைத் தொழில் படுத்து விட்டது. இத்தொடர்புக்குப் பின் கடைத் தெருவிற்கு வரும் பொழுதெல்லாம் இந்தக் கடைசியில் சிறிது நேரம் உட்கார்ந்து MSR இடம் பேசிப் போவது வழக்கமாகி விட்டது. செட்டியாரிடம் உரையாடுவதே ஒரு தனிச்சுவை. காரைக்குடியில் முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் சுவையாக நினைவிற்குக் கொணர்வார். இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள்.

நகைக்கடைக் குப்பை : குப்பை என்றாலே செல்வம் என்பது பொருள், நம் வீட்டுக் குப்பை பயன்படாது. நகைக்கடைக் குப்பை விலையுயர்ந்தது. கோலார் தங்க வயல் மண்ணையொத்தது. ஒரு சமயம் ஆசானது நண்பர் சிவ ராம தனுஷ்கோடி செட்டியார் தமது கடையின் ஓராண்டுக் குப்பையை ஐந்தாயிரம் ரூபாய்க்கு விற்று விட்டார். குப்பையை வாங்கியவர் அக்குப்பையில் நாற்பதாயிரம் பெறுமான தங்கம் எடுத்ததை அறிந்தார். அடுத்த ஆண்டு முதல் குப்பையை விற்பதில்லை என்ற முடிவுக்கு வந்தார். தாமே அதைத் தூய்மை செய்து தங்கத்தைப் பிரித்தெடுப்பது என்று திட்டம் போட்டு அதைச் செயற்படுத்தினார்.

ஆசானின் சென்னைப் பல்கலைக்கழகத் தொடர்பு இங்கு குறிப்பிடத்தக்கதொன்று. கல்லூரியின் தொடக்கக் காலத்தில் கல்லூரியின் சார்பாக பேராசிரியர் எஸ். திருவேங்கடாச்சாரி, பேராசிரியர் வி என் சுப்பிரமணியம் ஆகிய இருவருமே 1950-51, 1951-52, 1952-53 ஆகிய மூன்றாண்டுகள் சென்னைப் பல்கலைக்கழக கல்வி ஆலோசனைக் குழுவில் (Academic Council) உறுப்பினர்களாக இருந்து வந்தனர்.

கல்வி ஆலோசனைக் குழுவில் தேர்ந்தெடுக்கப் பெற்ற தொடக்க காலத்திலேயே இன்னொரு தேர்தல் வந்தது. கல்வி ஆலோசனைக் குழுவிலிருந்து நால்வர் பேரவைக்கு (Senate) வரலாம் தேர்தல் மூலம். கல்லூரிக்கு மூவர் வீதம் கல்வி ஆலோசனைக் குழவில் கிட்டத்தட்ட இருநூறு பேர் இருந்தனர். இவர்களுள் கல்லூரி முதல்வர்கள் பதவித் துறை சார்பாக (Ex-Officer) உறுப்பினர்கள். கல்லூரிக்கு இருவர் வீதம் ஆசிரியர்கள் உறுப்பினர்கள். முதலில் பேரவைக்கு இரு உறுப்பினர்களின் இடங்கள் காலி என அறிவிக்கப்

பெற்றன. ஆசான் இதற்குப் போட்டியிட்டார். அனைவருக்கும் ஒரு கடிதம் எழுதினார். ஒவ்வொருவர் இரண்டு வாக்குகள் அளிக்கலாம். சிலர் இரண்டு வாக்குகளையும் பயன்படுத்துவர். சிலர் ஒரு வாக்கையே அளிப்பர். இத்தேர்தலில் ஒன்றிரண்டு வாக்குகள் இல்லாமையால் ஆசான் தோல்வியுற்றார். ஒன்றிரண்டு திங்களில் மீண்டும் இரண்டு இடங்கள் அறிவிக்கப்பெற்றன. இதற்கு நின்று மூன்று முறை அனைவருக்கும் ஆசான் கடிதங்கள் எழுதினார். இம்முறை அதிக வாக்குகள் பெற்று முதலாவதாக வெற்றி அடைந்தார். ஏதோ இளமையில் கண்ட கனவு இறையருளால் நனவாகியது.

இந்த மூன்றாண்டுகளிலும் (1953-54, 1954-55, 1955-56) ஒவ்வொரு அவையிலும் ஆண்டிற்கு இரண்டு கூட்டங்கள் நடைபெற்றன. ஆசான் ஒன்றுகூட தவறாமல் சென்று வந்தார். நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் உன்னிப்பாகக் கவனித்து வந்தார். டாக்டர் முதலியார் கூட்டங்களை நடத்திய முறையே ஆசானைக் கவர்ந்தது.

ஒரு சமயம் பி.எட் வகுப்பில் பாடங்களைப் பயிலும் "பரீட்சார்த்தமாக" தமிழில் கற்பிக்கலாம் என்ற தீர்மானத்தை ஓர் உறுப்பினர் கொணர்ந்தார். துணை வேந்தரும் இயல்பான தம்முடைய உறுதியான போக்கிலிருந்த இந்தத் தீர்மானத்திற்கு வளைந்து கொடுத்தார். பலர் இந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர். பாட நூல்கள் தமிழில் இல்லை, கலைச் சொற்கள் இன்னும் உறுதி செய்யப் பெறவில்லை. இந்நிலையில் இத்திட்டம் வெற்றியுடன் செயற்படாது; செயற்படவும் முடியாது என்று காரணங்கள் கூறி எதிர்த்தனர். இறுதியாகத் துணைவேந்தரின் வளைந்து கொடுக்கும் தன்மையை அறிந்து வேண்டா வெறுப்பாகத் தீர்மானத்தை ஒருமானதாக ஏற்றனர். பல்கலைக்கழக துணைவேந்தர் (Dr AL Mudaliar) தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் (Feb 1956) இத்தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

நாட்டு நடப்பையும் தாய்மொழி மூலம் கற்பிப்பதன் மெத்தனப் போக்கையும் ஆசான் நன்கு அறிந்து கொள்ள இக்கூட்டங்கள் ஒரு வாய்ப்பளித்தன. காரைக்குடி திரும்பியதும் "அறிவியல் பயிற்றும் முறை" ஓராண்டிற்குள் எழுதி வெளியட வேண்டும் என்று உறுதி கொண்டு ஆசான் செயல்பட்டார். இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, பேராசிரியர் ***அறிவியல் பயிற்றும் முறை*** என்ற நூலை ஆசான் எழுதத் தொடங்கினார். இந்நூலை வள்ளல் அழகப்பருக்கு அன்புப்படையலாக்க எண்ணி

நலங்கிலர் ஊக்கம் எனும்புனல் பெய்து

நாள்தொறும் அன்புற வளர்த்த

பொலங்கிளர் முயற்சிக் கொடியினில் பூத்த

பொருளெனும் நறுமலர் கொய்து

புலங்கிளர் தெய்வக் கலைமகள் அடிக்கே

பொற்புற அணிந்துளம் களிக்கும்

வலம்கிளர் டாக்டர் அழகப்ப வள்ளல்

மலரடிக் குரியதிந் நூலே.

எனும் பாடலை யாத்தார். இப்பாடலுக்கு இராய சொக்கலிங்கமும், கம்பன் அடிப்பொடி சா கணேசனும் ஆசி வழங்கினர். அவ்வமயம் வள்ளல் அழகப்பர் உடல் நலிவுற்று சென்னை மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். அழகப்பா அறக்கட்டளையின் துணை மேலாளரான திரு பத்மநாபன் அழகப்பரை கவனித்துக் கொண்டிருந்தார். அப்பாடல் திரு பத்மநாபனுக்கு அனுப்பப்பெற்று, பாடல் அழகப்பருக்கு வாசித்துக் காட்டப்பெற்றது. பத்மநாபனும் பாடலைப்பாடி வள்ளலை மகிழ்வித்தார். ஆனால், சென்னைப் பல்கலைக்கழக கல்வி ஆலோசனைக்குழுவின் தீர்மானத்தின்படி எழுதப்பெற்ற முதல்நூல் அச்சாகி வெளியிடப்பெறும் முன்பே வள்ளல் அழகப்பர் இயற்கை (5.4.1957) எய்தினார். நூல் 1957ல் வெளியிடப்பெற்றது. ஒரு மாதத்திற்குப்பின், ஆசான் கண்டனூர் சென்று அழகப்பரின் திருமகளார் உமையாள் ஆச்சி மற்றும் அவர் கணவர் ஆகியோரை சந்தித்து நூலின் இரு படிகளை வழங்கினார். அழகப்பர் மறைவிற்குப்பின்பு அழகப்பா கல்வி அறக்கட்டளையின் பொறுப்பை அக்கால சென்னை மாநில கல்விநிதி அமைச்சராயிருந்த திரு சி சுப்பிரமணியம் ஏற்றுக் கொண்டார்.

கம்பன் விழாவினை முதன்முதலில் - காரைக்குடியில் - தொடங்கியவர் கம்பன் அடிப்பொடி சா கணேசன். நான்கு நாள் நிகழ்ச்சிகளை அமைத்து வெற்றிகரமாக நடத்துவதில் சா கணேசனுக்கு நிகர் எவரும் இல்லை என்பது கண்கூடு. முதல் மூன்று நாள் நிகழ்வுகள் காரைக்குடி மீனாட்சி மகளிர் உயர்நிலைப்பள்ளி வளாகத்திலும், நான்காம் நாள் நிகழ்வு நாட்டரசன் கோட்டை கம்பன் சமாதியிலும் நடைபெற்று வந்தன. தமிழகத்தின் புகழ் பெற்ற தமிழறிஞர்கள் பலரும் ஒவ்வொரு ஆண்டும் கலந்து கொள்வர்.

காரைக்குடியில் வாழ்ந்த பத்தாண்டுக் காலத்தில் இவர் இல்லத்திற்குப் பின்புறமுள்ள தெருவில் வாழ்ந்தவனாதலால் அடிக்கடிக் கலந்து பழகும் வாய்ப்பு எளிதில் பெற முடிந்தது. ஆசானது எழுத்துப் பழக்கத்தில் உற்சாகம் ஊட்டி அது வளர்வதற்குக் காரணமாக இருந்தவர். காரைக்குடியிலிருந்த போது பெரிய ஏழு நூல்களை ஆசான் எழுதினார். எல்லாவற்றின் கைப்படிகளிலும் இவர்தம் கை வண்ணத்தின் பங்கு உண்டு. பெரும் பகுதிகளைப் படித்துத் திருத்தங்களைக் கூறிச் செம்மைப் படுத்தியவர். தமிழோடு பலதுறை

ஆர்வலர். இலக்கியம், கலை, கல்வெட்டு, நாட்டு மருத்துவம், அரசியல், இசை, நாடகம், போன்ற அனைத்திலும் ஆர்வம் காட்டுபவர். கல்லூரிக் கல்வியை எட்டிப் பிடிக்காதவர். கல்லூரிப் பேராசிரியர்களின் அறிவுக்குமேல் பெற்றுத் திகழ்ந்தவர். எல்லாத் துறை ஆசிரியர்களிடமும் துறையறிவு பெற்றவர் போல் உரையாடி அவர்களை வியப்பில் ஆழ்த்துபவர். கம்பன் விழா நிகழ்ச்சி அமைப்புகளில் சா கணேசனுக்கு பெரிதும் உறுதுணையாக ஆசான் ஒத்துழைப்பு நல்கினார். இதனால் ஆசானுக்கு பல்வேறு தமிழறிஞர்களின் நட்பும், தொடர்பும் கிடைக்கப்பெற்றன.

1957ஆம் ஆண்டில் திரு அலெக்ஸாண்டர் ஞானமுத்து அழகப்பா கல்லூரியின் முதல்வராகப் பணியேற்ற ஆண்டு, அப்போது சென்னை மாநிலக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர் பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ. அவர்கள். ஓர் ஆகஸ்டு திங்களில் இவரை அழகப்பா கல்லூரி மாணவர் யூனியன் தொடக்க விழாவுக்கு அழைத்திருந்தார்.

அன்று காலை ஒன்பதரை மணிக்கே ஆசான் கல்லூரிக்கு வந்து விட்டார். நேராகத் தெ.பொ.மீ தங்கியிருக்கும் இடம் சென்று அவரை வருமாறு அழைத்தார். அவரும் வந்து பேசுவற்கு இசைந்தார். உடனே சுற்றறிக்கை அனுப்பப்பெற்றது. கூட்டம் பதினொரு மணிக்குத் தொடங்கி 12-39க்கு முடிந்தது. பொதுவாகத் தமிழைப் பற்றிப் பல செய்திகளைப் பேசினார். அப்போது IAS தேர்வு விடைத்தாள்களை மதிப்பிடும் பணியை ஏற்றுக் கொண்டிருந்தார் போலும், அதில் ஒரு வினா நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் பற்றி சிறு குறிப்பு எழுதுமாறு கேட்கப் பற்றிருந்தது போலும், அதற்கு விடையளித்த ஒருவர் இரண்டு பக்கங்கள் எழுதியிருந்தாராம். அதில் ஆழ்வார் பெயரையும் குறிப்பிடாமல், பிரபந்தத்தின் பெயரையும் காட்டாமல், அந்நூல் எது பற்றி நுவல்கிறது என்றும் சொல்லாமல் வெறும் சொற்களைக் கொண்டே வாக்கியங்களாக இரண்டு பக்கங்கள் நிரப்பியிருந்தார் என்று குறிப்பிட்டது இன்றும் (அக்டோபர்-1989) ஆசான் நினைவில் பசுமையாக உள்ளது.

சுமார் இரண்டாண்டு காலம் இழுபறியாக இருந்த பதவி உயர்வு, அழகப்பா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினர் K V AL M இராமநாதன் செட்டியார் அவர்களின் முயற்சியால் ஒரு முடிவுக்கு வந்தது. விரிவுரையாளர் எனும் பதவி பேராசிரியராக உயர்த்தப்பெற்றது.

காரைக்குடியில் வாழ்ந்த பத்தாண்டுகளில் ஆசானின் நண்பர் குழாம் பெருகியது. கம்பன் விழா மற்றும் பல இலக்கிய நிகழ்வுகளில் தவறாது கலந்து கொண்டு ஆசான் தம் பங்கினை வழங்கினார். இராய சொக்கலிங்கம், சொ முருகப்பர், ஆ முத்துசிவன், பூ அமிர்தலிங்கம், சு நடராசன், சோமய்யா (இலக்கியப் பதிப்பகம்), அ லெ நடராசன்

(புதுமைப் பதிப்பகம்), ரெ முத்து கணேசன், க தேசிகன், சோமலெ, ஏ சொக்கலிங்கம் பிள்ளை, இரசிகமணி, தொ மு பாஸ்கரத் தொண்டைமான், அ சீனிவாச ராகவன், மற்றும் இராம சிதம்பரம் இக்குழுவில் அடங்குவர்.

ஆசானின் தந்தை 1918ல் இயற்கை எய்தினார். 23 வயதுகூட நிரம்பாத ஆசானின் அன்னை மீனாட்சி அம்மாள் விதவையானார். தன் அன்னையார் இயற்கை எய்திய (1 சனவரி 1959) பின்பு, ஆசான் தன் சுயசரிதையில் கீழ்க்கண்டவாறு நினைவு கூறுகின்றார்:

<u>என் அன்னையின் சிவப்பேறு</u>

"பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பெரகம்பியில் (இலால்குடி வட்டம் - திருச்சி மாவட்டம்) பண்ணையார் வீட்டில் பிறந்த மீனாட்சி அம்மாள் அருமையாக வளர்க்கப்பெற்று கோட்டாத்தூரில் (முசிறி வட்டம் - திருச்சி மாவட்டம்) ஞானியார் குடும்பத்தில் ஒரே மகனான நல்லப்பரெட்டியாரை மணந்து அந்த வீட்டு மருமகளானார். மூன்றாண்டுகள் கூட முடியாத நிலையில் மூன்றாண்டுப்பருவம் நிரம்பாத ஒரு செல்வனை (அடியேனை) விட்டு கணவன் இறைவன் திருவடி நிழலை அடையவே, பங்காளிகளிடம் நீதிமன்ற வழக்குகளில் ஈடுபடுத்தப் பெற்றுச் சொல்லொணாத் துன்பமுற்றார் என் அன்னையார். எட்டு வயது வரையில் நான் பாட்டி வீட்டில் வளர்ந்து வரவே, என் அன்னையார் கோட்டாத்தூரிலும் பெரகம்பியிலுமாக இருந்து வந்தார். என் மாமன் (அம்மான்) இரண்டாவது திருமணம் செய்து கொண்ட பிறகு குடும்பத்தில் ஏற்பட்ட பூசல்களால் நானும் என் அன்னையும் கோட்டாத்தூர் வர நேர்ந்தது. எனக்கு எப்படியாகினும் ஆங்கிலக்கல்வி அளிக்கப்பெறல் வேண்டும் என்று பல்வேறு தொல்லைகளுக்கிடையில் வெளியூர் அனுப்பினார். 1930 முதல் 1953 வரை சொந்தத்தில் பண்ணை வைத்து அதிகப் பொருளிழப்பில் பண்ணை வேலையை நிறுத்தி நிலங்களை விற்றுவிட்டு என்னுடன் வந்துவிட்டார் என் அன்னையார். நான்கு ஐந்தாண்டுகள்தாம் அவரது வாழ்க்கையில் மன அமைதியுடன் வாழ்ந்த காலம். இரண்டு பேரன்மார்களுடன் இனிமையாகப் பொழுது போக்கினகாலம்."

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (குறள் - 69)

என்ற வள்ளுவர் வாக்கின் பேருண்மையை ஆசானின் அன்னையார் தம் வாழ்நாளில் அநுபவித்து மகிழ்ந்தார்.

ஆசான் 1957ல் எழுதிய "***தமிழ்ப் பயிற்றும் முறை***" எனும் நூலை தன் அன்னையார் அவர்கட்கு,

நற்றவத் தாயே! வாழி!பல் நலனுறப்
பெற்றெனை வளர்த்துக்
கற்றவ னாக்கிப் பேணினை! உலகிற் காணுறு
பொருளெலாம் கொணர்ந்துன்
சிற்றடிப் புறத்தில் வைப்பினும் அவைநின்
சீரருட் கொப்பென லாமோ?
மற்றிதை யுணர்வேன்! எனினுமிந் நூல்நின்
மலர்ப்பதத் துரிமைசெய் தனெனே.

என காணிக்கையாக்கி போற்றி வணங்குகின்றார்.

1958ல் கல்லூரி முதல்வர் அலெக்ஸாண்டர் ஞானமுத்துவின் ஆலோசனைப்படி, ஆசான் ஏதேனும் ஒரு பல்கலைக் கழகத்தில் உள்ள தமிழ்த்துறையில் சேரும் முயற்சியில் ஈடுபட்டார். திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திலிருந்து தமிழ் விரிவுரையாளர் பதவிக்கு ஒரு விளம்பரம் வரவே, ஆசான் அதற்கு விண்ணப்பித்தார். வந்த 18 விண்ணப்பங்களில் இறுதியாக மூவர் அழைக்கப்பெற்றனர். திருவேங்கடவன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் எஸ் கோவிந்தராஜுலு நாயுடு தலைமையில் அமைந்த வல்லுநர் குழுவில் திரு TM நாராயணசாமி பிள்ளை மற்றும் டாக்டர் அ துரை அரங்கசாமி ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர். முடிவில் திரு TM நாராயணசாமி பிள்ளை அவர்களின் சிறப்பான பரிந்துரையின் பேரில் ஆசான் தேர்ந்தெடுக்கப்பெற்றார். 4.7.1960ல் பல்கலைக் கழகத்திடமிருந்து ஆணை வந்தது. மாதச்சம்பளம் குறைவாக இருப்பினும், பல்கலைக்கழகப் பணியில் உள்ள மிகச்சிறந்த எதிர்காலத்தை எண்ணத்தில் கொண்டு ஆசான் கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகத்திற்குச் செல்ல முடிவு செய்தார்.

ஆசானின் இரு புதல்வர்களும் முறையே 6 மற்றும் 2ம் வகுப்புகளில் படித்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு திருப்பதியில் கல்வி வசதி இல்லாததால் குடும்பத்தை காரைக்குடியில் இருத்திவிட்டு 31.7.1960ல் கல்லூரியில் அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு ஆசான் மறுதினம் (1.8.1960) திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார். காரைக்குடி பத்தாண்டு (1950-1960) கல்விப்பணி முடிவுற்றது.

(😊)(😊)(😊)(😊)(😊)







பல்கலைக் கழகப்பணி

ஆசான் தமிழகத்தை அடுத்துள்ள ஆந்திர மாநிலமான சித்தூர் மாவட்டத்தில் திருப்பதிக்குச் சென்று திருவேங்கடன் பல்கலைக்கழகத்தில் தமிழ் துறையில் விரிவுரையாளராக சேர்வது உறுதியாயிற்று. ஆசான் திருப்பதிக்கு குடும்பத்துடன் வருவதற்கு முன் காரைக்குடியில் ரூபாய் 17 ஆயிரத்திற்கு ஒரு வீடு வாங்கினார். அந்த வீட்டில் பெரும்பாலான சாமான்கள் போட்டுவிட்டு தேவைக்கு வேண்டிய சாமான்களை மட்டும் இரயில் வண்டியில் பார்சலில் அனுப்பிவிட்டு திருப்பதி வந்து சேர்ந்தார். வந்தவுடன் தேவஸ்தான பழைய சத்திரத்தில் அறை ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு பத்து நாட்கள் தங்கி இருந்தார். விடுமுறை 10 நாட்கள் இருக்கும்பொழுதே திருப்பதி வந்து சேர்ந்தார். மலை மேல் இரண்டு நாட்கள் தங்கி எம்பெருமான் ஏழுமலையானை தரிசனம் செய்தார். பிறகு திருப்பதியில் கோவிந்தராஜ பெருமாள், அலர்மேல் மங்கை தாயார், இவர்களை தரிசனம் செய்தார். பத்து நாட்களும் ஆசானின் குடும்பத்தினர் உணவு வழியில் தான் உணவு உண்டார்கள். ஆசானும் மூத்த மகனும் (அப்பொழுது பிஎஸ்சி சேர இருந்தவன்) திருப்பதி முழுவதும் வீட்டிற்காக ஒரு வாரம் அலைந்து திரிந்தார்கள். மத்திய அரசு பள்ளி கபில் தீர்த்தம் சாலையில் இருந்தது. இளைய மகன் அதிக நடையில்லாமல் பள்ளிக்கு அருகிலேயே வீடு அமர்த்த நினைத்து பள்ளி இருந்த பகுதியிலேயே வீட்டுக்கு அலைந்தார்கள். இறைவன் அருளால் பள்ளிக்கு அருகிலேயே உமாபதி ரெட்டி குடியிருப்பிலேயே வீடு கிடைத்தது.

ஆசான் திருவேங்கடன் பல்கலைக்கழகத்தில் தமிழ் துறையில் விரிவுரையாளராக சேர்ந்தார். தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழக அமைப்பு சிறிது வேறுபட்டது. திருவேங்கடவன் பல்கலைக்கழகம் தமிழகத்தின் பல்கலைக்கழகத்தை ஒட்டி கல்லூரி

அமைப்பு இல்லை. ஆனால் திருப்பதியில் பல்கலைக்கழக கல்லூரி என்ற ஓர் அமைப்பு உண்டு. இதற்கு முதல்வர் என்ற ஒருவரும் உண்டு. துறைகள் யாவும் இவருடைய பொறுப்பில் இருக்கும். இரண்டு அல்லது மூன்று ஆண்டுக்கு ஒரு முறை பல துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்களில் ஒருவர் சுழல் முறையில் வரிசை முறைப்படி முதல்வராக இருப்பர். பல்கலைக்கழகத்திற்கு துறையிலிருந்து போகும் கடிதங்கள் யாவும் முதல்வர் மூலம் தான் செல்ல வேண்டும். துறைகளுக்கு தேவையானவற்றை முதல்வர் மூலம்தான் பெறுதல் வேண்டும். பல்கலைக்கழகமும் கல்லூரியும் ஒரே வளாகத்தில் இருந்ததால் துறையில் உள்ளவர்களுக்கு எந்த சங்கடமும் ஏற்படுவதில்லை.

ஆசான் கல்லூரியில் சேர்ந்த போது இராமச்சந்திரராவ் என்ற இயற்பியல் பேராசிரியரிடம் அவரது சான்றிதழ்களை கொடுத்து பணியில் அமர்ந்தார். வளர்ந்து வரும் பல்கலைக்கழகத்தில் இட நெருக்கடி அதிகம். கல்லூரியே திருமலை திருப்பதி அறநிலையத்திற்கு கீழ் இயங்கி வந்த கலைக்கல்லூரிக்குரிய கட்டடத்திலும் பல்கலைக்கழக அலுவலகம் மேற்படி அறநிலையத்தின் கீழும் இயங்கின. பத்மாவதி மகளிர் கலைக் கல்லூரி கட்டடத்தின் தரைத்தளத்தில் செயல்பட்டு வந்தது. பல்கலைக்கழகம் தொடங்கி ஆறு ஆண்டுகள் ஆயினும் கட்டட வேலைகள் செயல் துடிப்பும் செயல் திறமையும் மிக்க துணைவேந்தர் திரு. எஸ்.கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் சீரிய தலைமையில் நடைபெற்று வந்தன. இயற்பியல், வேதியல், தாவர இயல் துறைகளுக்கென்று ஒரு மூன்று மாடிக் கட்டடமும் விலங்கியல், நில உட்கூற்றியல், துறைக்கென்று ஒரு மூன்று மாடிக் கட்டடமும் நிறைவு பெறும் நிலையில் இருந்தன.

பல்கலைக்கழகத்திற்கு என்று ஒரு தனிக் கட்டிட வேலை தொடக்க நிலையில் இருந்தது. அங்ஙனமே இலக்கியக் கூட்டங்கள், விழாக்கள் நடைபெறுவதற்கென்று ஒரு பெரிய மண்டபத்திற்கு அடிக்கல்லும் நாட்டப்பெற்றிருந்தது. பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் இவர்கட்கென்று சுமார் 50 இல்லங்கள் நிறைவுற்றிருந்தன. இவற்றைத் தவிர "பிரகாசம் நகர்" என்ற பெயரில் பல இல்லங்கள் கட்டத் திட்டமும் இருந்தது. இத்திட்டம் 1970இல் தான் முடிந்தது. அப்போதுதான் ஆசானுக்கும் ஒரு நல்ல இல்லம் கிடைத்தது. ஆசானுக்கு இந்தி துறையில் இருக்க இடம் தரப்பெற்றது. பிறத்துறை பேராசிரியர்களும் ஆய்வு மாணவர்களும் மிக்க மரியாதையுடனும் அன்புடனும் நடந்து கொண்டனர். ஆசான் அவர்கள் 17 ஆண்டுகள் தமிழ் துறையில் பணியாற்றிய போது எந்த உதவியும் எவரிடமும் பெறவில்லை. எந்த செயலில் இறங்கினாலும் ஏழுமலையான் மீது பாரத்தை போட்டு செயல்படுவார். பலனையும் அவருக்கே விட்டு விட்டபிறகு எந்த கவலையும்

அவருக்கு ஏற்படுவதில்லை. மலை போன்ற சிரமம் வந்தாலும் அதை கொசு போல தட்டி விடுவார். இறுதியில் முடிவு நல்லதாகவே அமையும். எந்த செயலிலும் தவறான வழியை இவர் கையாளுவதில்லை. குறுக்கு வழிகளில் செல்லத் துணிவதுமில்லை.

திரு பலராம ரெட்டி அவர்கள் ஆசானிடம் பொதுவாக எச்சரிக்கையாக இருக்கும்படி கூறினார். மிஸ்டர் ரெட்டியார் ஆசானிடம் பழகுவது துணைவேந்தர் கோவிந்தராஜுலுக்கு தெரியாமல் இருக்க வேண்டும். தெருவில் செல்லும் போது வணக்கம் கூட தெரிவிக்க வேண்டாம். பல்கலைக்கழக வளாகத்திற்கு வரும்போதும் கண்டுகொள்ளாமல் இருந்துவிடுங்கள். கழுகுகள் போல் பல உளவாளிகள் உள்ளனர். அவர்கள் ஏதாவது இல்லாதவற்றை துணைவேந்தரிடம் சொல்லி நம் உறவை தெரிவிப்பார்கள். துணைவேந்தர் கோள்களை நம்புபவர். ரெட்டிகளைப் பற்றி கூறப்படும் புகார்கள் அவருக்கு வெல்லமாக இனிக்கும். அவரால் என்னை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் உங்களுக்கு தொல்லைகள் தரலாம். நீங்கள் தென்பகுதியில் இருந்து பணிக்காக வந்துள்ளீர்கள். உங்களுக்கு ஏன் இந்த வம்பு? திருப்பதி அரசியலில் இருந்து நீங்கள் ஒதுங்கியே இருங்கள் என்று ஆசானுக்கு அவர் அறிவுரை கூறினார்.

திருப்பதியிலும் பல்கலைக்கழக வளாகத்தில் பெரு மதிப்பு ஆசானுக்கு இருந்தது. முனிரெட்டியிடம் ஆசான் தெலுங்கில் தான் பேச தொடங்கினார். குறைபாடுள்ள தமிழ் ஒளியுடன் கூடிய பேச்சு முனிரெட்டியை மகிழ்வித்தது. ஆசானை செட்டியார் பயிற்சி கல்லூரிக்கு திரும்ப (காரைக்குடிக்கு) வரச் சொல்லி கடிதம் வந்தது. இதற்கு விருப்பம் இல்லாவிடில் மூன்று மாத ஊதியத்தை நிர்வாகத்திற்கு கட்ட வேண்டியது அவசியம் என்றும் அதில் எழுதப்பட்டிருந்தது. கல்லூரியில் வேலை செய்த ஒருவர் தான் இச்செயலை ஆசானுக்கு செய்தது. இந்த மதியீனமான ஆணையை பலருக்குத் தெரிவித்தால் நிர்வாகத்தின் மானம் தான் போகும் என்பதை அறிந்த ஆசான், அவர்கள் கோரியபடியே மூன்றுமாத ஊதியத்தை கொடுத்து பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

நாட்டுப்புறங்களில் இருந்து வரும் பெரும்பாலான திருத்தலப் பயணிகளிடம் தூய்மை இருப்பதில்லை. உண்ணல், உடுத்தல், பருகுதல் போன்ற செயல்களிலும் தூய்மையைக் காண இயலாது. பெரும்பாலும் இவர்கள் பேருந்தை எதிர்பார்ப்பதே இல்லை. அதிகாலையில் எழுந்து தங்கள் மலைப் பயணத்தை தொடங்குவார்கள். பெரும்பாலும் இவர்கள் இரயிலடி, கோனேற்றுக்கரை போன்ற இடங்களில் இருந்து கிளம்புவார்கள். திருப்பதியில் மலை அடிவாரத்திற்கு சுமார் ஒரு கல் தொலைவில் சில குடும்பங்கள் இவ்வகை பயணிகளுக்கு

தம் இல்லங்களில் குறைந்த வாடகையில் இடவசதிகள் அளித்து வருவதுண்டு. இ்.து ஒரு பாகவதக் கைங்கரியம். திருமலையில் எம்பெருமான் தரிசனம் முடிந்ததும் வரிசையாக வரும் பக்தர்களுக்கு வெண் பொங்கல், சர்க்கரை பொங்கல், புளிச்சோறு போன்றவை சிறிய இலைகளில் வழங்கப்படும். ஆழ்வார்களின் தலைவராகிய நம்மாழ்வாரே பாகவதர் கைங்கரியத்தின் சிறப்பையும் பெருமையையும் சொல்லியுள்ளதை கூறுவார் ஆசான்.

தரமான தகுதி வாய்ந்த பேராசிரியர்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படுவதில்லை என்று ஆசான் அடிக்கடி கூறுவார். டாக்டர் டி. ஜகநாதரெட்டி துணைவேந்தராக இருந்த காலத்தில் ஆசானுக்கு பேராசிரியர் பதவி வழங்கப்படாமல் சில நெருக்கடிகள் ஏற்பட்டன. உருது பேராசிரியர் நயினார் அவர்கள் அனைவரிடமும் புன்முறுவலுடன் பழகுபவர். ஆசானுடன் தொடர்ந்து அவருடைய நட்பு நீடித்தது. நயினார் மறு வருடமே கடுமையான நோயால் தாக்கப்பெற்று இறைவனடி சேர்ந்தார். அடுத்த ஆண்டு அத்துறையில் துணைப் பேராசிரியராக டாக்டர் அகமது என்பவர் பணி அமர்த்தபட்டார். ஆசானை ஒரு சமயம் பெரிய அறையில் அமர்த்தினார். ஆசான் கற்பித்த பத்தாண்டு காலத்திலும் எந்த வருடமும் மூவருக்கு மேல் சேர்ந்ததில்லை. ஓராண்டு மட்டும் நால்வர் சேர்ந்ததாக நினைவு கூர்ந்தார் ஆசான். அதிக எண்ணிக்கையில் மாணாக்கரகள் இல்லாமையால் கற்பிப்பதில் அதிக வேலை இல்லை. உற்சாகமும் ஆசானுக்கு இல்லை. சில மாணவர்கள் நன்றாக படித்து முதல் வகுப்பு மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றனர்.

தொடர்ந்து ஆசானின் கவனம் எழுத்து பணியில் ஆழ்ந்திருந்தது. சிறுவர்களுக்காகவும் வளர்ந்தவர்களுக்காகவும் அறிவியல் நூல்களை எழுதினார். கல்லூரியில் எழுத முடியாது. எழுதுவதற்கு ஏற்ற சூழ்நிலையும் இல்லை. மனமும் இதற்கு ஒரு படவில்லை. வகுப்பில்லாத நேரங்களில் நூலகங்களில் ஏதாவது படிப்பதில் காலம் கழித்தார். ஆசான் திருப்பதி வந்ததும் ஏற்கனவே காரைக்குடியில் எழுதி அச்சுக்கு கொடுக்கப்பட்டிருந்த **கல்வி உளவியல், காதல் ஓவியங்கள், கவிதை அனுபவம்** என்ற மூன்று நூல்கள் அச்சேறத் தொடங்கின. உடனே பல்கலைக்கழக விதிப்படி இந்த மூன்று நூல்களையும் வெளியிடுவதற்கு இசைவு கோரி பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்தார் ஆசான். இசைவும் தரப்பெற்றது.

திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில், அப்பொழுது மானுடவியலில் 1.வரலாறு 2.பொருளியல் 3.மெய்ப்பொருளியல் 4.உளவியல் என்ற துறைகளும், மொழியியலில் 1.தெலுங்கு 2.வடமொழி (சமஸ்கிருதம்) 3. உருது, அரபு, பாரசீகம் 4.புலம் அமையாத தமிழ் என்ற

துறைகளும், அறிவியலில் 1.இயற்பியல் 2.வேதியல் 3.கணிதம் 4.தாவரவியல் 5.விலங்கியல் 6.நில உட்கூற்றியல் என்ற துறைகளும் இயங்கி வந்தன. எந்த துறையிலும் எழுத்து பழக்கம் உள்ளவர்களோ, எழுத வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள் இருந்ததாக தெரியவில்லை. கல்லூரிகளுக்கும் பல்கலைக்கழகத்திற்கும் நடைமுறையில் வேறுபாடு தெரியாதவர்கள் பலர் சேர்ந்து விட்டனர். இந்த துறைகளில் எல்லாம் பிஎச்.டி., பதிவு செய்து கொள்ளும் உரிமை இருந்தது. அறிவியல் துறைகளில் ஒரு சிலரை தவிர பெரும்பாலோர் பிஎச்.டி., பெறாதவர்களே. வரலாறு, பொருளியல் துறைகளில் துறைக்கு ஒருவராக பிஎச்.டி., பட்டம் பெற்றவர்கள் இருந்தனர். மெய்ப்பொருளியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் இருவர் பணியாற்றினர். கணிதத் துறையிலும் தெலுங்கு துறையிலும் எவருமே இலர். உருது துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர் ஒருவர் இருந்தார். ஆனால் பொருளியல் துறையில் ஒருவரும் (இவர் மலையாளி) கணிதத் துறையில் ஒருவரும் (இவர் வங்காளி) உளவியல் துறையில் ஒருவரும் (இவர் தமிழர்) டாக்டர் பட்டம் இல்லாமலேயே பேராசிரியர் பதவியில் இருந்தனர். வடமொழியில் பி.எச்.டி பட்டம் பெற்றவர்கள் இருவரும் துணை பேராசிரியராகவே இருந்து வந்தனர். வணிகத் துறையில் ஒருவர் டாக்டர் பட்டம் பெற்றவர் ஒருவர் இருந்தும் எல்லோருமே விரிவுரையாளர்களாக பணியாற்றி வந்தனர். இவர்களை எல்லாம் துணைவேந்தர் எந்த அளவு கோலை கொண்டு மதிப்பிட்டார் என்பது அந்த ஏழுமலையானுக்கு வெளிச்சம். அறிவியல் துறைகளில் ஒரு சிலரைத் தவிர எந்த துறையிலும் ஆய்வு மனநிலை உடையவர்களை ஆசானால் காண முடியவில்லை. பெரும்பாலோர் செயலில் தம் திறமையை வெளிப்படுத்தாமல் துணைவேந்தரை காக்கை (கால், கை) பிடித்தலில் போட்டியிட்டுக் கொண்டிருந்ததை ஆசானால் கவனிக்க முடிந்தது. போட்டி போட்டுக் கொண்டு கூட்டங்களை அமைத்தல் அந்தக் கூட்டங்களுக்கு துணைவேந்தரை தலைமை தாங்குமாறு அழைத்தல் போன்ற செயலில் சுறுசுறுப்பாக இயங்கி வருவதை ஆசான் கண்டார். இதில் பொதுவாக நாயுடு வகுப்பு சேர்ந்தவருக்கு குறிப்பாக துணைவேந்தர் வகுப்பை சேர்ந்தவர்க்கு, எல்லா நிலைகளிலுமே சலுகைகள் காட்டப்பெற்று வருவதும் வெள்ளியிடையாக காணப்பட்டது. இவற்றையெல்லாம் கண்ணுறும் ஆசானுக்கு சிரிப்புதான் வந்தது.

மலையின் மேல் கோயில் கொண்டிருக்கும் ஏழுமலையான் கண்களில் இவை எல்லாம் படவில்லையோ என்று ஏங்கி கிடப்பார் ஆசான். தேவஸ்தானத்தில் நடைபெறும் அட்டூழியங்களை சரி படுத்த முடியாது பார்த்துக் கொண்டிருக்கும் அவனுக்கு பல்கலைக்கழகத்தின் மீது கவனம் செலுத்த நேரம் ஏது? அவரவர்கள் பிரார்த்தித்தபடி

பாவம் பண்ணட்டும் என்று எண்ணிக் கொண்டானோ என்று கூட ஆசானின் மனம் எண்ணத் தொடங்கியது. இந்நிலையில் பிஎச்.டி பதிவு செய்து கொள்வதற்கு ஆசான் முயன்று கொண்டுதான் இருந்தார். அக்காலத்தில் ஆசிரியர் இலக்கியம் அறிவியல் துறைகளில் தரமான 7 நூல்களை வெளியிட்டு இருந்தார் ஆசான். திறனாய்வு, கல்வி உளவியல் துறைகளில் மூன்று நூல்கள் அச்சாகிக் கொண்டிருந்தன.

முத்தொள்ளாயிரம் பாடல்களை ருசித்து ரசித்து பரவசத்தில் இருந்த பொழுது, துணைவேந்தர் கொடுத்த உற்சாகத்தால் பாடல்களை சுவைத்த மாதிரியே அவற்றுக்கான விளக்கங்களை எழுதிக்கொண்டே இருந்தார். எழுதி முடித்ததும் அந்தக் கையெழுத்துப் பிரதியை துணைவேந்தரிடம் எடுத்துச் சென்று பல்கலைக்கழக வெளியீடாக வெளியிடுமாறு வேண்டுகோள் விடுத்தார். நிபுணர்களின் கருத்தைப் பெற்ற பிறகு வெளியிடலாம் என்றார். பின்னர், கையேடு வெளியிடும் பொறுப்பை துணைவேந்தர் ஆசானிடம் ஒப்படைத்தார். திருவேங்கடவன் கீழ்த்திசை ஆய்வுக்கழக கணக்கில் நிதி தூங்கிக் கொண்டிருந்தது. அந்த நிதியிலிருந்து வந்த தொகையின் உதவியுடன் நூல் **முத்தொள்ளாயிரம் விளக்கம்** என்ற தலைப்பில் பல்கலைக்கழக வெளியீடாக ஆசானுடைய ஆங்கில ஆய்வு நூல்முகத்துடன் நவம்பர் 1965இல் வெளிவந்தது. இ∴து ஆசான் உடைய 17வது வெளியீடாக அமைந்தது.

தத்துவத் துறையில் மிக்க புகழோடு விளங்கியவர் டாக்டர் கே.சி.வரதாச்சாரியார். இவர் துணைப் பேராசிரியராக பணியில் இருந்தார். திருப்பதிலேயே வாழ்ந்த முதல்வர் டி.ஏ.புருஷோத்தம் தான் இத்துறை பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர். இத்துறையில் மிகவும் செல்வாக்குடன் திகழ்ந்தவர் வீரராகவன் என்ற விரிவுரையாளர். புதிதாக தமிழ் பேசத் தெரிந்தவர்களிடம் பழக வேண்டும் என்ற எண்ணம் முகிழத்ததால் ஆசான் அந்த துறைக்கு சென்றார். டாக்டர் கே.சி.வரதாச்சாரியாரும், வீரராகவனும் திருப்பதி தேவஸ்தானத்தை சார்ந்த கலைக்கல்லூரிகளில் பல்லாண்டுகள் பணியாற்றியவர்கள்.

பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதும் பல்கலைக்கழகத்தில் வந்து சேர்ந்தவர்கள் திருப்பதியின் கல்விச் சூழ்நிலை, பணியாற்றிய பெரியார்கள், பிற விவரங்கள் இவற்றை நன்கு அறிந்தவர்களாக இருந்தனர். டாக்டர்.கே.சி.வரதாச்சாரியார் நன்கு படித்தவர். அவர் பேச்சிலிருந்தே பெரும் புலவர் என்பதை சிறிது நேரத்தில் எவரும் எளிதாக புரிந்து கொள்ளலாம். வீரராகவன் நாட்டு நடப்புகளை நன்கு அறிந்தவர். உலகியலை நன்கு புரிந்து கொண்டு திகழ்ந்தவர். அதனால் இத்துறைக்கு ஆசான் அடிக்கடி சென்று வருவதுண்டு.

ஆசான் பிச்.டி பட்டத்திற்கு பதிவு செய்து கொள்வதற்காகவே அத்துறைக்கு சென்று டாக்டர் கே.சி.வரதாச்சாரியார் இடம் அடிக்கடி பேசுவார். தலைப்பை தேர்ந்தெடுத்தல், அணுகும் முறை இவற்றைப் பற்றி அவரிடம் கலந்த ஆலோசிப்பதும் உண்டு. ஒரு நாள் அப்பேராசிரியரை தனக்கு வழிகாட்டியாக இருக்குமாறு வேண்டினார். ஆசானின் துடிப்பு, ஆய்வில் ஆர்வம், கடுமையான உழைப்பு இவற்றை நன்கு அறிந்து தெளிந்த டாக்டர் கே.சி.வரதாச்சாரியார் ஆசானின் வேண்டுகோளுக்கு ஒப்புக்கொண்டார்.

ஒரு நன்நாளில் விண்ணப்பத்தை நிரப்பி உரிய கட்டணத்தை செலுத்தி பேராசிரியரிடம் ஒப்புதல் வாங்கி பல்கலைக்கழகத்திற்கு அனுப்பினார். அனுப்பிய பிறகு துணைவேந்தரையும் சந்தித்து இசைவு தருமாறு வேண்டினார். அவரும் கவனிப்பதாகக் கூறினார். ஆனால் அவர் சொன்னது: "மிஸ்டர் ரெட்டியார் நன்றாக ஆய்வு செய்யுங்கள். கட்டுரையை ஆங்கிலத்தில் தான் எழுத வேண்டும் என்ற எண்ணம் உடையவராக இருங்கள். எதிர்காலத்தில் இங்கு தமிழ்த் துறை ஏற்பட்டு வளர வாய்ப்புண்டு. தாங்கள் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் வருவதற்கும் வாய்ப்பு இருக்கும். அப்போது தாங்கள் நெறியாளராக இருக்க நேரிட்டால் இருவர் அல்லது மூவருக்கு மேல் எடுத்துக் கொள்ளாதீர்கள். ஆங்கிலத்தில் கட்டுரை வரையப் பெற வேண்டும் என்று வற்புறுத்துங்கள். எக்காரணத்தைக் கொண்டும் தமிழில் எழுத இடம் கொடுக்காதீர்கள். இந்த நிலையில் கூட தமிழைப் பற்றி ஆங்கிலத்தில் படிக்க முடியாது என்றால், யார் தான் தமிழைப் பற்றி ஆங்கிலத்தில் எழுத போகிறார்கள்? மொழி ஆசிரியர்கள் நல்ல ஆங்கில அறிவுடன் திகழ்ந்தால் அவர்களுக்கு உலகளாவிய புகழ் கிடைக்கும். ஏன் இந்தியாவிலேயே எல்லா பகுதிகளுக்குப் போகவும் அங்கெல்லாம் தமிழ் இலக்கியம், தமிழ் பண்பாடு, தமிழில் பக்தி இலக்கியத்தின் பெருமை, தமிழ் இலக்கியம் பல்வேறு காலங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் வளர்ச்சி பெற்ற முறை இவற்றையெல்லாம் நம் நாட்டில் பிற பகுதியினரும் வெளிநாட்டாரும் அறிய வாய்ப்புகள் ஏற்படும்" என்று சிறந்த ஓர் அறிவுரையை நல்கினார். எதிர்காலத்தில் அமைய இருக்கும் தமிழ்த் துறையை எவ்வாறு எல்லாம் வளர்க்க வேண்டும், அதன் வளர்ச்சிக்கு எப்படி உழைக்க வேண்டும், எப்படி புகழ் பெறச் செய்ய வேண்டும் என்றெல்லாம் ஆசானின் மனம் சிந்திக்க தொடங்கியது. இந்த அறிவுரையை மனதில் நன்றாக உள்வாங்கிக்கொண்டு ஆசான் பணிபுரிந்தார்.

சில நாட்கள் கழிந்த பின் பிஎச்.டி., ஆய்வு செய்ய மறுக்கப்பட்டது. காரணம் அறிவதற்காக துணைவேந்தரை சந்தித்தார். தமிழ்ப் புலம் பல்கலைக்கழகத்தில் இல்லாததால் ஆசான் ஆய்வு செய்வதற்கு விதிகள் இடம் தரா என்று சொல்லிவிட்டார். மேலும் ஆய்வு

நெறியாளராக இருப்பதற்கு டாக்டர் கே சி வரதாச்சாரியார் இதற்கு தகுதியற்றவர். தமது இல்லத்தில் பேசும் வைணவராக இருந்த போதிலும் தமிழ் படிக்க தெரியாதவர். தெலுங்கு தான் அவர் படித்த மொழி. அதிலும் அவருக்கு ஆழ்ந்த புலமை இல்லை. வடமொழியிலும் இதே நிலைதான் என்று அவரைக் குறைவாக பேசினார். ஆசானுக்கு எதுவும் புரியவில்லை. துணைவேந்தர் பேசும்போது பேச்சில் கோபத் தொனி இருப்பது தெரிந்தது. ஆசான் மீது அவருக்கு கோபம் இல்லை. டாக்டர் கே சி வரதாச்சாரியரின் மீது தான் கோபம் இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டார் ஆசான். இருப்பினும் காரணத்தை அறிந்து கொள்ள ஆசானின் மனம் விளைந்தது. திரு வீரராகவரிடம் உரையாற்றிக் கொண்டிருந்தபோது ஒருவாறாக காரணம் புரிந்தது. திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் நியமனத்தில் திரு டி சதாசிவ ரெட்டிக்கும், பேராசிரியர் எஸ் கோவிந்தராஜுலு நாயுடுவுக்கும் போட்டி இருந்ததாகவும் இப்போட்டியில் டாக்டர் கே சி வரதாச்சாரி திரு.ரெட்டியின் சார்பாக உழைத்ததாகவும் இதை திரு நாயுடு அறிந்து கொண்டதாகவும் அதிலிருந்து நாயுடு டாக்டர் கே சி வரதாச்சாரியின் மீது சினம் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார் திரு. வீரராகவன். மேலும் அனைத்து தகுதிகள் பெற்றிருந்தும் டாக்டர் கே சி வரதாச்சாரியாரை பேராசிரியராக உயர்த்தாமைக்கும் இதுதான் காரணமாக இருக்க வேண்டும் என்றும், இதனால்தான் அவருக்கு பதவி உயர்வு தராமல் வெளியில் இருந்து ஒப்பந்தத்தில் பேராசிரியர் டி.ஏ.புருஷோத்தம் கொணரப்பட்டுள்ளார் என்றும், டாக்டர் வரதாச்சாரி ஓய்வு பெறும் வரையிலும் பேராசிரியர் புருஷோத்தம் ஒப்பந்தம் நீட்டிக்கப்படும் என்ற விளக்கமும் அளித்தார்.

கருவிலே திருவமைந்த ஆசிரியர்களும், தியாக உணர்வு கொண்ட ஆசிரியர்களும் தான் சிறுவர்களின் கல்வியை நன்கு கவனிக்க முடியும் என்பது ஆசானின் கணிப்பு. அவர் விடுமுறையில் காரைக்குடியில் இருந்த பொழுது எழுதி வெளியிட்ட கட்டுரைகள் சிலவற்றை தேர்ந்தெடுத்து ஒரு கட்டுரை தொகுப்பு நூல் வெளியிட்டால் பட்டப் படிப்பிற்கு வைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என்ற நினைப்பு ஆசானை அந்த முயற்சியில் ஈடுபடுத்தியது. இவர் தனது கட்டுரை தொகுதிகளை தொகுத்து **அறிவுக்கு விருந்து** என்ற பெயரில் வெளியிட்டார். இது அவரது 15ஆவது வெளியிடாகும். இந்நூல் பின்னர் பாடநூலாகவும் அமைந்தது.

திருப்பூரில் இருந்து கே ஆர் சுப்பிரமணியம் என்ற ஒரு சோதிடர் ஆசானை ஒரு முறை பார்க்க வந்தார். அவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு திருவேங்கடவனை பற்றி ஒரு சிறு கவிதை நூல் படைத்துள்ளேன். அதனை தாங்கள் வெளியிடுமாறு தங்களைக் காண வந்துள்ளேன் என்றார். அதற்கு ஆசான் நான் மிகச் சிறியவன் வேறு யாராவது பெரியவர்களை

பார்த்து அவர்களைக் கொண்டு வெளியிடுதல் சிறந்ததல்லவா என்று கூறினார். உடனே அவர் திருப்பூர் புருடாத்தமநாயுடு அவர்களை நாடி சென்றதாகவும் அவர்தான் ஆசானை பார்க்க சொன்னதாகவும் கூறினார். உடனே ஆசான் மிகுந்த மகிழ்ச்சியுற்றார்.

ஆசானை தன்னைவிட உயர்ந்தவர் என்று அவர் கூறியதை கேட்கும்போது ஒரு பக்கம் நாணமும் மற்றொரு பக்கம் மகிழ்ச்சியும் அவருக்கு உண்டாயின. பின்னர் தனியாருக்கு சொந்தமான "நாரத மந்திரம்" என்ற விடுதியில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது திரு புருடோத்தம நாயுடு அவர்களை நினைத்த வண்ணம் தலைமைப் பொறுப்பு ஏற்றார் ஆசான். சிறிய கூட்டமாக இருந்தாலும் பக்தியுடன் வெளியீட்டு விழா நடைபெற்றதால் கே ஆர் சுப்பிரமணியத்தின் உள்ளம் குளிர்ந்தது. தனது பிரார்த்தனையை நிறைவேற்றியமை கண்டு அவர் பெரு மகிழ்ச்சி அடைந்தார்.

தமிழாசிரியர் திரு துரைசாமி அய்யர் என்னும் தலைமை ஆசிரியர் டாக்டர் உ வே சாமிநாதநாத ஐயருடன் தொடர்புடையவர். அக்காலத்தில் கல்வியாளர்கள்டையே பெருமதிப்புடன் திகழ்ந்தவர். சேமித்து வைத்திருந்த அரிய நூல்கள் இவர் வீட்டு நூலகத்தில் ஏராளமாக இருந்தன. இவருடைய இருகுமாரர்களும் வேறு பெரிய அலுவல்களில் சேர்ந்து விட்டமையால் இந்த நூலகம் போற்றுவாரற்றுக் கிடந்தன. இவர்தம் குமாரர்கள் இருவரும் இந்த வீட்டு நூலகத்தை புதிதாக தொடங்கப் பெற்ற திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் சேர்ப்பிக்க எண்ணி துணைவேந்தர் பேராசிரியர் எஸ் கோவிந்தராஜுலு நாயுடுவிற்கு கடிதம் எழுதினார்கள். துணைவேந்தர் ஆசானை அனுப்பி உயர்ந்த தரமான இலக்கண இலக்கியங்களை மட்டும் பொறுக்கி எடுத்துக் கொண்டு வருமாறு என்று கூறினார். ஆசானும் அவ்வாறே சென்று 200 நூல்களுக்கு மேல் தேர்ந்தெடுத்தார். தான் தயாரித்த பட்டியலை தந்து நூல்களை இரண்டு மூன்று கட்டுகளாக அழகாக கட்டி கோணியால் தைத்து மூடி லாரியில் சேர்ப்பித்து மேற்படி லாரி பற்று சீட்டைப் பெற்றுக் கொண்டு திருப்பதி வந்து சேர்ந்தார் ஆசான். மூன்று நாட்களில் நூல்கள் பாதுகாப்பாக பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர்ந்தன. நூல்கள் வந்து சேர்ந்தமைக்கு பல்கலைக்கழகத்திற்கு ஒரு அறிக்கை அனுப்பி வைத்தார் ஆசான். நூலகரையும் நூல்களைப் பெற்றுக் கொண்டமைக்கு ஒரு கடிதம் அனுப்புமாறு செய்தார். பின்பு இந்நூல்கள் பல்கலைக்கழக நூலகத்தில் வைக்கப்பெற்றன.

ஆசான் துணைவேந்தர் அவர்களை நேரில் சந்தித்து பயணத்தையும், நூல்கள் பொறுக்கி எடுப்பதில் ஏற்பட்ட சிரமத்தையும் நூல்கள் கட்டமைக்க பெற்று நூலகத்திற்கு வந்து சேர்ந்த

விவரங்களையும் தெரிவித்தார் ஆசான். துணைவேந்தர் ஜாதிப் பற்றாளராக இருந்தாலும் பிற ஜாதியினரின் திறமையை போற்றுபவர். இவர் காலத்தில் பல்வேறு ஜாதியினர் பல்வேறு பணிகளில் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்று இருந்தனர். எல்லோருமே இவரிடம் நல்ல மதிப்பு வைத்திருந்தனர். இவரும் எல்லோர் பாலும் அன்பு காட்டினார். இவர் காலத்தில் பல்கலைக்கழகம் ஒரு சிறந்த குடும்பம் போல் இயங்கி வந்தது என்பதற்கு இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

“இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்”

என்ற வள்ளுவர் பெருமான் கூற்றை நடைமுறையில் இவர் அற்புதமாக கையாள்வது பலமுறை கண்டு ஆசான் மகிழ்ந்ததுண்டு.

ஆசான் அவர்கள் தமிழ்த்தொண்டை துறை உருவாக்கினதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. ஆசான் திருப்பதியிலும் அதைச்சுற்றியுள்ள நகரங்களிலும் தமிழ்ச்சங்கங்களை தோற்றுவித்தார். மொழிவழி மாநிலங்கள் பிரிந்தபின் வடவேங்கடப் பகுதிகளில் தமிழ் கொஞ்சம் கொஞ்சமாகச் சாவதைப் பார்த்து, இப்பகுதிகளில் எப்படியாவது தமிழ் மக்கள் தமிழ் உணர்வோடு வாழ வேண்டும் என எண்ணி **பாக்காலா, சித்தூர், திருப்பதி, புத்தூர், நகரி, குந்தக்கல்** ஆகியவிடங்களில் படிப்படியாகத் தமிழ்ச் சங்கங்களை ஏற்படுத்தி அங்குள்ள தமிழர்களை ஊக்குவித்திருக்கிறார். ஆசான் அவர்கள் இத்தமிழ்ச் சங்கங்களைத் தமக்குச் சிறந்த இலக்கிய மேடைகளாகப் பயன்படுத்திக் கொண்டதோடு நில்லாது, இவைகளைத் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை ஏற்படத் துணைக் கருவிகளாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

தமிழ் வளர்ச்சிக்காக தமிழக அரசின் மானியம் பெறுவதற்கு என்று எடுத்த முயற்சி சரிப்பட்டு வரவில்லை. பிஎச்.டி பதிவு பெறுவதற்கு மேற்கொண்ட முயற்சியும் பலன் அளிக்கவில்லை. காரைக்குடியில் தொடங்கிய அறிவியல் பணியை ஆசான் மேற்கொள்ளத் துணிந்தார். அவருக்குத் தேவையான அறிவியல் நூல்களை சென்னை அமெரிக்க நூலகம் அனுப்பி உதவியது. சிறுவர்களுக்கு விளக்கமாக இருக்கும் பொருட்டு **இளைஞர் வானொலி** என்ற ஒரு சிறிய நூலை எழுதத் தொடங்கினார். உலக முன்னேற்றத்திற்கு அறிவியல் மிக மிக இன்றியமையாதது என்று சொல்லத் தேவையில்லை. அது பல துறைகளாகப் பரந்துள்ளது.

பிஎச்.டி., க்கு பதிவு பெறுவதற்கு மறுத்த துணைவேந்தரிடம் கும்பகோணம் வழியை கையாள வேண்டியதுதான் என்று சொல்லி வந்து விட்டோமே, இனி என்ன செய்வது என்று ஆசானின் மனம் உழன்று கொண்டிருந்தது. தீவிரமாக சிந்தித்துக் கொண்டு இருந்தது. சிந்தனையில் இருந்த இந்த டாக்டர் பட்டம் இதுகாறும் ஆசானை நன்றாக சிந்திக்க வைத்தது. இது காறும் ஆசானுக்கு துணை செய்தவர் ஒருவரும் இல்லை. காரைக்குடி திரு சா கணேசனை தவிர அந்த யானை முகக் கடவுளே இவர் வடிவாக வந்து ஆசானை ஆட்கொண்டதாக அதிராத நம்பிக்கை கொண்டார். இந்த அதிராத நம்பிக்கை ஆசானை விட்டு அகலவில்லை. திக்கற்றவருக்கு தெய்வமே துணை என்று ஆசானின் வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கண்டதுண்டு.

கும்பகோணத்தில் உள்ள ஓமியோபதி முறை ஆய்வுக் கழகம் ஆசானின் நினைவிற்கு வந்தது. அதில் பதிவு செய்து கொண்டு அஞ்சல் வழியாக மருத்துவ கல்வி பெற்றார் ஆசான். ஒரு டிசம்பர் (1963) மாதத்தில் தேர்வு எழுதுவதாகக் கருதி அவர் பெயரை குறிப்பிட்டு கும்பகோணத்திற்கு அனுப்பி வைத்தார் ஆசான். எண்ணியபடி டிசம்பரில் தேர்வு எழுதி வெற்றி பெற்றார். பிப்ரவரியில் (1964) ஆசானுக்கு ஓமியோபதி டாக்டர் பட்டமும் வழங்கப்பட்டது. ஒரு நாள் மார்ச் மாதத்தில் இப்பட்டத்தை எடுத்துக்கொண்டு வழக்கம் போல் காலை 8 மணிக்கு துணைவேந்தர் இல்லத்திற்கு சென்று அவரை சந்தித்தார் ஆசான். சான்றிதழை அவர் முன்வைத்து , இதுதான் கும்பகோணம் வழி டாக்டர் பட்டம் வாங்கி விட்டேன். உங்கள் பட்டம் இனி தேவையில்லை என்றார் ஆசான். வியப்பும் வேடிக்கையும் கண்ட துணைவேந்தர், மிஸ்டர் ரெட்டியார் உங்கள் உண்மையான கவலையையும், ஆர்வத்தையும் உணர்ந்தேன் என்றார். இப்பொழுதே விண்ணப்பியுங்கள் என்றார். 1964இல் திருவேங்கடப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆலோசனைப்படி வடமொழித்துறையில் பணியாற்றிய துணைப்பேராசிரியர் டாக்டர் கே.வி.வரதாச்சாரியாரின் நெறியாளுகையுடன் பதிவு செய்து கொண்டார் ஆசான். பணியாற்றிய தலத்திற்கும், வழிகாட்டியாக அமைந்தவருக்கும், ஆசானின் மன நிறைவுக்கும் பொருத்தமான “நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் தத்துவம்” என்ற தலைப்பை ஆய்வுப் பொருளாக தேர்ந்தெடுத்துக் கொண்டு ஆராய்ச்சியினை துவங்கினார்.

ஐந்தாண்டுகள் சிரமப்பட்டு அனைவரின் ஒத்துழைப்போடு ஆராய்ந்து 1968ஆம் ஆண்டு இறுதியில் பிஎச்.டி. ஆய்வை முடித்துவிட்டார் ஆசான். ஆசான் கட்டுரையை ஆங்கிலத்தில் தான் எழுதினார். இனி தட்டச்சு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது தான். அப்பொழுது கல்லூரி அலுவலகத்தில் பணியாற்றிக்கொணடிருந்த பி இராமச்சந்திரனை தட்டச்சு

செய்யுமாறு கேட்டார் ஆசான். இருவரும் கலந்து யோசித்து தட்டச்சு வேலையில் சில நீதிகளை கடைபிடிப்பது என தீர்மானித்தனர். அவை தாளை பயன்படுத்துவது, மைத்தாளில் உயர்ந்த ரகத்தை பயன்படுத்துவது, ஐந்து படிகளுக்கு ஒரு முறை தாளை மாற்றுவது, கருப்பு வண்ண நாடாவை பயன்படுத்துவது, 100 பக்கம் அடித்ததும் நாடாவை அகற்றுவது, மிக கவனமாக அடிப்பது, பக்கத்திற்கு இரண்டு பிழைக்கு மேல் வந்துவிட்டால் அப்பக்கத்தை திரும்ப அடிப்பது என்பவை. திரு. பி இராமச்சந்திரன் மிக அக்கறையுடன் இப்படியே செய்தார். பிழைகளின்றியே இத்திருப்பணியை நிறைவு செய்தார். கட்டுரை நூல் முகம், உள்ளுறை, பின் இணைப்புகளுடன் 1200 பக்கங்களில் அமைந்தது. இதனை இரண்டு பகுதிகளாக கட்டமைத்தார் ஆசான். திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் ஆய்வு கட்டுரை அமைவதில் பக்கவரம்பு இல்லையாதலால் கட்டுரை வளர்வதை தடுக்காமல் விட்டார் ஆசான். வைணவத்திற்கு ஒரு மூல முதல் நூலாக இருக்க வேண்டும் என்ற தொடக்கத்தில் திட்டமிட்டார் ஆசான். எம்பெருமான் திருவள்ளம்படி கட்டுரை நன்றாக அமைந்தது. ஆசான் தமிழத் துறையில் வேறு எவரும் இல்லாததனால் அடித்தவற்றை கையெழுத்து படியுடன் ஒப்பிட்டு படிப்பதில் துணை செய்வதற்கு ஒருவரும் இல்லை. பட்டப்படிப்பில் படித்து வந்த ஆசானின் மூத்த மகன், பத்தாம் வகுப்பில் நடுவண் அரசு உயர்நிலைப்பள்ளி படித்து வந்த இளைய மகன் இவர்களை ஓய்வு இருக்கும்போது பயன்படுத்திக் கொண்டு ஐந்தாவது படியில் திருத்தம் செய்து கொள்வார். ஆசான் இரண்டு பிழைகளுக்கு மேல் உள்ள பக்கங்களை திரும்பவும் ஐந்து படிகள் அவ்வப்போது அடிக்க செய்து விடுவார். அவற்றை உடனுக்குடன் சரி பார்த்து விடுவார். ஏனைய நான்கு படிகளையும் திருத்தம் பெற்ற ஐந்தாம் படியுடன் ஒப்பிட்டு திருத்தங்கள் இருப்பின் செய்து கொள்வார். பெரும்பாலும் திருத்தங்கள் இருப்பதில்லை.

ஆய்வு கட்டுரையை பல்கலைக்கழகத்திற்கு தருவதற்கு மூன்று மாதத்திற்கு முன்னர் ஆய்வாளர் தம்முடைய கட்டுரையை பற்றிய விரிவான குறிப்பை பல்கலைக்கழகத்திற்கு தருதல் வேண்டும்.

அச்சமயத்தில் நெறியாளர் ஆறு பெயர்களை முகவரியுடன் பல்கலைக்கழகத்திற்கு தருதல் வேண்டும. பல்கலைக்கழகமும் கட்டுரை எந்த புலனுக்கு உரியதோ அந்த புலனுக்குரிய பாடத்திட்ட குழுவின் தலைவருக்கு எழுதி ஆறு பெயர்களை முகவரியுடன் தருமாறு கேட்டு எழுதப்படும். அந்தப் 6 பெயர்களில் துணைவேந்தர் மூவரை தேர்ந்தெடுப்பார்.

அவர்களில் ஒருவர் தேர்வாளர் குழுவிற்குத் தலைவராக இருப்பார். பல்கலைக்கழக தேர்வு அதிகாரி இவ்விருவருக்கும் கட்டுரை குறிப்பை அனுப்பி அக்குறிப்புக்குரிய ஆய்வு கட்டுரையை மதிப்பீடு செய்தல் முடியுமா? அப்படி செய்வதற்கு ஒப்புக்கொண்டால் ஆய்வு கட்டுரை பற்றிய அறிக்கையை தர முடியுமா என்று கேட்டு எழுதி ஒப்புதல் பெற்றுத் தயாராக வைத்துக் கொண்டிருப்பார்.

ஆய்வாளரிடமிருந்து கட்டுரை படிகள் நான்கைப் பல்கலைக்கழகம் பெற்றதும் ஒரு படியை பல்கலைக்கழகம் தம்மிடம் இருத்திக்கொண்டு மூன்று படிகளை தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பீட்டாளர்கள் மூவருக்கும் அனுப்பி வைக்கும். அந்த மூவரில் மதிப்பீட்டாளர் இருவர் தம் மதிப்பீட்டு அறிக்கைகளை குழு தலைவருக்கு அனுப்பித் தாம் அனுப்பிய செய்தியை பல்கலைக்கழகத்திற்கும் தெரியப்படுத்துதல் வேண்டும்.

மதிப்பீட்டுக் குழுத் தலைவர் இரண்டு வாரத்திற்குள் தம் அறிக்கையுடன் ஏனைய இருவர் அறிக்கைகளை பார்த்து ஆய்ந்து தலைவர் அறிக்கையையும் மற்ற இருவர் அறிக்கைகளையும் சேர்த்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

மூவர் அறிக்கைகளும் ஒரு மனத்துடன் உடன்பாடு தெரிவித்தால் ஆய்வாளரின் ஆய்வை பல்கலைக்கழகம் ஒப்புக்கொண்டு வாய்மொழி தேர்வுக்கு வகை செய்யும். இவ்வாறான விதிகள் யாவும் நன் முறையில் வகுக்கப்பட்டிருந்தன. ஆசான் தன் கட்டுரையின் முடிவு விரைவில் தெரிய வேண்டும் என்று ஆவலாக எதிர்பார்த்து இருந்தார். அவ்வேளையில் மதிப்பீட்டாளர்களில் ஒருவர் கட்டுரை நீளமாக உள்ளது 250- 300 பக்கங்களில் சுருக்கி எழுதி திரும்ப சமர்ப்பிக்க செய்தால் நலம் என்று பல்கலைக்கழகத்திற்கு எழுதிவிட்டார். இதை ஓர் அறிக்கையாக அனுப்பாமல் பரிந்துரை போல் கடிதம் எழுதினார்.

ஆசானுக்கு விரைவில் டாக்டர் பட்டம் வர வேண்டும் என்று பல்கலைக்கழக அலுவலகத்தில் விழைந்தவர்கள் பலர். முதுமை காலத்திலாவது யாதொரு தடையும் இன்றி விரைவில் டாக்டர் பட்டம் பெற வேண்டும் என்று துடித்து நின்றவர்கள். தேர்வு துறையில் இங்கே ஆசானுக்காக விளைந்தவர்கள் பலர் என்றாலும் திரு.கங்கைய்ய நாயுடு என்பவர் குறிப்பிடத்தக்கவர். அவர் மதிப்பீட்டாளரின் கடிதத்தை கண்டு வெகுண்டு இந்த மதிப்பீட்டாளரை நீக்கி வேறு ஒருவரை அந்த இடத்தில் நியமிக்க வேண்டும். கட்டுரையை திருப்பி அனுப்புமாறு எழுத வேண்டும். கட்டுரையின் பக்க வரையறையை பல்கலைக்கழகம் சொல்ல வேண்டுமேயன்றி மதிப்பீட்டாளர் அல்லர் என்று தேர்வு அதிகாரிக்கு ஒரு குறிப்பு வைத்தார். அப்போது தேர்வு அதிகாரியாக பணியாற்றியவர் திரு.எம்.கும்பராவ் என்பவர்.

அவர் அந்த குறிப்பின் வேகத்தை குறைத்து எங்கள் பல்கலைக்கழகத்தில் ஆய்வு கட்டுரைக்கு பக்க வரையறை இல்லை. ஆதலால் இருக்கிறபடியே மதிப்பீடு செய்து ஒரு திங்களுக்குள் அறிக்கை அனுப்புங்கள் என்று அந்த மதிப்பீட்டாளருக்கு கடிதம் அனுப்பச் செய்தார்.

பிப்ரவரி - மார்ச்சுக்குள் அறிக்கைகள் பல்கலைக்கழகம் வந்து சேர்ந்து விட்டன என்றும் குழுத் தலைவர் வாய்மொழி தேர்வு தேவையில்லை என்று எழுதி விட்டதாகவும் பின்னர் தெரியவந்தது. இதனை முன்னரே உசாவியறிந்து மேற்படி அறிக்கைகளை ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஆட்சி குழு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கச் செய்திருக்கலாம். இத்திசையில் முடியவில்லை. அந்தக் கூட்டம் அனந்தபூரில் நடைபெற்றது என்றும் அந்தக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேரவில்லை என்றும் பின்னர் தான் தெரியவந்தது. இவ்வாறெல்லாம் பல்வேறு எதிர்நீச்சலிட்டு மதிப்பீட்டு குழுவிடம் இருந்து பரிந்துரை வரப்பெற்றது.

ஆசானின் ஆய்வேடு பல்கலைக் கழகத்தில் சமர்ப்பிக்கப்பெற்றது. முடிவில், மதிப்பீட்டு குழுவிடம் இருந்து பரிந்துரை செய்யப்பட்டு ஆசானின் கனவு 52 வயதில் 1969இல் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தப்பின் ஆசானின் டாக்டர் பட்டம் வெகு நாள் கனவு நிறைவேறி டாக்டர் பட்டம் பெற்றார். கும்பகோணம் மருத்துவத்தின் வாயிலாகத்தான் ஆசானுக்கு முனைவர் பட்டம் பல்கலைக்கழகத்தில் கிடைக்கபெற்றது. நாத முனிவர்களால் கண்டெடுக்கப்பட்ட ஆழ்வார் பாசுரங்களை ஐந்தாண்டுகள் ஆழங்கால் பட்டு இந்த பாசுரங்களைப் பற்றி **'Religion and philosophy of Nalayira Divya Prabandham with special reference to Nammalvar'** என்ற ஆங்கில நூலை 1200 பக்கங்களில் எழுதி வெளியிடும் பேறு ஆசானுக்கு கிடைத்தது. தமிழ்த் துறையில் முதன் முதலில் முனைவர் பட்டம் பெற்றவர் எனும் சிறப்பினைப் பெற்றவர் ஆசான்தான். இவ்வாய்வேடு இன்றளவும் வைணவ உலகில் பாராட்டுதற்குரிய அரிய குறிப்பு நூலாக போற்றப்பெற்று வருகின்றது.

ஆய்வேட்டின் 32 இயல்கள் ஆறு பகுதிகளில் தொகுக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பகுதியும் தன்னகத்தே உள்ள இயல்களின் சுருக்கத்தை கொண்டுள்ளது. 5234 மேற்கோள்கள் ஆய்வேட்டில் பயன்படுத்தப் பெற்றுள்ளன. அவை இங்கு மிகச்சுருக்கமாக தரப்பெற்றுள்ளன.

Sec. No.	Title of Sections	Chapter Nos.	No. of Citations
I	Introduction	1	32
II	Pre-Alwar Period	2,3,4,5,6,7,8	1174

III	A Prefatory Study of the Nalayiram	9,10,11,12	454
IV	Vaishnavite Religion & Philosophy of the Nalayiram	13,14,15,16,17,18,19, 20, 21,22,23,24,25,26	2806
V	Post-Alvar Period	27,28,29,30,31	685
VI	Conclusion	32	83

இவ்வாய்வேட்டிற்கு, ஆசான் 300க்கும் மேற்பட்ட நூல்களை பயன்படுத்தியுள்ளார். அவையாவன:

Bibliography					
No.	**Nature of Source**	**No. of Books**	**No.**	**Nature of Source**	**No. Of Books**
01	Tamil works	79	06	English works	82
02	Manipravala works	13	07	Tamil & French	1
03	Telugu works	2	08	Manuscripts	22
04	Sanskrit works	94	09	Journals	7
05	Hindi & Sanskrit	1	10	Dictionary & Lexicon	6

ஆசான் தன் முனைவர் பட்ட ஆய்வு நூலை வெளியிட முயற்சிகளை மேற்கொண்டார். பின்னர், 1977ல் பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதியுதவி பெற்று 960 பக்கங்களில் திருவேங்கடவன் பல்கலைக்கழகம் வெளியிட்டது. திரு SA அனந்தசயனம் அய்யங்கார் அவர்களின் அணிந்துரையுடன் 1977ல் வெளியிடப் பெற்ற நூல் தத்துவமேதை சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு அன்புப்படையலாக்கப் பெற்றுள்ளது. இந்நூல் வைணவக் களஞ்சியம் என தமிழ் இலக்கிய உலகில் போற்றப்பெறுகின்றது. ஆசான் 1977ல் பதவி உயர்வு பெற்றார் பேராசிரியராக.

எம்பெருமானின் கருணைத் திறத்தை நம்மால் அளவிட முடியுமா? தெய்வீக அருள் எப்படி நம்மிடம் வரும் என்பதைத் திட்ட மிட்டு வரைந்து காட்ட முடியாது. கர்ம புத்திரன் போல எந்த நிலையில் எது கிடைத்தாலும் துன்பத்தை சேர்த்து தான் அனுபவித்து அதுவும் எம்பெருமானின் அருள் தானே என பெருமிதம் கொண்டார் ஆசான். முனைவர் பட்டம் கிடைத்த பிறகு ஆழ்வார் பாசுரங்களில் உருகினார் ஆசான். கண்ணீர் ஆறாக பெருகிற்று. ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த 108 திருத்தலங்களில் 102 திருத்தலங்களை குடும்பத்தோடு சென்று சேவித்தார் ஆசான்.

ஆய்வேடு ஆங்கிலத்தில் எழுதப்பெற்றிருந்தாலும், ஆய்வைச்சார்ந்து வெளியிடப்பெற்ற ஆறு நூல்களும் தமிழில் எழுதப் பெற்றவை. அவையாவன:

1) மலைநாட்டுத் திருப்பதிகள் (1971)
2) தொண்டைநாட்டுத் திருப்பதிகள் (1976)
3) பாண்டிநாட்டுத் திருப்பதிகள் (1977)
4) வடநாட்டுத் திருப்பதிகள் (1980)
5) சோழநாட்டுத் திருப்பதிகள் - 1 (1981)
6) சோழநாட்டுத் திருப்பதிகள் - 2 (1981)

பிள்ளைப்பெருமாள் அய்யங்காரின் வெண்பா,

ஈரிருப தாம்சோழம்
ஈரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாம்மலைநா(டு)
ஓரிரண்டாம் - சீர்நடுநாடு
ஆரோடு ஈரெட்டுத்தொண்டை
அவ்வடநா(டு) ஆறிரண்டு
கூறுதிரு நா(டு)ஒன்றாக்
கொள்.

என்று கூறிய 108 திருத்தலங்களை இந்த ஆறு நூல்களும் நம் கண் முன்னே காட்டி நம்மை மகிழ்விக்கின்றன. இந்த ஆறு நூட்களை வெளியிட திருமலை திருப்பதி தேவஸ்தானம் (திருப்பதி, ஆந்திர மாநிலம்) நிதி வழங்கியுதவியது.

தன் குடும்பத்தோடு இத்திருப்பதிகளுக்குச் சென்று பெற்ற அநுபவங்கள் தமிழ் மக்கள் அனைவரையும் சென்றடையும் வகையில் ஆசான் இந்நூல்களை தமிழில் எழுதி வெளியிட்டார். ஆழ்வார்கள் பன்னிருவர்களின் பாசுரங்கள், அவைகளின் பக்திச் செருக்கு, 108 திருத்தலங்களின் பெருமைகள், ஆசானின் பக்திப்பயணம், வைணவ சமயத் தத்துவங்கள் ஆகியவற்றை இந்நூல்கள் வாரி வழங்குகின்றன. இந்த ஆறு நூல்களுக்கும் ஆறு நீதியரசர்கள் அணிந்துரைகள் நல்கி பெருமை சேர்த்துள்ளனர். பேராசிரியர் ஆய்வுசெய்த காலகட்டம்: 1965-1969; நூல்கள் எழுதி வெளியிட்ட காலகட்டம்: 1971-1981 ; சென்ற திருத்தலங்கள் 102.

திருத்தலங்களின் பெருமைகளை எடுத்து விளக்கியிருக்கும் பாங்கு நம்மையே அறியாமல் அவைகளுக்குச் சென்று பார்த்து வரவேண்டுமென்ற எண்ணத்தை நம்மிடம் தோற்றுவிக்கின்றது. இந்நூல்களை வாசிப்போர் இத்திருப்பதிகளை பேராசிரியரோடு தரிசிக்கின்ற “மறந்தும் புறந்தொழா மாந்தராய்” மாறி விடும் மன நிலையை அடைகின்றனர். மேலும், ஆசான் வைணவக்கருத்துகள் பலவற்றை நூலை வாசிப்போர் மனதில் தெளித்து

அவர்களது சமயக் கருத்துகளை கிளறுகின்றார். இந்நூல்களை வாசிப்போர் அனைவரும் இவருடன் பயணத்தை மேற்கொண்டு இத்திருத்தலங்களையெல்லாம் சேவித்த பேற்றைப் பெற்றுவிட்டதான திவ்விய அநுபவத்தைப் பெறுகின்றார்கள். மலைநாட்டுத் திருப்பதிகள் என்ற நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் நீதியரசர் எஸ் மகாராஜன் ஆசானின் எழுத்தாற்றலை இவ்வாறு கூறி மகிழ்கின்றார்.

> **"மலைநாட்டுத் திருப்பதிகளுக்கு நம்மை அழைத்துக் கொண்டு போவதுபோல் பாசாங்கு செய்யும் இவ்வாசிரியர், உண்மையில் வைணவ சமய தத்துவங்கள், பக்தி நிலைகள், மரபுகள் இவற்றையெல்லாம் நமக்குச் சுற்றிக் காட்டி விடுகின்றார்."**

இந்நூல்களின் சிரீய சிறப்பியல்புகளை அனைவரும் அறியும் பொருட்டு, அவற்றின் தரவுகள் இங்கு சுருக்கமாக தரப்பெறுகின்றன.

1) மலைநாட்டுத் திருப்பதிகள் (13 திருத்தலங்கள்)
(சென்ற காலகட்டம்: ஜூன் 1969)

எண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங்கள்
01	திருவண்பரிசாரம்	திருவாழ்மார்பன் கமலவல்லி நாச்சியார்	நம்மாழ்வார்	1
02	திருவட்டாறு	ஆதிகேசவப்பெருமாள் மரகதவல்லி	நம்மாழ்வார்	11
03	திருஅனந்தபுரம்	அனந்தபத்மநாபன் ஸ்ரீக்ஷஹரிலட்சுமி	நம்மாழ்வார்	11
04	திருவாறன்விளை	திருக்குறளப்பன் பத்மாசனி	நம்மாழ்வார்	11
05	திருச்செங்குன்றூர்	இமையவரப்பன் செங்கமலவள்ளி	நம்மாழ்வார்	11
06	திருக்கடித்தானம்	அற்புத நாராயணன் கற்பகசல்லி நாச்சியார்	நம்மாழ்வார்	11
07	திருவல்லவாழ்	கோலப்பிரான் செல்வத் திருக்கொழுந்து நாச்சியார்	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்	22
08	திருவண்வண்டூர்	பாம்பாணையப்பன் கமலவள்ளி நாச்சியார்	நம்மாழவார்	11
09	திருப்புலியூர்	மாயப்பிரான் பொற்கொடி நாச்சியார்	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்	12
10	திருகாட்கரை	காட்கரையப்பன் வாத்ஸல்யவல்லி	நம்மாழ்வார்	11
11	திருமூழிக்களம்	திருமூழிக்களத்தான் மதுரவேணி நாச்சியார்	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்	14

12	திருவித்துக்கோடு	உய்யவந்த பெருமாள் வித்துக்கோட்டுவல்லி நாச்சியார்	குலசேகராழ்வார்	10
13	திருநாவாய்	நாராயணன் மலர்மங்கை நாச்சியார்	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்	13

பேராசிரியரின் மலைநாட்டுத் திருப்பதிகளின் பயண அநுபவங்களை நீதியரசர் எஸ் மகாராசன் அவர்களின் அணிந்துரை வாயிலாக காண்போம்:

> "வீரசைவ சமயத்தைச் சேர்ந்தவர் ஆசிரியர். ஆனாலும் வைணவத்தைப்பற்றிப் பேசும்போதும், எம்பெருமானைச் சேவித்து அவனுடைய பரம கலியாண குணங்களை எடுத்து விரித்துரைக்கும் போதும், அதிசயிக்கத்தக்க ஈடுபாட்டோடும், விரிந்து பரந்த மனப்பாங்கோடும், தன்னையே வைணவத்தோடு இரண்டும் ஒன்றும் அறக் கரைத்துக்கொள்கின்றார். ஆசிரியருடைய "நினைவும் சொல்லும் ஒருமைப்பட்டிருக்கையாலே" இந்த அரிய சாதனை அவருக்குக் கைவந்திருக்கின்றது.
>
> ... ...
>
> அர்ச்சாவதாரத்தை அநுபவிக்கக் கொடுத்து வைக்காதவர்கள் வானவர்கள். ஆகவே, வான நாட்டைத் துறந்து மண்ணுலகத்தில் வந்து பிறக்க விரும்புகிறார்கள் அவர்கள். "இங்குள்ளார் அங்குப் போவது மேன்மையை அநுபவிக்க, அங்குள்ளார் இங்கு வருவது சீல குணாநுபவம் பண்ணுகைக்கு" என்ற ஈட்டின் வாசகத்தை மேற்கோள் காட்டி இவ்வுண்மையை விளக்குகின்றார் ஆசிரியர்."

2) தொண்டைநாட்டுத் திருப்பதிகள்(24 திருத்தலங்கள்)

(சென்ற காலகட்டம்: ஜனவரி-பிப்ரவரி 1966, & அக்டோபர் 1968). நடுநாட்டிலுள்ள 2 திருத்தலங்கள் இங்கு சேர்க்கப்பெற்றுள்ளன.

எண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங்கள்
01	காஞ்சிபுரம்	வரதராஜப்பெருமாள் பெருந்தேவித்தாயார்	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார்	7
02	திருவெ.'.கா	சொன்னவண்ணம்செய்த பெருமாள் கோமளவல்லி	திருமழிசையாழ்வார் பொய்கையாழ்வார் பேயாழ்வார் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்	15
03	திருவட்டபுயகரம்	ஆதிகேசவப்பெருமாள் அலர்மேல் மங்கை	திருமங்கையாழ்வார் பேயாழ்வார்	12
04	திருநீரகம்	ஜகதீசப்பெருமாள் நிலமங்கைவல்லி	திருமங்கையாழ்வார்	1
05	திருப்பரமேச்சுர விண்ணகரம்	பரமபத நாதன் வைகுந்தவல்லி	திருமங்கையாழ்வார்	10

06	திருப்பாடகம்	பாண்டவ தூதர் ருக்மணி, சத்யபாமா	திருமழிசையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமங்கையாழ்வார்	6
07	திருநிலாத்திங்கள் துண்டம்	நிலாத்திங்கள் துண்டத்தான் நேரொருவரில்லாவல்லி	திருமங்கையாழ்வார்	1
08	திருக்கள்வனூர்	ஆதிவராகப்பெருமாள் அஞ்சிலைவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	1
09	திருவேளுக்கை	முகுந்தநாயகன் வேளுக்கைவல்லி	பேயாழ்வார் திருமங்கையாழ்வார்	4
10	திருத்தண்கா	தீபப்ரகாசர் மரகதவல்லி	திருமங்கையாழ்வார்	2
11	திருப்பவளவண்ணம்	பவளவண்ணப் பெருமாள் பவளவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	1
12	திருப்புட்குளி	விஜயராகவப்பெருமாள் மரகதவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	2
13	திருக்கடிகை	யோக நரசிம்மன் அமிருதவல்லித் தாயார்	பேயாழ்வார் திருமங்கையாழ்வார்	4
14	திருவெவ்வுள்	வீரராகப் பெருமாள் கனகவல்லித் தாயார்	திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார	12
15	திருநின்றவூர்	பக்தவத்சலர் என்னைப்பெற்ற தாயார்	திருமங்கையாழ்வார்	2
16	திருவல்லிக்கேணி	பார்த்தசாரதி ருக்மணி	பேயாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார்	12
17	திருநீர்மலை	நீர்வண்ணன் அணிமாமலர் மங்கை	திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார்	20
18	திருவிடவெந்தை	நித்யகல்யாணர் கோமளவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	13
19	திருக்கடன்மல்லை	ஸ்தலசயனப் பெருமாள் நிலமங்கை நாச்சியார்	திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார்	27
20	திருவகீந்திரபுரம்	தெய்வநாயகன் வைகுண்டவல்லி	திருமங்கையாழ்வார்	10
21	திருக்கோவலூர்	திரிவிக்கிரமன் பூங்கோவல் நாச்சியார்	பூதத்தாழ்வார் பொய்கையாழ்வார் திருமங்கையாழ்வார்	21
22	திருவூரகம்	ஊரகத்தான் அமுதவல்லி நாச்சியார்	திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார்	6
23	திருக்கார் வானம்	கள்வர் பெருமாள் கமலவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	1
24	திருக்காரகம்	கருணாகரப் பெருமாள்	திருமங்கையாழ்வார்	1

		பத்மாமணி நாச்சியார்		

பேராசிரியர் பெற்ற தொண்டைநாட்டுத் திருப்பதிகளின் பயண அநுபவங்களை நீதியரசர் என் கிருஷ்ணசாமி ரெட்டி அவர்களின் அணிந்துரை வாயிலாக கண்டு மகிழ்வோம்:

> "இந்நூலாசிரியர் பழுதறவோதிப் பகவானின் கருணை வெள்ளம் கோக்கப்பெற்றவர்கள். இத்திருப்பதிகளை நேரில் கண்டும் அவற்றின் மீதுள்ள திருப்பாசுரங்களைக் கற்றும் கேட்டும் துதித்தும் தாம் இயற்றியுள்ள **"தொண்டைநாட்டுத் திருப்பதிகள்"** என்னும் இந்நூலின் வாயிலாக இத்திருப்பதிகளின் சிறப்பைச் சொல்லிக்கொண்டே மானசீகமாக திவ்வியதேச யாத்திரைக்கு நம்மை இருப்பூர்திகளிலும், பேருந்துகளிலும் அழைத்துச் செல்கின்றார். திருக்கோயில்களிலுள்ள மதில்கள், மண்டபங்கள், மூர்த்திகள், தீர்த்தங்கள் இவற்றையெல்லாம் சுற்றிக்காட்டுகின்றார், சுட்டியும் உரைக்கின்றார். திருத்தலங்களின் வரலாறுகளையும் கூறுகின்றார். அத்துடன் நில்லாது ஆழ்வார் பெருமக்கள் மங்களாசாசனம் செய்து எம்பெருமான்களை அநுபவித்த நெஞ்சு நெக்குருகும் சில பாசுரங்களையும் பாடி நம்மையும் அவ்எம்பெருமான்கள் எம்பெருமாட்டிகள் இவர்களை எதிரே கொண்டு நிறுத்தி ஆனந்தக்கடலில் ஆழ்த்துகின்றார். இவற்றிற்கிடையே வைணவ சமயக்கருத்துகள் பலவற்றை நம் சிந்தையில் தூவி சிந்தனையையும் கிளறுகின்றார்.
>
> இந்த நூலினைப் பயிலும் நாமும், இந்த நூலாசிரியரின் துணையின்றியே, தனியாக நம் குடும்பத்துடன் திவ்விய தேச யாத்திரையை உண்மையிலேயே உடனே மேற்கொள்ளலாமா என்கின்ற எண்ணத்தை நம்மிடையே எழுமாறு தூண்டிவிட்டுக்கொண்டே நம்மையும் தம்முடன் அழைத்துச் செல்கின்றார். இந்நூலின் வாயிலாக நாமும் மானசீகமாக நம்முடைய திவ்வியதேச யாத்திரையை நிறைவு செய்து கொண்டோம் என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கின்றோம். அத்தகைய நூல் நிலைத்து வாழ்க."

3) பாண்டிநாட்டுத் திருப்பதிகள் (18 திருத்தலங்கள்)

(சென்ற காலகட்டம்: செப்டம்பர் 1965, & ஜூன் 1969)

எண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங்கள்
01	திருக்கோட்டியூர்	உரகமெல்லணையான் திருமாமகள் நாச்சியார்	திருமழிசையாழ்வார் பெரியாழ்வார் பேயாழ்வார் பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார்	39
02	திருமெய்யம்	சத்யகிரி நாதன் உய்யவந்த நாச்சியார்	திருமங்கையாழ்வார்	9
03	திருப்புல்லாணி	கல்யாண ஜகந்நாதன் கல்யாணவல்லி	திருமங்கையாழ்வார்	21
04	திருக்கூடல்	கூடலழகர் மதுரவல்லி	திருமங்கையாழ்வார் திருமழிசையாழ்வார்	2
05	திருமோகூர்	காளமேகப்பெருமாள் மேகவல்லி	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்	12

06	திருமாலிருஞ்சோலை	அழகர் சுந்தரவல்லி நாச்சியார்	ஆண்டாள் நம்மாழ்வார் பெரியாழ்வார் பேயாழ்வார் பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார்	128
07	ஸ்ரீவில்லிபுத்தூர்	வடபத்ரசயனர் ஆண்டாள்	பெரியாழ்வார் ஆண்டாள்	2
08	திருத்தண்கால்	அப்பன் அன்னநாயகி	பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார்	5
09	திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி)	ஆதிநாதப்பெருமாள் ஆதிநாதவல்லி	நம்மாழ்வார்	11
10	திருக்கோளூர்	வைத்தமாநிதி கோளூர்வல்லி நாச்சியார்	நம்மாழ்வார்	12
11	திருப்பேரை	மகரநெடுங்குழைக்காதவன் குழைக்காதுவல்லி நாச்சியார்	நம்மாழ்வார்	11
12	ஸ்ரீவைகுண்டம்	கள்ளப்பிரான் வைகுந்தவல்லி நாச்சியார்	நம்மாழ்வார்	2
13	வரகுணமங்கை	விஜயாசனர் வரகுணவல்லி	நம்மாழ்வார்	1
14	திருக்குளந்தை	மாயக்கூத்தன் குளந்தைவல்லி	நம்மாழ்வார்	1
15	திருப்புளிங்குடி	காய்சன வேந்தன் மலர்மகள் நாச்சியார்	நம்மாழ்வார்	12
16	திருத்தொலைவில்லி மங்களம்	தேவபிரான் உபயநாச்சிமார்கள்	நம்மாழ்வார்	11
17	சிரீவரமங்கை (வானமாமலை)	தெய்வநாயகன் சிரீவரமங்கை	நம்மாழ்வார்	11
18	திருக்குறுங்குடி	வைஷ்ணவ நம்பி குறுங்குடிவல்லி நாச்சியார்	நம்மாழ்வார் பெரியாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார்	40

ஆசான் துய்த்த பாண்டிநாட்டுத் திருப்பதிகளின் பயண அநுபவங்களை நீதியரசர் பா ச கைலாசம் அவர்களின் அணிந்துரை துணைக்கொண்டு உய்த்துணர்வோம்:

> “தேவகாரியம் செய்து வேதம் பயின்று வாழ்வோர்கள்” நிறைந்த திருக்கோட்டியூரிலேயே நமக்கு எட்டெழுத்து உபதேசம் ஆகிவிடுகின்றது. “புகல் ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே” என்ற சரணாகதி தத்துவம் தொடர்கின்றது. “சோராத காதல் பெருஞ் சுழிப்பால் தொல்லை மாலை ஒன்றும் பாராது” அவனுக்குப் பல்லாண்டு பாடும் பான்மையினை நினைத்து நெகிழ்கின்றோம். “தான் அறப்பெய்யும் காளமேகத்தைத் திருமாலிருஞ்சோலை மலையிலே அறு கால் வரி வண்டுகள் ஆயிரம் நாமம் சொல்லிச் சிறுகாலையிலே பாடும்” அருமையை அநுபவிக்கின்றோம். “மாயனை-மன்னு வடமதுரை மைந்தனை -

தூய பெருநீர் யமுனைத்துறைவனை - வாயினால் பாடி - மனத்தினால் சிந்தித்து - அறிவொன்றுமில்லாத ஆயர்குலத்துப் பெண்களின்” நிலையிலிருந்து அநுபவித்த ஆண்டாளின் அருள் வெள்ளத்திலே கும்மாளம் அடித்து விட்டு திருத்தண்காலூர் சென்று அப்பனைத் தரிசிக்கின்றோம்.

“இதுவோ திருநகரி ஈதோ பொருநை? இதுவோ பரமபதத்து எல்லை - இதுவோதான் வேதம் பகிர்ந்திட்ட மெய்ப்பொருளின் உட்பொருளை, ஓதும் சடகோபன் ஊர்” என்று நம்மை மறந்து ஆழ்வார் திருநகரிலேயே நின்று விடுகின்றோம்.

… … … … …

கீதையின் பதினெட்டு அத்தியாயங்கள் பதினெட்டு யோகங்களைச் சொல்வது போல இவர்தம் பதினெட்டுக் கட்டுரைகளும் பல்வேறு பக்தித் திருப்பதிகளின் பெருமைகளை விளக்குகின்றன. திருமந்திரத்தின் பெருமையை - நலந்தரும் சொல்லை - பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற எம்பெருமானின் ஐந்து நிலைகளை - பக்தி, பிரபத்தி வழிகளை பிரார்த்தம், சஞ்சிதம், ஆகாமியம் ஆகிய வினைகளின் தொகுதியை - எம்பெருமானின் திருமேனியாக வைணவ சித்தாந்தம் பேசும் சித்து அசித்து பற்றி - சகல வேத சாரத்தைத் தன்னுள்ளேயே அடக்கி வைத்துள்ள முதல் பதமாகிய பிரணவம் பற்றி மிகவும் எளிதிலே புரிந்து கொள்ளும் வகையில் மிக அழகாக விளக்கியிருக்கும் நேர்த்தி உள்ளத்தைக் கவர்கிறது. எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாத அழகிய தீந்தமிழ் உள்ளத்தின் ஆழத்திலே ஒரு குளுமையை ஏற்படுத்துகிறது. வைணவ நூல்களை எவ்வளவு ஆழமாகப் படித்திருக்கிறார் ஆசான்.”

4) வடநாட்டுத் திருப்பதிகள் (12 திருத்தலங்கள்)

(சென்ற காலகட்டம்: செப்டம்பர் 1968, & டிசம்பர் 1974)

எண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங்கள்
01	திருவேங்கடம்	திருவேங்கடமுடையான் அல்மேல்மங்கைத்தாயார்	நம்மாழ்வார் பெரியாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் ஆண்டாள் குலசேகராழ்வார் திருப்பாணாழ்வார் பேயாழ்வார் பூதத்தாழ்வார் பொய்கையாழ்வார்	202
02	சிங்கவேள்குன்றம்	நரசிம்மன் இலட்சுமி	திருமங்கையாழ்வார்	10
03	திருவயோத்தி	சக்ரவர்த்தி திருமகன் சீதா பிராட்டி	குலசேகராழ்வார் பெரியாழ்வார் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் தொண்டரடிப் பொடியாழ்வார்	13
04	திருநைமிசாரணியம்	தேவராஜன் ஶ்ரீஹரிலட்சுமி	திருமங்கையாழ்வார்	10
05*	சாளக்கிராமம்	ஶ்ரீமூர்த்திப்பெருமாள் ஶ்ரீதேவி நாச்சியார்	திருமங்கையாழ்வார் பெரியாழ்வார்	12

06*	திருவதரியாச்சிரமம்	பத்ரி நாராயணன் அரவிந்தவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார் பெரியாழ்வார்	22
07*	திருக்கண்டங்கடிநகர்	நீலமேகப்பெருமாள் புண்டரீகவல்லித்தாயாதர்	பெரியாழவார்	11
08*	திருப்பிரிதி	பரமபுருஷன் பரிமளவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
09	திருவடமதுரை	கோவர்த்தநேசன் சத்யபாமை நாச்சியார்	ஆண்டாள் தொண்டரடிப் பொடியாழ்வார் திருமங்கையாழ்வார் பெரியாழ்வார்	50
10	பிருந்தாவனம்	கிருஷ்ணன் ருக்மணி		
11*	திருத்துவாரகை	கல்யாண நாராயணன் கல்யாண நாச்சியார்	ஆண்டாள் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் பெரியாழ்வார்	13
12*	திருவாய்ப்பாடி	நவமோகன கிருஷ்ணன் ருக்மிணி பிராட்டி	ஆண்டாள் திருமங்கையாழ்வார் பெரியாழ்வார்	22
13**	திருநாடு (பரமபதம்)	பரமபத நாதன் பெரிய பிராட்டியார்	நம்மாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் பெரியாழ்வார் பேயாழ்வார் பொய்கையாழ்வார்	18

(*) ஆசான் செல்லாத திருத்தலங்கள்.

(**) மண்ணுலகில் இல்லாதது - விண்ணுலகில் உள்ளது.

ஆசான் சென்றும்/மனதிலும் துய்த்த வடநாட்டுத் திருப்பதிகளின் பயண அநுபவங்களை நீதியரசர் எஸ் சூரியமூர்த்தி அவர்களின் அணிந்துரை வாயிலாக நாமும் மனதால் சேவித்த பேற்றை பெற்றதாக மகிழ்ந்துணர்வோம்:

> "திருமந்திரப் பொருளுக்கு எல்லை நிலங்களாக இருப்பவை அர்ச்சாவதார எம்பெருமான்கள் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசங்களாகும். இங்கு எம்பெருமான் தன்னுடைய சுவாமித்துவத்தையும் சௌலப்பியத்தையும் புலப்படுத்திக் கொண்டு, அடியவர்கள் தம் உடம்பினால் கைங்கரியம் செய்து மகிழ்வதற்குப் பாங்காக எழுந்தருளியுள்ளான். வைணவர்கள் இவற்றை 108 என்று கணக்கிட்டுள்ளர்கள்"..

> "சைவ சமயத்தைச் சார்ந்த பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பல்லாண்டுகள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர். திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில், ஆழ்வார்கள் பாசுரங்களில் மிகவும் ஈடுபட்டுத் தம் மனத்தைப் பறிகொடுத்தவராதலால் வைணவ தத்துவத்தைப் பேசும்போதும், எம்பெருமானின் அநந்த கல்யாண குணங்களை எடுத்துரைக்கும் போதும், அவனுடைய வெற்றிச் செயல்களையும், வீரச் செயல்களையும் எடுத்துக் கூறும்போதும், வியக்கத்தக்க ஈடுபாட்டோடும், தோய்ந்த உள்ளத்தோடும், விரிந்த மனநிலையோடும் தம்மையே மறந்த நிலையை எய்தி விடுகின்றார்."

5) சோழநாட்டுத் திருப்பதிகள்-1 (20 திருத்தலங்கள்)
(சென்ற காலகட்டம்: செப்டம்பர் 1965, & ஜூன் 1968)

எண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங் கள்
01	திருவரங்கம்	இரங்கநாயகன் இரங்கநாயகி	பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் குலசேகராழ்வார் பெரியாழ்வார் ஆண்டாள் தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பாணாழ்வார்	247
02	திருஉறையூர்	அழகிய மணவாளன் வாஸலட்சுமி	குலசேகராழ்வார் திருமங்கையாழ்வார்	2
03	திருக்கரம்பனூர்	புருஷோத்தமன் பூர்வாதேவி	திருமங்கையாழ்வார்	1
04	திருவெள்ளறை	புண்டரீகாட்ஷன் பங்கயச்செல்வி	பெரியாழ்வார் திருமங்கையாழ்வார்	24
05	அன்பில்	வடிவழகிய நம்பி அழகியவல்லித் தாயார்	திருமழிசையாழ்வார்	1
06	திருப்பேர் நகர்	அப்பக்குடத்தான் இந்திராதேவி	பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் திருமழிசையாழ்வார் நம்மாழ்வார்	33
07	தஞ்சை மாமணிக்கோயில்	நீலமேகப் பெருமாள் செங்கமலவல்லி நரசிம்மர் தஞ்சை நாயகி மணிக்குன்றப் பெருமாள் அம்புஜவல்லி	திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் பூதத்தாழ்வார்	5
08	திருக்கண்டியூர்	கமலநாதன் கமலவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	1
09	திருக்குடந்தை	சாரங்கபாணி கோமளவல்லி	பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் பெரியாழ்வார்	51

			ஆண்டாள்	
10	திருவிண்ணகர்	ஒப்பிலியப்பன் பூமிதேவி நாச்சியார்	பேயாழ்வார் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் பொய்கையாழ்வார்	47
11	நந்திபுர விண்ணகரம்	விண்ணகரப் பெருமாள் செண்பகவல்லி	திருமங்கையாழ்வார்	10
12	திருநறையூர்	நறையூர் நம்பி நம்பிக்கை நாச்சியார்	திருமங்கையாழ்வார்	110
13	திருச்சேறை	சாரநாதன் சாரநாயகி	திருமங்கையாழ்வார்	13
14	திருவெள்ளியங்குடி	கோலவில்லி ராமன் மரகதவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
15	திருப்புள்ளம் பூதங்குடி	வல்வில் ராமன் பொற்றாமரையாள்	திருமங்கையாழ்வார்	10
16	திருஆதனூர்	ஆண்டளக் குமையன் ஸ்ரீரங்கநாயகியார்	திருமங்கையாழ்வார்	1
17	திருக்கவித்தலம்	கஜேந்திரவரதர் ரமாமணிவல்லி	திருமங்கையாழ்வார்	1
18	திருக்கண்ணங்குடி	ஷயாமளமேனிப் பெருமாள் அரவிந்தவல்லி நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
19	திருநாகை	ஸௌந்தரியராஜன் ஸௌந்தரியவல்லி	திருமங்கையாழ்வார்	10
20	திருக்கண்ணமங்கை	பக்தவத்ஸலப் பெருமாள் அபிஷேகவல்லித் தாயார்	திருமங்கையாழ்வார்	14

பேராசிரியர் ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்டு சென்றுவந்த சோழநாட்டுத் திருப்பதிகளின் பயண அநுபவங்களை நீதியரசர் ஜி இராமாநுஜம் அவர்களின் அணிந்துரை துணைக்கொண்டு துய்த்துணர்வோம்:

> “வைணவ சமயம் கூறும் அர்த்த பஞ்சக ஞானம் (பக். 31-33), சரீர-சரீரி பாவனை (பக்.36-39, 142-144), இதனை விளக்கும் ஈட்டாசிரியர் காட்டும் எடுத்துக் காட்டு (பக்.41-42), இறைவன் மூன்று காரணங்களாக இருக்கும் நிலை (பக்.46-47), பெரிய பிராட்டியாரின் புருஷகாரம் (பக்.68), நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தொகுக்கப் பெற்ற வரலாறு (பக்.75-76), வைணவ தத்துவ விளக்கம் (பக்.138-140), அழகின் தத்துவமே ஆண்டவன் தத்துவம் (பக்.152-155) போன்ற கருத்துகள் நூலினைப்

படிப்போருக்கு ஓரளவு வைணவ தத்துவம் பற்றிய சிறு சிறு விளக்கங்களாக அமைந்திருப்பது போற்றத்தக்கது. அங்காங்கு காட்டப்பெற்றுள்ள பாசுரங்களின் விளக்கம் படிப்போரிடம் பிரபந்தத்தைப் பயிலவேண்டும் என்ற அவாவை எழுப்புவதாக அமைந்துள்ளது. வியாக்யாதாக்கள் கூறியுள்ள குறிப்புகளைச் சுட்டி உரைத்திருப்பது வியாக்கியானங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையை நம்மிடம் தூண்டுகின்றது. சுருக்கமாகக் கூறினால் இந்நூல் படிப்போருக்கு ஆராவமுதமாய், தெவிட்டாத தெள்ளமுதமாய் இனிக்கின்றது என்று கூறின், அது மிகையாகாது."

6) சோழநாட்டுத் திருப்பதிகள்-2 (20 திருத்தலங்கள்)

(சென்ற காலகட்டம்: ஜூன் 1968)

எண்	திருத்தலம்	பெருமாள் தாயார்	மங்களாசாசனம்	பாசுரங்கள்
01	சித்திரக்கூடம்	கோவிந்தராஜர் புண்டரீகவல்லி	திருமங்கையாழ்வார் குலசேகராழ்வார்	32
02	காழிச்சீராம விண்ணகரம்	தாடாளன் மட்டவிழுங்குழலி	திருமங்கையாழ்வார்	10
03	திருஇந்தளூர்	சுகந்தவநநாதன் சந்திரசாம விமோசனவல்லி	திருமங்கையாழ்வார்	11
04	தலைச்சங்க நாண்மதியம்	நாண்மதியப்பெருமாள் தலைச்சங்க நாச்சியார்	திருமங்கையாழ்வார்	2
05	திருச்சிறுபுலியூர்	அருமாகடல் திருமாமகள் நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
06	திருக்கண்ணபுரம்	சௌரிராஜன் கண்ணபுரநாயகி	குலசேகராழ்வார் ஆண்டாள் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் பெரியாழ்வார்	128
07	திருவழுந்தூர்	ஆமருவியப்பன் செங்கமலவல்லி	திருமங்கையாழ்வார்	45
08	திருவெள்ளக்குளம்	கண்ணன் நாராயணன் பூவார் திருமகள்	திருமங்கையாழ்வார்	10
09	திருத்தேவனார்த் தொகை	தெய்வநாயகப்பெருமாள் கடல்மகள் நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
10	திருவண்புருடோத்தமம்	புருஷோத்தமர் புருஷோத்தம நாயகி	திருமங்கையாழ்வார்	10
11	வைகுந்த விண்ணகரம்	வைகுந்தநாதன் வைகுந்தவல்லி	திருமங்கையாழ்வார்	10
12	செம்பொன் செய்கோயில்	பேரருளாளன் அல்லிமாமலர் நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
13	திருத்தெற்றியம்பலம்	செங்கண்மால் செங்கமலவல்லி	திருமங்கையாழ்வார்	10
14	அரிமேய விண்ணகரம்	குடமாட கூத்தர் அம்ருதகடவல்லி	திருமங்கையாழ்வார்	10

15	திருவாலி திருநகரி	லட்சுமிநரஸிம்மன் அம்ருதகடவல்லி வேதராஜன் அமிருதவல்லி	திருமங்கையாழ்வார் குலசேகராழ்வார்	42
16	திருமணிமாடக்கோயில்	நந்தாவிளக்குப் பெருமாள் புண்டரீகவல்லி	திருமங்கையாழ்வார்	12
17	திருக்கூடலூர்	வையங்காத்தபெருமாள் பத்மாஸநவல்லி	திருமங்கையாழ்வார்	10
18	திருமணிக்கூடம்	மணிக்கூடநாயகன் திருமகள் நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
19	திருக்காவளம்பாடி	கோபாலகிருஷ்ணன் செங்கமல நாச்சியார்	திருமங்கையாழ்வார்	10
20	திருப்பார்த்தன்பள்ளி	தாமரையாள் கேள்வன் தாமரை நாயகி	திருமங்கையாழ்வார்	10

ஆசான் ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்டு சென்றுவந்த சோழநாட்டுத் திருப்பதிகளின் பயண அநுபவங்களை நீதியரசர் பு ரா கோகுலகிருஷ்ணன் அவர்களின் அணிந்துரை துணைக்கொண்டு அநுபவித்து மகிழ்வோம்:

> “சோழநாட்டுத் திருப்பதிகள் (இரண்டாம் தொகுதி) பேராசிரியர் டாக்டர் ந சுப்பு ரெட்டியார் அவர்கள் ஆராய்ச்சியின் விளைவிலே வெளிவருகிறது. உழைப்பால் உயர்ந்து, உள்ளத்தால் சிறந்து, செந்தமிழைச் சுந்தரத் தெலுங்கு நிலவும் நாட்டிலேயும் பரப்பிப் பெருமை கண்டவர் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள். அறிவியலைத் தவிர, தமிழிலேயும், குறிப்பாக வைணவ சமயத்திலேயும் அறிவாற்றலும், ஆழந்த ஈடுபாடும் கொண்டவர் ரெட்டியார் அவர்கள். சமய நூல்கள் செந்தழிழைப் பெரிதும் வளர்த்துள்ளமை நம் தமிழகத்தின் பாரம்பரியப் பண்பாடாகும். சைவ நெறியும், பௌத்த நெறியும், சமண நெறியும், வைணவ நெறியும் இன்பத்தமிழ் பாடி எண்குணத்தான் பெருமையினைத் தமிழிலே போற்றி மகிழ்ந்துள்ளது.
>
> “தெளியாத மறை நிலங்கள் தெளிய ஓதிய” பெருமை வைணவப் பாசுரங்களுக்கு மிக உண்டு. “வேதம் அனைத்திற்கும் வித்தாகும் கோதை தமிழை” வில்லிபுத்தூராரின் கோதையின் திருப்பாவையில் கண்டு மகிழ்கின்றோம். திருப்பதிக்கும், தென்மண்டலத்திலே இராமநாதபுர மாவட்டத்திற்கு மட்டும் வைணவம் சொந்தமல்ல. சோழநாட்டுத் திருப்பதிகளைக் கண்ணுறுங்கால் வைணவம் செழித்து வளர்வது நன்கு புலப்படும் என்பதனைப் பேராசிரியர் டாக்டர் ந சுப்பு ரெட்டியார் அவர்கள் சோழநாட்டுத் திருப்பதிகளை நம் கண்முன் தம் எழுத்தோவியத்தின் மூலம் சித்தரித்துக் காட்டுகின்றார். இந்நூலில் அருமையான வைணவ தத்துவங்களை எளிய நடையில் எல்லோருக்கும் புரியும் வண்ணம் எழுதியுள்ள பான்மை ரெட்டியார் அவர்களுடைய ஆழமான அறிவினை எடுத்துக்காட்டுகின்றது. “திராவிட சிசு” என்று ஆதிசங்கரரால் வழங்கப்பெற்ற சம்பந்தர் திருமங்கையாழ்வாரின் ஒரு குறளாய் இருநில மூவடிமண் வேண்டி என்ற ஒரு திருமொழியைக் கேட்டவுடன், வியந்து தமது வேலாயுதத்தை இவரது திருமுன் காணிக்கையாகச் சமர்ப்பித்தார் என்ற நிகழ்ச்சியைப் பேராசிரியரின் இந்த நூல் மூலம் அறிந்து வியப்புற்றேன்.”

துணைவேந்தர் நாயுடு அவர்கள் திறமையுள்ள பேராசிரியர்கள் எந்த வகுப்பினராக இருந்தாலும் அவர்களுடன் மதிப்புடனும் அன்புடனும் பழகுவார். அவர் ஆசானின் திறமையையும் உழைப்பையும் கண்டு சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு அனுப்பி வைத்தார். சென்னையில் நடைபெற்ற மொழிபெயர்ப்பு கருத்தரங்கில் நோக்கராக கலந்து கொண்டு ஆசான் ஓரளவு பயன் பெற்றார். தில்லியில் நடைபெற்ற உலக கருத்தரங்கில் ஒரு பேராளனாக கலந்து கொள்ள வேண்டும் என்றும் ஓர் ஆராய்ச்சி கட்டுரையை மாநாட்டில் திராவிட மொழிப் பகுதியில் படிக்க வேண்டும் என்றும் ஒரு பேரவா ஆசான்பால் எழுந்தது. சாதாரண விரிவுரையாளனாக இருக்கும் ஆசானை பல்கலைக்கழகம் அந்த மாநாட்டிற்கு அனுப்பாமல் புறக்கணிக்க கூடும் என்று ஐயமும் அவர் பால் எழுந்தது.

1963 ஆகஸ்ட் திங்களில் சென்னையில் மொழிபெயர்ப்பு பற்றி ஒரு கருத்தரங்கு நடக்க இருந்தது. இதற்கு ஆசானின் பெயரை பரிந்துரைக்க வேண்டும் என்று துணைவேந்தர் நாயுடு அவர்கள் முதல்வர் டாக்டர் புருஷோத்தம நாயுடு அவர்களுக்கு ஒரு குறிப்பு அனுப்பி இருக்க வேண்டும். நேரில் அல்லது தொலைபேசி மூலம் சொல்லி இருக்க வேண்டும். ஆகவே அவர் ஆசானின் பெயரை பரிந்துரைத்து கடித நகலை ஆசானுக்கும் அனுப்பி வைத்தார். அங்ஙனமே பல்கலைக்கழகமும் ஆசானை அந்த கருத்தரங்கிற்கு நோக்கராக அனுப்பி வைத்தது. கருத்தரங்கு சென்னையில் தென்னிந்திய மொழிகள் புத்தக நிறுவனம் தமிழக அரசு புத்தக வெளியீட்டு கழகம் ஆகிய இரண்டின் கூட்டுப் பொறுப்பில் மூன்று நாட்கள் நடைபெற்றது. மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஹோட்டலில் கூட்டங்களை அமைத்து இருந்தனர். ஆசான் மயிலை முனிவர் பன்மொழிப் புலவர் வேங்கட ராஜு செட்டியார் இல்லத்தில் தங்கி நாள்தோறும் கூட்டங்களுக்கு போய் வந்து கொண்டிருந்தார். பெரும் புலவர் ஆதலால் சாதாரண உலக செய்திகளை உரையாடும் போது கூட இலக்கிய இலக்கண குறிப்புகள் நடமாடும். அவற்றால் பெரும் பயனடைந்தார் ஆசான். நான்கு மொழிக்கும் நான்கு பேராளர்கள் பங்கு கொண்டனர். ஒவ்வொரு பல்கலைக்கழகமும் நோக்கர்களையும் பேராளர்களையும் அனுப்பி இருந்தன. திருவேங்கடவன் பல்கலைக்கழகம் ஆசானை மட்டும் அனுப்பி வைத்தது. தனியார் கல்லூரியில் பணியாற்றியிருந்தால் இத்தகைய தேசிய கருத்தரங்குகளில் கலந்து கொள்ள வாய்த்திடாது என்றும் ஆசானுக்கு இத்தகைய வாய்ப்புகளை நல்கி அனுபவம் பெற செய்ய வேண்டும் என்று துணைவேந்தர் கருதி இருக்க வேண்டும். இந்த கருத்தரங்கில் அறிவியல் ஆய்வு பண்பாட்டு துறை அமைச்சர் பேராசிரியர் உமாயூன் கபீரும், பல்கலைக்கழக மானிய ஆணையத் தலைவர் டாக்டர் கோதாரி

அவர்களும் கலந்து கொண்டனர். சென்னை மாநில நிதி கல்வி அமைச்சர் பக்தவச்சலம் அவர்கள் மாநாட்டை திறந்து வைத்தார்.

1964 இல் ஜனவரியில் 26ஆவது உலகு கீழ் திசை மாநாட்டுக் கருத்தரங்கு டெல்லி மாநகரில் நடைபெற இருந்தது. 1963 செப்டம்பர் முதற்கொண்டு இந்த மாநாடு குறித்து விளம்பரங்களும், சுற்றறிக்கைகளும், இந்திய துணை கண்டம் எங்கும் பரவத் தொடங்கின. இதற்கு முன் சென்னையில் நடைபெற்ற மொழிபெயர்ப்பு கருத்தரங்கில் நோக்கராக கலந்து கொண்டு ஓரளவு பயன் பெற்றவர் ஆசான் என்பதால், டில்லியில் நடைபெறும் உலக கருத்தரங்கில் ஒரு பேராளனாக கலந்து கொள்ள வேண்டும் என்றும், ஒரு ஆராய்ச்சி கட்டுரை மாநாட்டில் திராவிட மொழி பகுதியில் படிக்க வேண்டும் என்றும் ஒரு ஆசை ஆசானுக்கு எழுந்தது. துணிவை துணையாக கொண்டு துணைவேந்தர் நாயுடு அவர்களை சந்தித்து டில்லியில் நடைபெற இருக்கும் உலக கீழ் திசை மாநாட்டிற்கு தன்னை பேராளனாக அனுப்புமாறு வேண்டினார் ஆசான். முயற்சி சாதமாக இருக்கும் போல தோன்றியதால் எழுத்து மூலம் ஒரு விண்ணப்பமும் அனுப்பினார். தமிழ் துறையில் ஆசானையும், தெலுங்கு துறையில் மகாதேவ சாஸ்திரியையும், வடமொழித் துறையில், டாக்டர் கிருஷ்ணனையும் வரலாற்று துறையில் இராமாராவையும் பல்கலைக்கழகம் அனுப்பி வைத்தது.

இந்திராகாந்தி அம்மையாருக்கு அவர் பிறந்த நாள் பரிசாக ஒரு பாராட்டு மலர் அளிப்பதாக அலகாபாத்தில் இந்திய குடியரசுத் தலைவர் திரு வி.வி.கிரி அவர்களை தலைமை ஆதரவாளராக கொண்டு ஒரு தேசிய உயர்மட்ட குழு அமைக்கப்பட்டது. 1964 டில்லி மாநாட்டில் ஆசான் படித்த கட்டுரையை நினைவில் வைத்துக் கொண்டு 'The Concept of National and Emotional Integration in Ancient Tamil Literature' என்ற ஆங்கில ஆய்வு கட்டுரையை அழகாக தயாரித்துக் கொண்டு சென்றார் ஆசான். தென்பகுதி சார்ந்தவர்களுக்கு இந்திர பிரஸ்தம் என்ற பகுதியிலுள்ள பொருளாதார ஆய்வு நிறுவனத்து மாணாக்கர்குரிய உணவு விடுதியில் இடம் அளிக்கப்பட்டது. உணவிற்கும் தங்குவதற்கு நாளொன்றுக்கு ஒருவருக்கும் ஒன்பது ரூபாய் கட்டணமாக தர வேண்டும். தங்குவதற்கு இடம் இலவசமாக இருக்கும் என்று தோன்றியது. அரசே இடம் ஒதுக்கி தந்தது. ஒன்பது ரூபாயும் உணவுக்கு மட்டும் என்பது ஆசானின் யூகம். மிகச்சிறந்த முறையில் படுக்கை அறை தேநீர், காலை சிற்றுண்டி, மதிய உணவு, மாலை சிற்றுண்டி, தேநீர், இரவு உணவு ஆகியவை மிக உயர்ந்த முறையில் அளிக்கப்பட்டன. டிசம்பர் - ஜனவரி டெல்லியில் கடும் குளிர். உணவு விடுதியில் மின்சார முறையில் வெந்நீர் வசதி இருந்தது. ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறைகள் கொடுக்கப்பெற்றன.

மாநாடு விஞ்ஞான பவனியில் நடைபெற்றது. ஆசானும் அவரது நண்பர்களும் தங்கி இருந்த விடுதிக்கும் மாநாடு நடைபெற்ற இடத்திற்கும் எட்டு கிலோமீட்டர் தூரம். மாநாட்டு வளாகத்தில் தனியார் உணவு விடுதிகள் இருந்தன. ஆசானோடு நால்வரும் போக வர பத்து ரூபாய் பேசிக்கொண்டு மதிய உணவுக்கு விடுதிக்கு வந்து விடுவார்கள். ஏனெனில் மாநாட்டு வளாகத்தில் உள்ள விடுதிகளில் உணவு நன்றாக இல்லை. ஒருவேளை உணவுக்கு தலைக்கு ரூபாய் ஆறு வீதம் தர வேண்டி இருந்தது.

மாலை சிற்றுண்டியை மாநாட்டிலேயே சிறிது கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்டனர். மாநாடு 6 நாட்கள் நடைபெற்றது. பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் மாநாட்டை திறந்து வைத்தார். அப்பொழுதே அவர் உடலை உடல்நிலை சரியாக இல்லை. சில மாதங்களில் அவர் பரமபதம் அடைந்து விட்டார். மாநாட்டில் இந்தியவியல், வேத ஆய்வுகள், பாரம்பரியம், மதம் மற்றும் தத்துவம், வரலாறு மற்றும் கலாச்சாரம், நவீன இந்திய மொழிகள் மற்றும் மொழியியல் என்ற பிரிவில் உட்பிரிவுகளாக பிரிக்க பெற்று அவற்றுள் வரலாறு மற்றும் கலாச்சாரம் என்ற பிரிவில் ஆசானின் கட்டுரை இடம் பெற்றது.

இந்த உட்பிரிவிற்கு பன்மொழிப் புலவர் திரு தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் தலைவராக தேர்ந்தெடுக்கப்பெற்று இருந்தார். இவருடைய சீரிய தலைமையில் ஆசான் அவருடைய கட்டுரை படிக்கப்பெற்றது. குழுமியிருந்தோர் அனைவரும் ஆசானின் கட்டுரையை பாராட்டி பேசினர். ஆசானின் அரிய நண்பர் டாக்டர் இளந்திரையன் (டெல்லி பல்கலைக்கழக தமிழ்த்துறையில் பேராசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தவர்) கட்டுரைப் பொருளை பாகுபாடு செய்து எடுத்து கூறின முறை, படித்த முறை, இவை மிக அற்புதமாக இருந்தன என்று கைகுலுக்கி பாராட்டினார். தலைவரும் கட்டுரை மெச்சிப் பேசினார்.

காரைக்குடியில் 1960க்கு முன்னர் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் ஆசானின் மாணாக்கராக இருந்த திரு இசக்கி என்பவர் இந்திய செய்தி துறையில் ஒரு முக்கிய அலுவலராக பணியாற்றிக் கொண்டிருந்தார். ஆசானின் கட்டுரைப் புகழாரம் பெற்றது இவர் கைங்கர்யம் என்று ஆசானால் ஊகிக்க முடிந்தது. ஆசானின் ஆய்வு கட்டுரையைப்பற்றிய புகழ் மாலைகள் செய்தித்தாள்களில் முதல் இடம் பெற்றதால் வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள் அவருடைய கட்டுரையின் படியொன்று அனுப்புமாறு கேட்டு எழுதினர். ஆசான் மிகச் சிரமப்பட்டு கட்டுரையை படி எடுக்க செய்து 19 தூதரகங்களுக்கு அனுப்பினார். புகழ்பெற்ற அந்த கட்டுரை இன்னொரு முக்கிய பாராட்டு விழா மலர் ஒன்றில் இடம் பெற்றது.

மொழிவாரி மாநிலங்களாக பிரிய வேண்டும் என்ற அரசின் கொள்கைப்படி ஆந்திர பிரதேசம், கேரளா, கர்நாடகா மாநிலங்கள் சென்னை மாகாணத்திலிருந்து தனித்தனியாக பிரிந்தன. ஐதராபாத், திருவனந்தபுரம், பெங்களூர், என்ற மாநில தலைநகர்களிலும், தில்லியிலும் தமிழர்கள் வாழ்வதால் பல்கலைக்கழக மட்டத்திலும் சில கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழ் வாழ்கின்றது. தமிழ் மக்களும் பிழைப்பு நிறுத்தம் தம் பிள்ளைகளுக்கு கீழ் மட்டத்திலிருந்து மாநில மொழிகளையே பயிற்றுவிப்பதால் கீழ் மட்டத்தில் தமிழ் பயில்வது குறைந்து கொண்டே வருகின்றது. இவ்விடங்களில் நாளடைவில் பல்கலைக்கழக மட்டத்தில் ஆராய்ச்சி மட்டத்தில்தான் தமிழ் படித்து வாழும் என்பது ஆசானின் கணிப்பு. திருப்பதி தமிழகத்தில் சேர்ந்தது என்பது தமிழர்களின் வாதம். சென்னை ஆந்திரர்களுக்கு வேண்டும் என்பது ஆந்திரர்களின் கோரிக்கை. இதைப் பற்றியே பிரச்சினையே இப்பொழுது இல்லை. நம்முடைய அருமை இராஜாஜி தம்முடைய அரசியல் ஞானத்தால் ஒரு விதமாக தீர்த்து வைத்து விட்டார். திருப்பதி வாதத்திற்கிடமாக இருந்தபடியால், திருப்பதி ஆந்திரத்தில் இணைந்த பிறகு திருப்பதியில் வேர் மட்டத்திலேயே தமிழே இல்லாது செய்துவிட்டனர். தமிழ் படித்தவர்கள் கூட்டம் இருந்து கொண்டே இருந்ததால் இந்த பிரச்சனைக்கு உயிர் இருந்து கொண்டே இருக்கும் என்ற கருத்தை கொண்டே வேரில் வெந்நீர் ஊற்றியது போல் இந்த பிரச்சனையை எப்பொழுதும் எழும்பாது செய்துவிட்டனர்.

தேவஸ்தான கலைக் கல்லூரியில் தமிழ் கற்கும் வாய்ப்பு இருந்தது. அதனை அறவே அகற்றி விட்டனர். கீழ்த் திசை கல்லூரியில் தமிழ் வித்வான் வகுப்புகள் இருந்து வந்தன. அவற்றையும் இல்லாத ஒழித்தனர். இதை ஒரு குறையென்றோ குற்றம் என்றோ இப்போது பேசுவதில் பயனில்லை. பேசவும் வேண்டியதில்லை. ஆந்திரர்கள் நிலையில் தமிழர்கள் இருந்திருந்தால் இப்படித்தான் செய்திருப்பார்கள். இதைவிட வேகமாகவும் இரண்டு பங்கு அதிகமாகவும் செய்திருப்பார்கள். தமிழை அடியோடு ஒழித்துக் கட்டுவதற்கு தேவஸ்தான ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒரு நிர்வாக அதிகாரிக்கு பெரும் பங்கு உண்டு என்பதை திருப்பதியில் இருந்த காலத்தில் ஆசான் அறிந்தார். திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் முதல் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் பரந்த நோக்கமுடையவர். அவர் துணைவேந்தராக நியமிக்க பெற்று பணியாற்றி வந்தபோது, இந்த நிலையை நன்கு அறிந்திருந்தார். விரோத மனப்பான்மையோடு செயலாற்றுவதை விட தோழமைக் கொண்டு செயலாற்றினால் நிறைந்த பயன் உண்டு என்பதை நன்கு அறிந்தவர். திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை இருக்க வேண்டும் என்பது இவர்தம் நீள்நோக்கு. புதிய பல்கலைக்கழகத்தின் ஆட்சி பொறுப்பில்

தேவஸ்தானத்திற்குப் பெரும் பங்கு இருந்து வந்தது. பல்கலைக்கழக வளாகத்திற்கு நிலம் தந்தவர் திருவேங்கடமுடையான். தேவஸ்தான கல்லூரிக்கு சொந்தமாக இருந்த கட்டிடங்களையெல்லாம் தொடக்கத்தில் உதவியாக இருக்கும் பொருட்டுப் பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைத்தான். கலைக் கல்லூரிக்குக் கீழ்த் திசை கல்லூரியில் இடம் தரப்பெற்றது. சிறிய இடத்தில் இட நெருக்கடியால் இரண்டு கல்லூரிகளும் ஓரிடத்தில் சிரமப் பட்டதை ஆசான் நன்கு அறிவார்.

இக்கல்லூரிகட்கு எதிரே இருந்த உமாமகேஸ்வரி ரெட்டி குடியிருப்பில் ஆசான் குடும்பத்துடன் வாழ்ந்த போதும் (1960 - 1966), அப்பகுதியில் தீர்த்தக்கட்ட தெருவில் சிறிய அறையில் ஆசான் தனியாக வாழ்ந்த போதும் கலை கல்லூரியில் பணியாற்றிய திரு. லீலா கிருஷ்ணன், திரு ஏ.நடராஜன் என்ற இருவரும் ஆசானின் அரிய நண்பர்கள். அவர்களை பார்க்க அடிக்கடி போய் வந்து கொண்டிருந்தபடியால் கல்லூரிகள் இடம் நெருக்கடியால் சிரமப்பட்டதை காண முடிந்தது. இதனால் கலைக்கல்லூரி முதல்வர் எஸ்.நாகய்யாவும் கீழ்த்திசை கல்லூரி முதல்வர் சுதர்சன ஆச்சாரியாரும் ஆசானின் நெருங்கிய நண்பர்களானார்கள்.

அப்பொழுது தமிழ் வளர்ச்சிக்கான துணைச் செயலாளர் பதவியில் ஒருவர் ஒருவராக இருந்தவர்கள் பேராசிரியர் மு.இராச கண்ணனார், பெரும் புலவர் மு.ரா.பெருமாள் முதலியார். இவர்கள் இருவரையும் பலமுறை பார்த்து பேசியுள்ளார் ஆசான். இவர்கள் மனம் வைத்து கோப்புகளில் பலமான குறிப்புகள் எழுதி இருந்தால் மானியம் கிடைத்திருக்கும். கீழ் மட்டத்தில் எழுத்தர்கள் எழுதி வைக்கும் குறிப்புகளை பாராமல் பொறி போல் கைந்நாட்டு செய்து வந்தமை பின்னர் ஆசானுக்கு தெரிய வந்தது.

தமிழக அரசு பிற மாநிலங்களில் தமிழ் வளர்ச்சிக்காக நிதி வழங்கும் கொள்கை இருந்தது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் திருவேங்கடவன் பல்கலைக் கழக வளர்ச்சிக்கென்று முதலில் ஆண்டொன்றுக்கு மூன்று இலட்ச ரூபாயும், சில ஆண்டுகள் கழித்து ஆண்டொன்றுக்கு ஆறு இலட்ச ரூபாயும், இன்னும் சில ஆண்டுகள் கழித்து ஆண்டொன்றுக்கு பத்து இலட்ச ரூபாயுமாக வழங்கி வந்தது. தமிழ்த்துறைக்கு ஏதும் வழங்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பெறவில்லை. தமிழ் நாட்டு அரசின் மானியம் பெறுவதற்கான முயற்சி தொடர்ந்து கொண்டிருந்தது. ஒருமுறை தமிழக முதல்வர் அண்ணாத்துரையை காண முயற்சித்து வெற்றியடையவில்லை. ஆனால், தமிழகம்தான் முதன் முதலாக தமிழ் வளர்ச்சிக்கென்று மானியம் வழங்கும் கொள்கையை

வகுத்துக்கொண்டு தில்லி பல்கலைக் கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ10000மும், உஸ்மானியப் பல்கலைக் கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ25000மும், அலகாபாத், ஆக்ரா பல்கலைக் கழகங்கட்கு ரூ10000மும் வழங்கி வந்து கொண்டிருந்தது.

ஒவ்வொரு கட்டத்திலும் நல்வினை இல்லாது அவதிப்படும் நிலையை நினைத்து ஏங்கினார். திரு பி கே சுவாமிநாதன் அவர்கள் கோப்பு நகர்வதை கவனித்து ஆவணம் செய்வதாகக் கூறினார். புதிய துணைவேந்தராக டாக்டர் வேமனராவ் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் ஆசானை தமிழர் என்றே கருதுவார். திருப்பதிக்கு வந்த வேலை தொடங்கப் பெறவில்லையே என்ற கவலை ஆசானின் மனதில் அடிநாதமாக ஒலித்துக் கொண்டே இருந்தது. பேராசிரியர் எஸ் கோவிந்தராஜுலு நாயுடு ஆட்சி காலத்தில் அதனை நிறைவேற்ற முடியவில்லை. ஆனால் பிஎச்.டி.க்குப் பதிவு செய்து கொள்ள வேண்டிய வேலை முடிவுற்றது. பணியிலும் உற்சாகமாக இறங்கிவிட்டார். ஆனால் டாக்டர் வேமனராவ் அலுவலகத்தில் உள்ள சில நண்பர்களை கொண்டு தமிழக அரசுக்கு மானியம் கோரி ஒரு விண்ணப்பம் அனுப்ப ஏற்பாடு செய்து விட்டார்.

மறுபரிசீலனை செய்து திருவேங்கடவன் பல்கலைக்கழகத்திற்கு மானியம் வழங்க வேண்டும் என்ற விண்ணப்பம் பல்கலைக்கழகத்திலிருந்து தமிழக அரசுக்கு சென்று விட்டது என்று ஆசான் வாளா இருக்கவில்லை. தமிழக அரசு ஆணை சாதகமாக இல்லை என்று தெரிந்தும் கழக ஆட்சி குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் தேவஸ்தான ஆட்சி குழுவின் தலைவரும் நிர்வாக அதிகாரியும் இதில் தலையிட்டிருக்கலாம். திருப்பதியில் இருந்து கொண்டு பல்கலைக்கழகத்தை தொடர்ந்து தமிழக அரசுக்கு பல கடிதங்கள் எழுதினார். பல தடவைகள் நேரில் வந்து முதலமைச்சர் அறிஞர் அண்ணாவை பார்க்க முயன்றார் ஆசான். ஒவ்வொரு தடவையும் ஏதாவது ஒரு தடையினால் பார்க்க முடிவதில்லை. திரு சிலம்பொலியார் மூலம் அமைச்சர் முத்துசாமியை இது பற்றி அண்ணாவை அணுக செய்தார். இது பயன் தருவதாக ஆசானுக்குத் தெரியவில்லை. அடுத்து துறையூர் பக்க எம்.எல்.ஏ. திரு. டி பி அழகமுத்து என்பார் மூலம் அப்போது கல்வி அமைச்சராக இருந்த நாவலர் வி ஆர் நெடுஞ்செழியனை பலமுறை பார்க்க முயன்றார் ஆசான். ஆனால் முடியவில்லை. ஒவ்வொரு தடவையும் ஏதாவது தடை நேரிடும். பின்னர் ஒருமுறை சட்டசபை கூட்டம் முடிந்ததும் பகல் 1:30க்கு அழகமுத்து ஆசானை சட்டசபையை விட்டு வெளி வருவதற்கு முன் நாவலரை பார்க்க ஏற்பாடு செய்தார். ஆனால் ஆசானின் கோரிக்கையை நன்றாக புரிந்து கொண்டதாக அவருக்குத் தெரியவில்லை.

திருவேங்கடவன் பல்கலைக்கழகம் 1954இல் தோன்றியது. தொடக்கத்தில் அப்பல்கலைக்கழகம் தமிழுக்கு யாதொரு வகையும் செய்யவில்லை.

மறுநாள் காலை டாக்டர் வேமனராவ் துணைவேந்தர் அவர்களை பார்த்து பேசுவது என்று முடிவு செய்தார் ஆசான். திங்களன்று மாலை 4 மணிக்கு வீடு திரும்பி வேண்டிய ஆசான் அரை மணிக்கு முன்னதாக திரும்பினார். நன்றாக நீராடி சிற்றுண்டி எடுத்துக்கொண்டு சுமார் 5:30 மணிக்கு துணை வேந்தர் திருமாளிகைக்கு சென்றார் ஆசான். அவர் ஹுக்கா பிடித்துக் கொண்டு ஆனந்தமாக அதை அனுபவித்துக் கொண்டிருந்தார். இவர் திருப்பதியில் இருந்த ஐந்தாண்டு காலமும் சமையல்காரனுடன் (இவனும் ஒரு தமிழன்) தனியாக வாழ்ந்தார். ஹுக்கா பிடித்துக் கொண்டிருக்கும் போது இவரை பார்ப்பது நல்ல நேரம். என்பதை ஆசான் அனுபவத்தில் அறிந்திருந்தார்.

துணைவேந்தர் திரு கோவிந்தராஜுலு நாயுடு அவர்களை போலவே இவரும் ஒரு மணி நேரத்திற்கு மேலாக பேசி கொண்டிருப்பார். வந்த வேலையை இவரிடம் சுருக்கமாக தெரிவித்தார் ஆசான். காரைக்குடியில் இருந்து திருப்பதிக்கு வந்த நோக்கத்தையும், வந்த வரலாற்றையும் ஆதியோடந்தமாக விவரமாக விளக்கினார். ஆசானை இதற்கு முன் அடிக்கடி சந்தித்ததில் ஆசான் உடைய உழைப்பையும் எல்லையற்ற தமிழ் பற்றியும் நன்கு அறிந்து கொண்டிருந்தார். மற்ற பேராசிரியர் மூலமும் கேட்டு அறிந்து கொண்டிருப்பார் என்பதையும் ஆசானால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

தமிழக அரசு கொள்கையை பயன்படுத்திக் கொண்டு எப்படியாவது பல்கலைக்கழகத்தில் தமிழ் துறையை ஏற்படுத்த வேண்டும் என்று வந்தேன் என்றும் தனது நிலையை கூறினார். பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த துணைவேந்தர் சொன்னார் உங்கள் தமிழ் வெறியால் நீங்களே வந்து மாட்டிக் கொண்டு விட்டீர்கள். இதிலிருந்து நீங்கள் நல்ல முறையில் விடுவித்துக் கொள்ள முடியாது. மிக்க சிரமத்துடன் பிஎச்.டி.க்கு பதிவு செய்து கொண்டு விட்டீர்கள். விரைவில் விரைவில் பட்டம் பெற முயலுங்கள். பட்டம் வந்ததும் நான் இங்கிருந்தால் உடனே உங்களை துணைப்பேராசிரியராக உயர்த்தி விடுகின்றேன். பட்டம் வாங்காமல் செய்ய முடியாது. இப்போது கூட உங்கள் அநுபவம், எழுதி உள்ள அரிய நூல்கள், வயது இவற்றை கருதி உயர்த்தலாம். இப்படி செய்தால் பல்கலைக்கழக வளாகத்திலும், வெளியிலும் வீணான பேச்சுக்கே இடம் கொடுத்ததாக முடியும். குறிப்பாக ஒரு தமிழனை ஒரு தமிழனாக இருந்த துணைவேந்தர் தகுதியின்றி உயர்த்தி விட்டார் என்ற கூக்குரல் கிளம்பும். பொறாமையினால் உங்களுக்கும் நீங்கள் அறியாமலேயே பல பகைவர்கள்

இருப்பார்கள். நான் இங்கு வந்தது குறித்து பொறுக்காத சில பகைவர்களும் தோன்றியிருப்பார்கள்.

“சீசரின் மனைவி ஐயத்திற்கிடமின்றி இருக்க வேண்டும். என்ற பழமொழியை கேட்டதில்லையா?”

நீங்கள் பல்கலைக்கழகம் எழுதுவது போல் ஒரு விண்ணப்ப நகல் நல்ல முறையில் ஆங்கிலத்தில் தயார் செய்யுங்கள். அதில்

(அ) பல்கலைக்கழகத்தில் இருக்க வேண்டிய பல துறைகளில் தமிழ் துறையும் ஒன்று.

(ஆ) தமிழக எல்லையில் இருக்கும் திருப்பதி பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையின் இன்றியமையாமை.

(இ) தமிழ் பயிலும் மாணவர்களின் தொகையை கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டாமை.

(ஈ) தமிழ் ஆராய்ச்சிக்கு திருப்பதி நல்ல களம் என்பதை வற்புறுத்தி காட்டுவது,

(உ) எம்.ஏ மாணாக்கர்கள் இல்லாவிட்டால் பிஎச்.டி.க்கு ஓரிருவர் இருப்பார் என்பதை காட்டுதல்,

(ஊ) இரண்டு பகுதிகளிலும் எப்பொழுதும் சிலர் இருப்பர் என்பதை காட்டுவது.

(எ) தனிப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்வது.

ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவது என்பவை போன்ற காரணங்களை காட்டி நகல் ஒன்று மூன்று நாட்களுக்குள் என் கையில் தாருங்கள். விரைவில் ஆவண செய்யப்படும். தமிழக அரசுக்கு அனுப்ப பெறும் கடிதத்தின் நகல் ஒன்று உங்களுக்கும் அனுப்பப்படும் என்று யோசனை கூறினார்.

இதிகாறும் அமைதியாக அலுவலகத்திற்கு வந்து கொண்டிருந்த துணைவேந்தரின் உண்மையான சொரூபத்தை அன்று கண்டார் ஆசான். தமிழ்நாட்டின் மீதும் தமிழினத்தின் மீதும், தான் படிக்க வாய்ப்பு இல்லாத தமிழ் மொழியின் மீதும், கொண்டிருந்த பற்றினை தெரிந்து கொண்டார் ஆசான். அன்று மறுநாள் செவ்வாயன்று அருமையான நகலை தயார் செய்து புதன்கிழமை மாலை அவர் திருமாளிகையில் சந்தித்து நகலை படித்துக் காட்டி அவரிடம் அதனை தந்தார். நகலை கண்டு ஆசானின் திறமையை பாராட்டினார் துணைவேந்தர். இப்பொழுதே உங்களை பேராசிரியராக காண ஆசை தான். என்ன செய்வது. மலையின் மீது நின்று கொண்டிருக்கும் மாலவன் கவனிப்பான் என்று

வாழ்த்தினார். அந்த வாரத்தின் இறுதிக்குள் விண்ணப்பம் தமிழக அரசுக்கு அனுப்பப் பெற்றது. அதன் நகலும் ஆசானின் கைக்கு வந்து சேர்ந்தது. என்றும் இல்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. உற்சாகமும் பொங்கி எழுந்தது. இனி (அ) தமிழக அரசு (ஆ) ஆந்திர மாநில அரசு இந்த இரண்டையும் எப்படி சரி கட்டுவது என்ற எண்ணத்தில்/ஆராய்ச்சியில் ஆசானின் மனம் ஈடுபட தொடங்கியது.

பின் ஆசான் ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு கடுமையாக வேண்டினார். முதுகலை வகுப்பு தொடங்கப் பெறுவதற்கு முன் விரிவுரையாளர் பதவிக்கு மட்டிலும் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வகுப்பு தொடங்கப்பெற்றபோது பேராசிரியர் ஒன்று, துணை பேராசிரியர் ஒன்று, விரிவுரையாளர் ஒன்று, என்ற பதவிகளுக்கு பணம் ஒதுக்கப்பெற்றது. தொடக்க காலத்தில் இரண்டு துணைப் பேராசிரியர்கள் நியமனம் பெற்றனர். திரு பொன் சௌரிராசன் நியமனம் பெற்றார். அடுத்த வருடத்தில் இன்னொரு விரிவுரையாளராக இரகுபதி நியமனம் பெற்றார். இன்னொரு விரிவுரையாளர் பதவிக்கும் பல தடவை பல்கலைக்கழகத்திற்கு எழுதி இசைவு பெற்றார் ஆசான். இப்பொது துறைக்கென்று ஐந்து பேருக்கு வாய்ப்பு இருந்தது. பேராசிரியர் பதவிக்குரிய தொகையை குறைத்து அதை விரிவுரையாளர் பதவி ஆக்கினார். தனது காலத்தில் தமிழ்ப் பேராசிரியர் பதவி யாருக்கும் தரப்போவதில்லை என்பதை திட்டவட்டமாக கூறினார் துணைவேந்தர் டி ஜகந்நாத ரெட்டி. தமிழ்நாட்டை சேர்ந்தவர் இவர் தன்னை ஆந்திரர் என்று காட்டிக் கொண்டிருந்தவர். அடுத்து துணைவேந்தராக வந்த பேராசிரியர் சச்சிதானந்த மூர்த்தி என்பவர் இவர் ஆந்திரர். பேராசிரியர் பதவிக்கு பணம் ஒதுக்கீடு செய்து பேராசிரியர் பதவியையும் நிரப்பியவர். பேராசிரியர் இல்லாத துறையே இருத்தல் கூடாது என்று திட்டம் போட்டு செயல்படுத்த பெருமகன் இவர்.

ஆசானின் திருவுள்ளப்படி ஜூலை மாதம் இறுதியில் எம்.ஏ வகுப்பு தொடங்கியது. ஒரு சில நாட்களில் புதிய துறைகள் (தமிழ், சட்டம், மானிட இயல், அரசியல்) தொடங்கும் விழா எடுக்கப்பெற்றது. எந்த விழாவாக இருந்தாலும் துணை வேந்தர் பேராசிரியர் டி ஜகன்னாதரெட்டி மிகச் சிறிய விவரங்களிலும் கருத்தை செலுத்தி விழாவை மிகவும் பொலிவுடையதாக செய்வார். நான்கு அமைச்சர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டதாக ஆசானுக்கு நினைவு. திரு விஜயபாஸ்கர் ரெட்டி, திரு திம்மா ரெட்டி வருவாய்த்துறை அமைச்சர் கலந்து கொண்டனர். விழா அக்டோபர் 25 ல் நடைபெற்றது. திரு பி.திம்மாரெட்டி அவர்கள் தான் துறைகளை தொடங்கி வைத்தார். இராமேஸ்வரத்தில் பல்வேறு வைதிக கருமங்களை மேற்கொண்டார். ஆசானுக்கு மக்கள் பேறு ஏற்பட்டது. அப்போது மிகவும்

மகிழ்ந்தார். அந்த மகிழ்ச்சியை விட இப்பொழுது துறை பிறந்த பொழுது பெரிய மகிழ்ச்சி ஏற்பட்டது. விழா கொட்டகையில் அமர்ந்து கொண்டு திரு திம்மாரெட்டி துறைகளை திறந்து வைத்த போது கண்கள் குளமாயின. இரண்டு கன்னத்திலும் நீர் வழிய தொடங்கியது. அருகில் இருந்த அன்பர்கள் என்னவாயிற்று? ஏன் அழுகிறீர்கள்? என்று கேட்க, ஒன்றும் இல்லை. இ∴து ஆனந்த கண்ணீர் என்று மறுமொழி பகர்ந்து கண்ணீரை துடைத்துக் கொண்டார் ஆசான். மேற்கு முகமாக மேடையை நோக்கி அமர்ந்திருந்த போது வட புறமாக பார்த்த பொழுது வேங்கட வெற்பு ஆசானின் கண்ணில் படுகின்றது "திருவேங்கட மாமலை". ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே என்று நம்மாழ்வார் பாசுரத்தை நினைவுக்கு கொண்டு வந்தார். புதிய துறைகள் தொடங்கிய விழாவினை நினைவு கூறும் வகையில் கல்வெட்டுச் சான்று பல்கலைக்கழகத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

தமிழ் எம்.ஏ. வகுப்பு தொடங்கப்பட்டதும் (1970 - 71) முதலாவதாக முதுகலை பட்டம் பெறுபவர்களில் மொத்த மதிப்பெண்களில் முதலாவதாக பெற்ற மாணவருக்கு ஒரு தங்கப் பதக்கமும், இலக்கிய திறனாய்வு தாளில் முதல் மதிப்பெண் பெரும் மாணவருக்கு ஒரு தங்கப் பதக்கமும் வைக்க வேண்டும் என்பது ஆசானின் எண்ணம். அவ்வாறே மாணவர்களை ஊக்குவிப்பதற்காகவும், மாணவர்களின் சேர்க்கை அதிகப்படுத்துவதற்காகவும், ஆசான் சிரமப்பட்டு ஒரு திட்டம் தீட்டினார். எம்.ஏ.வகுப்புகள் தொடங்கிய பிறகு ஆசான் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் இரண்டு தங்கப் பதக்கங்களை ஏற்பாடு செய்தார்.

விழா நடைபெற்ற அன்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக மகிழ்ச்சி கடலில் மிதந்திருப்பர். இது அவரவர் இருக்கும் நிலையை பொறுத்தது. புதிதாக தொடங்கப்பட்ட நான்கு துறைகளில் தமிழ் துறையை தவிர ஏனைய மூன்று துறைகளும் சுகப்பிரசவத்தில் பிறந்தவை. தமிழ் துறை ஒன்றுதான் ஆயுதப் பிரசவம் போல அமைந்தது. ஏறக்குறைய 10 ஆண்டுகள் குழந்தை கரு வளர்வதற்கு, 10 திங்கள் தான் சென்னை தமிழ் பயணமும், ஏறக்குறைய இக்காலத்தில் நூறு நாட்கள் விடுப்பும், சில ஆயிரம் ரூபாய் சொந்த பொறுப்பில் ஏற்ற செலவும், தலைமை செயலகத்தில் வட்டமிட்டதும் கண்மூடி மௌனியாக நிற்கும் ஏழுமலையானின் திருவள்ளத்தை கவர்ந்திருக்க வேண்டும். படமுடியாதினித் துயரம் பட்டதெல்லாம் போதும் என்ற மனநிலை ஏற்பட்டபோது எம்பெருமான் திருவருள் சுரந்தது.

ஒரு சமயம் மாநிலத்திற்கு விண்ணப்பம் அனுப்பவே மறுத்ததும் அப்பொழுது துணைவேந்தராக இருந்த வாமனமூர்த்தி துணை நின்று அனுப்பச் செய்ததும் பெரும் புலவர் மு ரா பெருமாள் முதலியார், திரு இராச கண்ணனாரும் தமிழ் வளர்ச்சி பொறுப்பில் இருந்தும் சிறிதும் உதவாது வளவள என்று கைவிரிப்பு செய்ததும், கல்வித் துறையில் துணைச் செயலாளராக பணியாற்றிய தமிழ் பற்று மிக்க திரு கோ முத்துப்பிள்ளை ஆசான் மீது அன்பு கொண்டு உதவ முன் வந்ததும், ஒல்லும் வகையெல்லாம் உதவியதும் ஒன்றன்பின் ஒன்றாக நினைவில் ஆசானின் மனதில் எழுந்தன. திருவேங்கடம் பல்கலைக்கழகத்தில் பெயரளவில் இருந்த தமிழ்த்துறை ஆல்போல் தளிர்த்து அருகு போல் வேரூன்றியது. செயலாற்றும் துடிப்பும் நினைத்ததை முடிக்கும் எண்ணமும் மிக்க துணைவேந்தர் பேராசிரியர் ஜகந்நாதரெட்டி முத்தாய்ப்பு வைத்த மாதிரி முயற்சிக்கு மகுடம் சூட்டினார்.

இதனை நிறைவேற்றுவது எப்படி என ஏழுமலையான் தான் வழி காட்ட வேண்டும் என்று பாரத்தை அவன்மீது போட்டார் ஆசான். அவனை மனதில் நிறுத்திக் கொண்டு திருவள்ளுவர் தங்க குழு என்ற ஒரு குழுவை உருவாக்கினார். ஆசான் தலைவராகவும், சித்தூரில் திரு மாணிக்கம் செட்டியார் (வெல்லம் மண்டி) அவர்கள் செயலாளராகவும், ஏ கே ஆனந்தம் செட்டியார் (இராமர் கோயில் துணிக்கடை) பொருளாளராகவும் இருக்க ஒப்புக் கொண்டார்கள். இவர்களை தவிர திருப்பதியில் விஜயராகவ ஐயங்கார் (கல்யாணம் அய்யங்கார்), டாக்டர் ஜி டி கோபாலகிருஷ்ணன் நாயுடு, சென்னை கந்தனடிமை எஸ பி சண்முகப்பிள்ளை, கோட்டாத்தூர் கே என் நல்லப்ப ரெட்டியார் வேறு சிலர் குழு உறுப்பினர்களாகவும் இருக்க ஒப்புக்கொண்டனர். ரூபாய் 100 அதற்கு மேல் தொகை ஏற்றுக் கொள்ளப்படும் என்று வசதி மிகுந்த செல்வந்தர்கள், நிறுவனங்கள் ஆகியோருக்கு வேண்டுகோள் அறிக்கைகள் அனுப்பப்பட்டன. எதிர்பார்த்த அளவுக்கு யாரும் கொடுக்க முன்வரவில்லை. ஏதோ அத்தி பூத்தார் போல் ஒன்று இரண்டு டிமாண்ட் டிராப்ட்கள் வந்து கொண்டிருந்தன. சித்தூரில் பாரத ஸ்டேட் வங்கியில் கணக்கு திறந்து அதில் தொகைகள் சேமிக்கப்பெற்றன.

1972 ஆம் ஆண்டு தேர்ச்சி பெற்ற மாணவருக்கே பதக்கங்கள் பெற வேண்டும் (1973 பிப்ரவரியில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில்) என்ற குறிக்கோள் இருந்தமையால் ஆசானும் பி சவுரிராஜனும் சித்தூர் சென்று ராஜமாணிக்கம் செட்டியாரை சந்தித்து அன்பளிப்பை வழங்குமாறு கேட்டனர். அவர் 200 ரூபாய் வழங்கினார். அவர் வழங்கியதைப் பார்த்து வேறு மூவரும் வழங்கும் சம்பிரதாயம் ஒன்று இருப்பதாக சுட்டிக்காட்டி தொகையை அதிகப்படுத்துமாறு வேண்டினர். அவர் 500 ரூபாய் தந்தார். அப்படியே வேறு மூவர் ரூபாய்

500 பேரும் வழங்கினர். வேறு சிலர் ரூபாய் 50 வழங்க முன் வந்தனர் அந்த தொகையையும் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. அனைத்தும் ஆனந்தம் செட்டியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் அவற்றை வங்கியில் செலுத்தி விட்டார். இன்னும் ஒரு மாதத்தில் அந்த ஆண்டு பதக்கத்திற்குரிய 500 ரூபாய் ஆக 4000 பல்கலைக்கழகத்தில் செலுத்த வேண்டி இருந்ததால் 2000 கடனாக தருமாறு ராஜமாணிக்கம் செட்டியார் அவர்களிடம் கேட்டார் ஆசான்.

தேவையான தொகையை தேவையிருக்கும் போது தருவதாக வாக்களித்தார். ஆசானின் கடிதம் கண்டு ஆனந்தம் செட்டியாரிடம் தந்து விடுவதாக சொன்னார். ஆசானும் சவுரிராஜனும் திருப்பதி திரும்பினார்கள். கடைசி நாள் குறிப்பிட்டு பலருக்கு எழுதியிருந்தமையால் இவர்கள் ஊர் வந்து சேர்ந்ததும் ரூபாய் 2000 க்கு மேற்பட்ட தொகைகள் டிமாண்ட் டிராப்ட்களாக ஆசான் பேருக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். ஆசான் அவற்றை வங்கியில் செலுத்தி ஒரே செக்காக ஆனந்தம் செட்டியாருக்கு அனுப்பி வைத்து ரூபாய் 4000 ஒரு காசோலை பல்கலைக்கழக பதிவாளர் பெயருக்கு எடுத்து ஆசானின் பேருக்கு அனுப்புமாறு கேட்டு கடிதம் எழுதினார் ஆசான். அவரும் அப்படியே அனுப்பி வைத்தார். ஆசான் பதிவாளருக்கு ஒரு கடிதத்துடன் ரூபாய் நாலாயிரம் காசோலையை அனுப்பி வைத்தார். கடிதத்தில் குறிப்பிட்டு இருந்த செய்திகள்: (திருவள்ளுவர் பெயரில் தங்கப்பதக்கம்: தமிழ் எம்.ஏ., யில் முதல் வகுப்பில் முதலாவதாக தேறியவருக்கு வழங்கப்படுதல் வேண்டும், தங்கப்பதக்கம் 10 கேரட் தங்கத்தில் 10 கிராம் எடை இருக்க வேண்டும். ரூபாய் 3500 லிருந்து கிடைக்கும் வட்டியை கொண்டு இது செய்ய பெறலாம். நடப்பு ஆண்டு 1972 க்கு தனியாக ரூபாய் 500 அனுப்பப்பட்டுள்ளது. இதனை இந்த ஆண்டுக்குரிய தங்க பதக்கம் பயன்படுத்தலாம்.)

1972 ஜனவரியில் முன்பின் அறிமுகமாகாத பொள்ளாச்சி வள்ளல் மகாலிங்கத்திற்கு புதிதாகத் தொடங்க பெற்று எம்.ஏ. வகுப்புகளில் பயிலும் மாணவர்களில் இலக்கிய திறனாய்வு 60 விழுக்காட்டிற்கு மேல் முதல் மதிப்பெண் பெறுவதற்கு வழங்கும் படியாக ஒரு தங்க பதக்கத்திற்கு உதவ வேண்டும் என ஆசான் கடிதம் எழுதி இருந்தார். அவரும் இப்போது வடலூரில் திருப்பணி வேலை நடைபெற்றுக் கொண்டுள்ளது. இன்னும் ஆறு மாதத்தில் இப்பணி நிறைவு அடைந்து விடும். அதன்பின் எழுதவும் என்று பதில் தந்தார். அதன்படி 1972 ஜூன் மாதம் அவர் கடிதத்தை நினைவூட்டி மீண்டும் கடிதம் எழுதினார் ஆசான். அவர் எவ்வளவு தொகை வேண்டும் என்று கேட்டு எழுதினார். ஆசான் அதற்கு நடப்பாண்டு பதக்கத்திற்கு ரூபாய் 500 தொடர்ந்து ஆண்டு தோறும் வழங்கப்பட

வேண்டியதற்கு மூலதனமாக ரூபாய் 3500 தேவை இந்த தொகையை ரூபாய் 4000 திருவேங்கடவன் பல்கலைக்கழக பதிவாளர் பெயருக்கு டிமாண்ட் டிராப் எடுத்து அனுப்பினால் நலம் என ஆசான் கடிதம் எழுதினார். இங்ஙனமே வள்ளல் சொற்படி கோவையில் உள்ள சக்தி சுகர்ஸ் என்ற நிறுவனத்தில் இருந்து ரூபாய் 4000 பதிவாளர் பெயருக்கு டிமாண்ட் டிராப்ட் எடுத்து அனுப்பினார்.

அதை அப்படியே கோவையில் இருந்து வந்த கடிதத்துடன் நகலுடன் பதிவாளருக்கு அனுப்பினார் ஆசான். திருவள்ளுவர் தங்கப் பதக்கத்தை போல இராமலிங்கர் பேரில் ஒரு பதக்கம் வைக்குமாறு ஆசான் எழுதினார். இத்தொகைகளைக்கொண்டு ஆசான் கீழ்க்காணும் இரு தங்கப்பதக்கங்களை தமிழ்த்துறையில் நிறுவினார்:

(1) திருவள்ளுவர் தங்கப்பதக்கம்
தமிழ் எம்.ஏ-யில் முதல் வகுப்பில் முதலாவதாக தேர்ச்சி பெரும் மாணாக்கருக்கு

(2) இராமலிங்க சுவாமிகள் தங்கப்பதக்கம்
இலக்கியத்திறனாய்வு தாளில் அறுபது விழுக்காட்டிற்கு மேல்பெறும் முதல் மாணாக்கருக்கு

இவையிரண்டும் பட்டமளிப்பு விழாவின்போது தேர்ந்தெடுக்கப்பெற்ற மாணாக்கர்கட்கு வழங்கப்பெறுகின்றன. பதக்கங்கள் பெற்ற மாணாக்கர்களின் பெயர்கள் பெற்ற ஆண்டுடன் பெயர்ப் பலகைகளில் பொறிக்கப்பெற்று துறையில் வைக்கப்பெற்றுள்ளன.

ஆசான் காரைக்குடியில் பணியாற்றிய போது தொல்காப்பியப் பொருள் அதிகாரத்திற்கு எளிய விளக்க நூல் ஒன்று எழுத திட்டமிட்டார். 1953, 1954இல் ஆசான் காரைக்குடியில் இருந்த போது பத்துக் கட்டுரைகள் எழுதினார். இவை அமுதசுரபி என்ற திங்கள் இதழில் வெளிவந்தன. அதன் பிறகு தமிழ் பயிற்று முறை, அறிவியல் பயிற்றுமுறை, கல்வி உளவியல் போன்ற கல்வித்துறை பற்றிய நூல்கள் எழுதுவதிலும் வேறு திசைகளிலும் ஆசானின் கவனம் சென்றதால் தொல்காப்பிய பணி நின்றது. திருப்பதியில் பணியேற்ற போது பிறகு மீண்டும் தொல்காப்பியத்தில் ஆசான் கவனம் சென்றது. ஓர் இரண்டு ஆண்டு காலத்தில் ஏனைய 24 கட்டுரைகளையும் எழுதி முடித்தார். பல சமயங்களில் இவை பல நோக்குடன் எழுத பெற்றமையான் இவற்றுள் ஆங்காங்கே "கூறியது கூறல்" காணப்பெறும். அவை விளக்கம் பற்றி வந்தனவாக கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் தொகுத்து **"தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை"** என்ற தலைப்பில் நூல் வடிவம் பெற்றது. இந்த கைப்படியும் பழனியப்பா சகோதரர்களிடம் (வெளியிட்டார்கள்) இரண்டாண்டுகள் உறங்கிக் கிடந்தது. பின்னர் 1964இல் வெளிவந்தது. இது ஆசானில் 14 வது வெளியீடாக அமைந்தது. இந்நூலுக்கு,

பேராசிரியர் அ சீனிவாச ராகவன் அவர்கள் ஓர் ஆங்கில அணிந்துரையும், பேராசிரியர் முனைவர் மு வரதராசனார் அவர்கள் மற்றுமோர் அணிந்துரையும், உயர்திரு பு ரா புருடோத்தம நாயுடு அவர்கள் முன்னுரையும் வழங்கி சிறப்பு செய்தனர்.

பல்லாண்டுகள் கழித்து வெளிவரும் இந்த நூல் தொல்காப்பியம் பொருளதிகாரம் பயில்வோருக்கு ஒரு வழித்துணை போல் அமையும். ஏனையோருக்கும் தொல்காப்பியப் பற்றிய கருத்துக்களை எளிதாக பெறுவதற்கு துணையாக இருக்கும். "இந்த நூலை பயில்வோர் கவிதை வாழ்க்கையிருந்து மலர்ந்தது. அது வாழ்க்கைக்கே உரியது. வாழ்க்கைக்காவே அது நிலைப்பெற்றுள்ளது" - என்று கவிதையை பற்றி அட்சன் என்ற மேனாட்டுத் திறனாய்வாளர் கூறிய கருத்து ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியம் என்ற இலக்கண நூலுக்கும் பெரிதும் பொருந்துவதை அறியலாம். எந்த நூலை ஆசானின் உள்ளம் எப்படி எப்படியெல்லாம் பகுத்துப் பார்க்க முனைந்தது என்பதையும் தெரியலாம். இந்த நூலுக்கு மூவர் அணிந்துரை, ஆங்கில முன்னுரை தமிழில் முன்னுரை, அறிமுகம் அருளியுள்ளனர். அவர்களை பற்றி ஆசானின் நூல் முகத்தில் கூறியுள்ளதை காணலாம். பல்லாண்டுகளாக சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ் துறையில் பெரும் பணியாற்றி, கடந்த இரண்டு ஆண்டுகளாக சென்னை பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை தலைவராக இருந்து அத்துறையை வளர்ச்சி அடைய செய்த டாக்டர் மு வரதராசன் அவர்களை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். 20 ஆண்டுகளாக அவரை ஆசான் அறிவார். பழைய பரம்பரைத் தமிழ் புலவர்களையும், புதிய பரம்பரை தமிழ்ப் புலவர்களையும் இணைத்து நிற்கும் பெரும்புலவர் அவர். பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் நின்று அறிவொளி வீசும் ஆசிரிய மணியாவார். உழைப்பினால் உயர்ந்தமைக்கு தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாக நின்று நிலவுபவர். இவருடைய எழுத்துக்களில் புலமை மனம் கமலும். ஆராய்ச்சி திறன் ஒளிரும். சிந்தனை சுடர் தெறிக்கும். இவருடைய கருத்துகளில் ஆழ்கடலை போன்ற ஆழமும் உண்டு. அதனை போல அவை அகன்றும் காணப்பெறும்.

இலக்கியம், திறனாய்வு, ஆராய்ச்சி, மொழியியல், நாடகம், புதினம், சிறுகதை, கடிதங்கள் போன்ற பல்வேறு வகை இலக்கியங்கள் இலக்கிய வகைகளை அணி அணியாக வெளியிட்டுத் தமிழன்னையின் மகிழ்ச்சியை பொங்க செய்தவர். தமிழ் ஆராய்ச்சியும் தமிழில் புதிய இலக்கிய வகைகளை படைக்கும் ஆற்றலும் நிறைந்த இவரைத் "தமிழ்நாட்டு பெர்னாட்ஷா" என்று கூறினும் மிகையன்று. வல்லவர் நல்லவர் எவருடனும் இன்முகத்துடனும் புன்முறுவல் காட்டி உரையாடும் பண்புடையாளர்.

“பண்புடையார் பண்டுண்டு உலகம்“ என்ற வள்ளுவர் வாழ்க்கைக்கு இலக்காக நிற்கும் உயர் குண செம்மல். தமிழ் மூதறிஞர் திரு வி க தமிழ் மக்களின் உள்ளத்தில் நான்கு எழுத்துக்களின் நிலையாக வாழ்கின்றார். அவர் காட்டிய பாதையில் செல்லும் இவர் மு வ என்று இரண்டு எழுத்துக்களில் தமிழ் இளைஞர்களின் உள்ளத்தில் நிரந்தரமாக இடம் பெற்று விட்டார். இத்தகைய அறிஞர், பண்புடையளர் ஆசானின் இந்நூலுக்கு அணிந்துரை அருளி ஊக்கம் தந்தமைக்கு ஆசான் நன்றி கடன்பட்டவராவார்.

விண்வெளிப் பயணங்களுக்கு பயன்படும் **இராக்கெட்டு** பற்றி ஒரு சிறிய நூலை எழுத வேண்டும் என்று எண்ணம் ஆசானின் மனதில் எழுந்தது. அப்புத்தகத்தையும் அவர் எழுதி முடித்தார். அந்தப் பயணம் தொடங்கப்படுவதற்கு முன்னர் விண்வெளியில் எடையின்மை அநுபவம், விண்வெளியின் வெப்பம் அமுக்கம் இவை போன்ற செய்திகளை அறிவதற்கு இராக்கெட்டு துணை செய்கின்றது. இராக்கெட்டின் துணையால் தொலைக்காட்சி அமைப்பு, இராடர் அமைப்பு, தொலை ஒலிப்பான் அமைப்பு மற்றும்பல அமைப்புகள் அடங்கிய சிறிய துணைக் கோள்களை விண்வெளியில் பல்லாயிரக்கணக்கான மைல் உயரங்கட்கு அனுப்பிய பல செய்திகளை அறிதல் வேண்டும்.

அந்த சிறு நூலில் 41 விளக்கப் படங்கள் அமைந்து விளக்கத்திற்கு துணை செய்கின்றன. இராக்கெட்டின் ஆதி வரலாறு, இராக்கெட்டின் அமைப்பு, ஐசக் நியூட்டன் கண்டறிந்த கவர்ச்சி விதி, இயக்க விதி, செயல்படும் விதி போன்றவற்றைப் பற்றியும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

இந்நூல் ஆசானின் 15 வது நூலாக கழக வெளியீடாக வந்தது. இந்த நூலின் நூல் முகத்தில் அடிகளாரைப் பற்றி எழுதிய குறிப்பு. அவரின் மேன்மையையும் அறிவாலும் அத்தனைக்கும் மேலாக செயலாற்றும் திறனாலும் ஆசானின் உள்ளத்தை கவர்ந்தவர்கள். தமிழ் கூறும் நல்லுலகலத்தின் தந்தை போன்றவர்கள் தவத்திரு குன்றக்குடி அடிகளார். சின்ன பட்டமாக இருந்த காலத்திலேயே வேண்டாத சில மடத்து சம்பிரதாயகங்களைக் கைவிட்டதனால் பொதுமக்கள் உள்ளத்தை கவர்ந்தவர்கள். எவருடனும் இன்முகத்துடன் பழகும் பண்புடையவர்கள். பண்புடையார் பட்டுண்டு உலகம் என்ற வாய்மொழிக்கு எடுத்துக்காட்டாக நின்று நிலவுபவர்கள். பட்டம் ஏற்று மடத்துப் பொறுப்புகள் யாவும் அவர்களை வந்தடைந்த பிறகு பல துறைகளிலும் அவர்களது அருள் நோக்கம் சென்றது. அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்பதை உணர்ந்து பல பள்ளிகளையும், இலவச உணவு விடுதிகளையும் நிறுவினார்கள்.

“பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன்” என்பதை உணர்ந்த அடிகள் ஆசிரியர் பயிற்சி பள்ளியை துவக்கி பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதமையற்றிடும் காணீர் என்ற குறிக்கோளை பறையறை வித்தனர். தம் பார்வையின் கீழுள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்து அவற்றில் தமிழ் அர்ச்சனை வழிபாட்டை செயல்படுத்தினார்கள். இதனால் பாடிய வாய் தேனூறும் பால்வாய் பசுந்தமிழ் ஏற்றம் பெற்றது. தமிழ் கூறும் நல்லொழுக அருள்நெறிக் கழகங்களை தோற்றுவித்து சமயப் பணியாற்றி வருகின்றார்கள்.

ஏனைய மடாதிபதிகள் போல் மூலவராக இராமல் அடிகளார் “உற்சவர்” போன்று எங்கும் சென்று தமிழ் முழக்கம் செய்து சமயநெறியையும் தமிழ் நெறியையும் பரப்பி வருகின்றார்கள். அடிகளாரின் திருவாயினின்றும் அருவி போல் பொங்கி வரும் அமுத வெள்ளமாகிய பேச்சில் புலமை மணம் கமழும். ஆராய்ச்சித் திறன் ஒளிரும். சிந்தனை சுடர் தெறிக்கும். இவர்களுடைய கருத்துகளில் ஆழ்கடலைப் போன்ற ஆழமும் உண்டு. அதனைப் போல் அவை அகன்றும் காணப்பெறும். அனைத்தையும் துறந்து தமிழை துறக்க முடியாத அடிகளார் ஆசிரியர்களின் தோன்றா துணையாக இருப்பவர்கள்.

புலவர்களிடம் பெரு மதிப்பு கொண்டவர்கள், வருங்கால மானிடப் பயிர்கள் மாணாக்கர்கள் உய்ய வேண்டும் என துடித்து நிற்பவர்கள். தம்மிடம் சுரக்கும் அருள் காரணமாக இங்ஙனம் பல்லாண்டு காலம் சேவை புரிந்து வரும் தவத்திரு அடிகளார் மீது ஆசான் கொண்டுள்ள பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் அறிகுறியாக இச்சிறு நூலை அவர்கள் திருவடிகளில் அன்பு படையலாக்கி மகிழ்ந்தார் ஆசான். இவர்கள் ஆசியால் இந்நூல் தமிழ் கூறும் நல் உலகில் பெரு மிதத்துடன் உலவும் என்பது ஆசானின் திடமான நம்பிக்கை.

ஆசான் காரைக்குடியில் இருந்த போது ஹெய்சன் பெர்க் எழுதிய Nuclear Physics என்ற நூலை மொழிபெயர்த்துச் சென்னைப் பல்கலைக்கழகப் பரிசு பெற்றார். அது பல்கலைக்கழகத்தாரால் அச்சுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆசான் “**இளைஞர் தொலைக்காட்சி**” என்னும் தலைப்பில் தொலைக்காட்சி பற்றிய அரிய பலச்செய்திகளை இயற்றினார். அது அவருடைய இருபதாவது நூலாகும். ஆசான் தன்னுடைய இலக்கிய கட்டுரைகள் சிலவற்றை தொகுத்து வெளியிட்டது போல் அறிவியல் பற்றி எழுதிப் பல்வேறு இதழ்களிலும், ஆண்டு மலர்களிலும், பெரியார்களின் மணிவிழா மலர்களிலும் வெளிவந்த கட்டுரைகளை வெளியிட நினைத்தார். அறிவியலைப் பயிலாதவர்களும் அறிவியலில் இன்றியமையாத செய்திகளை அறிந்து கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். தமிழ் மரபு

குறையாமல் எளிய முறையில் மக்களுக்கு அறிவியல் செய்திகளை தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் எழுதப்பட்டவை இக்கட்டுரைகள்.

பல்வேறு இடங்களில் சிதறி கிடக்கும் கட்டுரைகளை தொகுத்து பார்க்கும் வாய்ப்பும் ஆசானுக்கு கிடைத்தது. அதனால் பல்வேறு காலங்களில் பல்வேறு நிலைகளில் புத்தம் புதிய கலைகளை தமிழுக்கு கொணர்ந்த முயற்சியையும் எடை போட்டு பார்க்கும் நிலையும் ஏற்படுகின்றது. அந்தக் கட்டுரைகளின் தொகுப்புக்கு **அறிவியல் விருந்து** என்று பெயரிட்டார். அது அவருடைய இருபத்தைந்தாவது வெளியீடாகும்.

அனைத்திந்திய கீழ்த்திசை மாநாடு வாரணாசியில் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்குப் பல்கலைக்கழகம் ஆசானை பேராளராக அனுப்பியது. அவரது 52ஆம் அகவை நிலையில் அதனை காசி யாத்திரையாகவும் மேற்கொள்ளவும் நினைத்தார். கீழ்த்திசை மாநாட்டில் "ஆழ்வார்களின் இயற்கை பற்றிய கவிதைகள்" (Nature Poetry of the Azhvars) என்ற ஆங்கில கட்டுரையை படித்தார். ஆசான் அழகப்பா ஆசிரியர் கல்லூரியில் 10 ஆண்டுகள் பணியாற்றிய போது அவருக்குப் பல மனிதர்களுடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. செட்டிநாட்டு அரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரால் தோற்றுவிக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகம், காரைக்குடியில் வள்ளல் டாக்டர் அழகப்பச் செட்டியாரால் சுமார் 1000 ஏக்கர் நிலத்தில் உள்ள கல்லூரி வளாகத்தில் உள்ள பாலர் பள்ளி முதல் கலைக்கல்லூரி, பல்தொழில் கல்லூரி, பொறியியல் கல்லூரி வரையிலுள்ள நிறுவனங்கள் மதுரையில் கருமுத்து தியாகராஜ செட்டியார் ஏற்படுத்திய பல்வேறு கல்வி நிலையங்கள் கல்விப் பணிக்கு சிறந்த சான்றுகளாக அமைந்தன.

ஆசான் காசிக்கு சென்று குடும்பத்துடன் சென்று விஸ்வநாதரை வழிபட்ட பின்னர் திருக்கோயிலுக்கு அப்பாலுள்ள விசாலாட்சி திருக்கோயிலுக்குச் சென்று அந்த அன்னையையும் வழிபட்டார். அந்த அன்னையாரின் திருவுருவம் மிகச்சிறியது. திருக்கோயிலும் மிகவும் சிறியது.

ஆசான் காசிப் பயணம் செய்ததோடு அயோத்திக்கும் பயணம் செய்தார். ஒரு நாள் கயை என்ற திருத்தல பயணத்திற்குத் திட்டமிட்டார் ஆசான். வினை தீர்த்தான் செட்டியார் முன்னரே கடிதம் போட்டு அந்த ஊரில் உள்ள நாட்டுக்கோட்டை நகர சத்திரப் பொறுப்பாளரை இருப்பூர்தி நிலையத்திற்கு வந்து அழைத்துப் போகுமாறும் திதி முதலியவற்றிற்கு நல்ல புரோகிதரை ஏற்பாடு செய்யுமாறும் எழுதியிருந்தார். குறிப்பிட்ட நாளன்று மாலையில் ஆசானும் அவரது மனைவியும் புறப்பட்டார்கள். கயைப்பகுதியில்

கொள்ளையர் கூட்டம் அதிகம் என்பதை ஆசான் முன்னரே கேள்வியுற்றிருந்தார். பல்வேறு செய்திகளையும் நாளிதழ்களில் படித்திருந்தார். தொடக்கத்தில் அயோத்தி பயணம், கயாப் பயணம் ஆகியவற்றை முடித்துக் கொண்டனர்.

ஆசான் திருப்பதி தீர்த்த கட்ட தெருவில் உள்ள ஒரு அறையில் தங்கி இருந்தபோது அவரது அறையை நோக்கி திருமண் காப்பு தாங்கிய முகப்பொலிவுடன் ஒரு வைணவ அன்பர் வந்தார். அவர் கையில் UNESCO Source Book for Science Teaching என்ற நூலின் படியொன்று இருந்தது. அவர் தம் கையில் இருக்கும் நூலை ஆசான் இடம் கொடுத்து அதனை தமிழாக்கம் செய்து தர வேண்டும். அதற்காக தான் தங்களை தேடி வந்தேன் என்றார். ஆசானுக்கு அச்சமயம் வேலை நெருக்கடி இல்லாது இருந்ததால் அப்பணியை ஒப்புக்கொண்டார். நூல் 1969ல் வெளிவந்தது.

நூலின் தமிழாக்க குறிப்பில், “மொழிபெயர்ப்பு என்பது ஒரு கலை”, என்றும், மொழிபெயர்ப்பைப்பற்றி தொல்காப்பியரின் கருத்து முதலியவற்றை நுணுக்கமாக விளக்குகின்றார் ஆசான். தொல்காப்பியர் மொழிபெயர்ப்பினை “அதர்ப்பட யாத்தல்” என குறிப்பிட்டுச் செல்கின்றார். தமிழ் மொழியாக்கத்தில் தூய்மையான ஆர்வமே முக்கியமாகும். கூட்டங்களில் பாமர மக்களிடையே “வெற்று வேட்டுகள்” எழுப்புவதைவிட அறிஞர்கள் அமைதியாக உருப்படியான பணியில் இறங்குவது இன்று மிகவும் வேண்டப்படுவதொன்று. துறையறிவு சிறிதுமின்றி தமிழ்ப்புலமையொன்றையே துணையாகக்கொண்டு மொழிபெயர்ப்புத் துறையில் இறங்குவது விரும்பத் தக்கதன்று. ஒரு நூல் இஃது ஒரு மொழிபெயர்ப்பு என்று தோன்றாவண்ணம் முதல் நூல் போன்றே மொழிபெயர்ப்பு அமைதல் சாலச்சிறந்ததாகும்.

மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையை குறித்து ஆசானின் கருத்து கீழ்கண்டவாறு:

“தமிழ் மொழி வளம் பெற வேண்டுமானால் எல்லாத் துறைகளிலும் நல்ல புத்தகங்கள் வெளிவருதல் வேண்டும். எந்தத் தமிழனும் தமிழிலேயே படித்து எத்தகைய உயர்ந்த அறிவையும் பெற வாய்ப்புகள் இருக்க வேண்டும்.

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.”

என்ற பாரதியின் வாக்கை “மறைமொழி” போல் போற்றி அறிஞர்கள் தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டும்.”

ஆசான் மூன்று அறிவியல் நூல்களை தமிழிலும் மற்றுமொரு மூன்று நூல்களை சாகித்திய அகாதெமிக்காகவும் மொழிபெயர்த்துள்ளார்.

(அ) அறிவியல் நூல்கள்:

1. யுனெஸ்கோ அறிவியல் பயிற்றும் மூல முதல்நூல் (1969)
(UNESCO Source Book for Science Teaching)

இந்நூலின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு நீண்ட வரலாறு. அ∴தை இந்நூலின் முகவுரை சுருக்கமாக பின்வருமாறு பகர்கின்றது:

"இரண்டாம் உலகப்பெரும் போரின் இறுதியில் பல்வேறு நாடுகளில் பல பள்ளிகள் அழிக்கப் பெற்றுவிட்டன. இப்பள்ளிகள் உயிர்பெறத் தொடங்கியதும் அறிவியல் தளவாடத் தேவை அதிகமாக ஏற்பட்டது. ஏனெனில், இந்நாடுகள் உற்றுநோக்கல், சோதனை இவற்றின் அடிப்படையில் அறிவியல் பயிற்றலை மேற்கொள்ளுவதை மரபாகவே கொண்டிருந்தன. இத்தேவையை நிறைவேற்றுவதற்காக ஐக்கிய நாட்டுக் கல்வி-அறிவியல்-பண்பாட்டுக் கழகம் (யுனெஸ்கோ) **"அழிபட்ட நாடுகளின் அறிவியல் ஆசிரியர்க்கான குறிப்புகள்"** என்ற தலைப்பில் ஒரு சிறிய நூலொன்று வெளியிடுவதற்குக் காரணமாக இருந்தது. இதுகாறும் இந்நூலின் பதிப்புகள் வெளியாகியுள்ளன: அது ∴பிரெஞ்சு மொழி, ஸ்பானிய மொழி, தாயிமொழி, அரபு மொழி போன்ற பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளன". ஸ்டீ∴பென்ஸனின் நூலுடன் இணைந்த இவர்களின் பணியால் அணி அணியாக எளிய தளவாடமும் அறிவியல் சோதனைகளும் கண்டறியப்பெற்றன. இவற்றைத் தொகுத்து ஒரே ஒரு நூல் வடிவில் வெளியிடவேண்டிய இன்றியமையாமையும் ஏற்பட்டது. இ∴து இன்று நம் கையிலுள்ள **"யுனெஸ்கோ அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்"** என்னும் புத்தகம் வெளிவருவதற்கான பேரூக்கத்தை அளித்தது.

இந்நூலின் முதல் ஆங்கில வடிவு 1959-இல் வெளிவந்தது. உலகின் அனைத்துப் பகுதிகளிலுள்ள பல பருவ இதழ்களில் (Journals) பல மதிப்புரைகள் வெளியாயின. முதல் ஆங்கிலப்பதிப்பு திரும்பத் திரும்ப பதினொரு முறை அச்சேறியுள்ளது. ∴பிரஞ்சு பதிப்பு நான்கு முறை வெளிவந்துள்ளது. மேலும் பல்வேறு இருபது மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளது.

யுனெஸ்கோ அமைப்பு நூலின் ஆங்கில வடிவத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியைப் ஆசானுக்கு வழங்கியது. அப்பணி 1.4.1969 அன்று முடிவுற்றது.

இந்நூல், 19 இயல்களில் 82 உட்பிரிவுகளையும், 3 பின்னிணைப்புகளையும் மற்றும் 9 அட்டவணைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

2. அணுக்கரு பௌதிகம் (1966)
(Nuclear Physics by Werner Heisenberg, Director, Max Plank Institute of Physics)

இயற்பியலில் நோபல் பரிசு (1932) பெற்ற விஞ்ஞானி **வெர்நர் ஹைசன்பர்க்** "Nuclear Physics" எனும் இந்நூலை ஜெர்மானிய மொழியில் எழுதினார். பின்பு, அந்நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பெற்றது. அந்த ஆங்கிலநூலை, ஆசான் தமிழில் மொழிபெயர்த்தார்.

இந்நூல், சிறந்த மொழிபெயர்ப்பு நூலாக 1956-இல் சென்னைப் பல்கலைக்கழகத்தால் தேர்ந்தெடுக்கப் பெற்று பரிசு வழங்கப்பெற்றது. ஆனாலும், சென்னைப் பல்கலைக்கழகத்தினரின் மெத்தனப்போக்கினால் வெளியிடப்பெறாமல் இந்நூல் உறங்கிக்கிடந்தது. ஆசானின் மன உளைச்சல் அவரது சொற்களில்:

"புதுமைக் கவிஞர் பாரதியாரின் குரல் பல்லாண்டுகட்கு முன்னரே பல்கலைக்கழக மாளிகையிலும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. அதன் விளைவே இம்மொழிபெயர்ப்பின் தோற்றமாகும். சுமார் பத்தாண்டுகட்கு முன்னர் சென்னைப் பல்கலைக் கழகப் பரிசினைப் பெற்ற இந்த அறிவியல் குழந்தை "நாமகரணம்" பெற்று வெளியில் உலவ முடியாமல் இருந்ததொல்லாம் ஒரு நீண்ட கதை. அக்குழந்தை ஏழுமலையான் திருவடிவாரத்திலிருந்து உலவத் தொடங்க வேண்டும் என்ற **"ஊழ்"** பெற்றிருந்தது போலும்"

பின்னர் பேராசிரியர் தானே வெளியிட அனுமதி வேண்ட, அந்நாள் சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் சர் ஆ இலக்குமணசாமி முதலியார் (Sir AL Mudaliar) அனுமதி வழங்கினார். ஜெர்மானிய மூல நூல் உரிமையாளர்களும் (Friedr. Vieweg & Sohn-Verlah, West Germany) தங்களின் அனுமதியினை நல்கினர். திருவேங்கடவன் பல்கலைக் கழகமும் ஆசானுக்கு அனுமதியளித்தது. இறுதியாக இந்நூல் 1966-இல், உயர்திரு இராஜாஜி அவர்களின் அணிந்துரையோடு:

"I can understand the difficulties of a translator of scientific books and I tender my congratulations to Prof. N. Subbu Reddiar on his having won the prize for the best translation of Heisenberg's Nuclear Physics."
<< Bharat Rathna C Rajagopalachari [Rajaji]

வெளியிடப் பெற்றது. இந்நூல் மதுரைப் பல்கலைக்கழக முதல் துணைவேந்தர், உயர்திரு தெ பொ மீனாட்சிசுந்தரனார் அவர்கட்கு காணிக்கையாக்கப் பெற்றுள்ளது.

இந்நூல், 8 தலைப்புகளில் 30 இயல்கள், 40 விளக்கப் படங்கள், பின்னிணைப்பு (அணுவாற்றலைத் தொழில் துறையில் கையாளுவதுபற்றி ஜெர்மனியில் நடைபெறும் ஆராய்ச்சி), அட்டவணைகள் (பௌதிக மாறிலிகள், பௌதிக அலகுகள், அடிப்படைத்துகள்கள், இன்னபிற), கலைச்சொல் அகராதி மற்றும் பொருட்குறிப்பு அகராதி ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

3. மானிட உடல் (1958)
(The Science Book of Human Body by Edith E Spoural)

கொலம்பியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த **டாக்டர் எடித் இ ஸ்ப்ரௌல்** என்ற அம்மையார் (ஓர் ஆய்வாளர், ஆசிரியர் மற்றும் மருத்துவர்) எழுதிய "**The Science Book of Human Body**" எனும் நூலை ஆசான் தமிழில் "**மானிட உடல்**" என்னும் பெயரில் மொழிபெயர்த்துள்ளார். மொழிபெயர்த்ததன் காரணத்தைப் ஆசான் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

"இஃது அறிவியல் யுகம். ஆராய்ச்சிகளால் பல உண்மைகள் கண்டறியப்பெறும் காலம். இந்த உண்மைகளால் உடல் பற்றிய தத்துவங்களும், கருத்துக்களும் மாறிக் கொண்டே வருகின்றன. எனவே, மானிட உடலைப்பற்றிய நம் அறிவு விரிந்து கொண்டே வருகிறது. அவற்றையெல்லாம் சாதாரண மக்கள் அறிந்துகொள்வதென்பது எளிதன்று. அவை யாவும் அவர்கட்கு விளக்கம் தருவதைவிட, குழப்பத்தில்தான் கொண்டு செலுத்தும். சாதாரண மக்கள் தம் உடல் எவ்வாறு இயங்கி வருகிறது என்பதைப்பற்றி பொதுவாக அறிந்து கொண்டால் போதுமானது. அதற்கு இந்நூல் பெருந்துணை புரியும்."

மேலும் பேராசிரியர், மூல ஆங்கில நூலாசிரியரைப் பாராட்டும் வகையான் கீழ்க்கண்டவாறு மொழிகின்றார்:

"அம்மையார் ஓர் ஆய்வாளர், ஆசிரியர், மருத்துவர். எனவே, அவர் அறிவு வளர்ச்சியினையொட்டியும், அநுபவத்தினையொட்டியும் மானிட உடலைப் பற்றிய பல கருத்துக்களைத் தெளிவாக விளக்கியுள்ளார். அதன் தமிழாக்கமே இந்நூல். இந்நூலிலுள்ள பல்வேறு படங்கள், படிப்பவர் பொருளை நன்கு விளங்கிக் கொள்ளப் பெருந்துணை புரியும். புத்தகத்தைப் படிப்பவர்கள் இதை நன்கு உணர்வார்கள். சாதாரண மக்கள் உடலைப்பற்றி

அறிந்து கொள்ள வேண்டியவற்றையெல்லாம் மிக நல்ல முறையில் எடுத்தோதியுள்ளார் மூல ஆசிரியர்.”

ஆங்கிலத்தில் உள்ள மூல நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட, யுனைடெட் ஸ்டேட்ஸ் இன்பர்மேஷன் சர்விஸ் (USIS), மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் செய்தித்துறை அனுமதி வழங்கின. இந்நூல் வெளியிடப்பெற்ற ஆண்டு 1958. இந்நூல் 15 இயல்களையும். 92 விளக்கப் படங்களையும் மற்றும் மூன்று பின்னிணைப்புகளையும் (1. கலைச்சொல் விளக்கம், 2. கலைச்சொற்கள் 3. பொருட்குறிப்பு அகராதி) தன்னகத்தே கொண்டுள்ளது.

(ஆ) சாகித்திய அகாதெமி நூல்கள்:

உலகிலேயே இருபதிற்கும் மேலான மொழிகளைக் கொண்டது நம் இந்தியநாடு. இருபத்து நான்கு மொழிகளில் உள்ள இலக்கிய வளத்தை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து மேம்படுத்தும் மாபெரும் சாதனையை நிகழ்த்தி வரும் ஒரே நிறுவனம் சாகித்திய அகாதெமி.

முதலில் 24 மொழிகளிலிருந்து ஒரு நூலை தேர்தெடுத்து, அவைகளை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து, அந்த ஆங்கில மொழிபெயர்ப்புகளை மீண்டும் 22 மொழிகளில் மொழிபெயர்ப்பது என்பது ஓர் உயரிய இலக்கியப் பணி மட்டுமின்றி ஒரு பெரும் சாதனையாகும்.

சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்புப் பணியினைப் ஆசானுக்கு வழங்கியது. அவ்வாறு வழங்கப்பெற்ற கீழ்க்கண்ட நூல்களை ஆசான் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

1. வேமனர் (1978) 2. CR ரெட்டி (1981) 3. குரஜாட (1982)

ஆசானின் அறிவியல் அறிவும், ஆங்கில அறிவும், தமிழ்மொழிப்பற்றும் மொழிபெயர்ப்புப்பணியில் பெரும் பங்கு வகித்தன என்பது ஈண்டு கருத்தில் கொள்ளத்தக்கது. மொழி பெயர்ப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பெற்ற மூன்று ஆங்கில நூல்களும் அறிவியல் உலகில் பெரும் அளவில் பயன்பாட்டினை நல்கின என்பதும் குறிப்பிடத்தக்கது. பேராசிரியரின் மொழிபெயர்ப்புத்திறனை சாகித்திய அகாதெமி பயன்படுத்திக் கொண்டது பெரிதும் பாராட்டிற்குரியது.

விடுமுறை கழித்து திரும்பிய முதல் நாள் திரு கி.ஆ.பெ.விஸ்வநாதன் என்று பொறிக்கப்பட்ட வருகை அட்டை ஒன்று ஆசான் மேசையின் மீது இருந்தது. தமிழ் காவலர் வந்து போனதை அறிந்தார் ஆசான். அந்த அட்டையில் தான் தங்கி இருக்கும் இடத்தை குறிப்பிட்டு இருப்பின்

அங்கு சென்று பார்த்திருப்பார். எந்தவித குறிப்பு இல்லாததை கண்டு மிகவும் வருந்தினார். ஆசான் அன்று மாலையில் தமிழ் புலவர் குழு செப்டம்பர் நடுவில் வருவதாகவும் அவர்கள் கூட்டம் பல்கலைக்கழகத்தில் நடைபெற பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கல்லூரி முதல்வரிடம் இருந்து ஒரு குறிப்பு மாலை 3 மணிக்கு வந்தது. புலவர் குழு நாளை கவனித்த செப்டம்பரில் 14 ஆம் நாள் விடுமுறை நடுவில் அமைந்திருந்தது. குறிப்பை கண்டதும் அதனை எடுத்துக் கொண்டு முதல்வரை சந்தித்தார் ஆசான்.

அப்பொழுது முதல்வராக இருந்த பேராசிரியர் பம்பாபதிராவ். புலவர் குழு வரும் நாள் விடுமுறை நடுவில் வருவதாகவும் ஆசான் ஆறு ஆண்டுகளாக குடும்பத்தை விட்டு தனிமையில் இருப்பதாகவும் குடும்ப நிலையை கவனிக்கவும் சிறுவர்களின் கல்வியை கவனிக்கவும் ஊர் செல்ல வேண்டி இருப்பதால் ஆசானால் இப் பொறுப்பை ஏற்க இயலாது என்று விளக்கி ஆசானை விலக்கி, இந்தப் பொறுப்பில் வேறொருவரை சேர்க்குமாறு கேட்டுக் கொண்டார். முதல்வர் திருச்சியில் இருந்து ஒரு பெரியவர் துணைவேந்தரை சந்தித்தார் என்றும் ஆசானை அனுப்பி அவரைக் கொண்டு இந்த ஏற்பாட்டை செய்யுமாறு தொலைபேசி மூலம் அறிவித்தார்.

இந்த குறிப்பு அவர் எண்ணமே இன்றி ஆசான் விருப்பம் அல்ல. மறுநாள் காலையில் அவர் ஹைதராபாத் செல்லுகின்றார். அவர் உங்கள் மீது நல்ல மதிப்பு வைத்திருக்கின்றார். இன்று மாலையே அவரை சந்தித்து பேசி உங்கள் நிலையை விளக்கி தங்களின் இயலாமையை தெரிவித்துவிட்டால் மாற்று ஏற்பாடு செய்து கொள்ளலாம். சென்று அவரை பார்க்குமாறு அவர் கருத்தறிந்து என்னிடம் நாளை தெரிவியுங்கள் என்றார்.

ஆசானுக்கு ஒரே குழப்பம் துணைவேந்தரை பார்க்க முயன்றார். யாரோ ஒரு அமைச்சர் ஒருவர் வந்திருப்பதாகவும் அவருடன் கால்நடை மருத்துவர் கல்லூரிக்கு ஒரு கூட்டத்திற்கு போய் இருப்பதாகவும் மாலை 6 மணிக்கு மேல் தான் சந்திக்க முடியும் என்றும் அவருடைய தனி அலுவலர் மூலம் அறிந்தார் ஆசான். அறைக்கு வந்து மாலை கடல்களை முடித்துக் கொண்டு ஆசான் சிற்றுண்டி அருந்தி சுமார் 6:30 மணிக்கு புறப்பட்டார். மிதிவண்டியில் சென்று ஒரு நாளைக்கு இரண்டு முறை பல்கலைக்கழகத்திற்கு போய் வந்தால் உயிர் போய் உயிர் வரும். போகும்போது ஏற்றம் வரும் பொழுது சிறு இறக்கம் 50 அகவையை எட்டிய நிலையில் மிதிவண்டியை இயக்குவது கஷ்டமாக இருந்தது.

வேறு வழி இல்லை மேல் மூச்சு வாங்க மாலை 7 மணிக்கு துணைவேந்தர் மாளிகைக்கு வந்து சேர்ந்தார் ஆசான். துணைவேந்தர் ஒரு சிற்றுந்தில் முன் பக்கம் வண்டி

ஓட்டியிருக்கைக்கு அருகில் உள்ள இருக்கையில் அமர்ந்து கொண்டு எங்கோ போக தயாராக இருந்தார். ஆசானை கண்டதும் காரை ஓட்டுபவர் வேறு ஏதோ வேலையாக இல்லத்திற்கு சென்றிருந்தால் அவர் இருக்கையில் ஆசானை அமரச் செய்து பேச தொடங்கினார்.

பேராசிரியரே இன்னும் சில நிமிடங்கள் தாமதித்து வந்திருந்தால் என்னை பார்த்திருக்க முடியாது. ஹைதராபாத்திலிருந்து சில அமைச்சர்கள் வந்திருந்தமையால் வாகனங்கள் யாவும் அவர்களுக்கு உதவ சென்று விட்டன. இந்த சிற்றுந்து தான் மிச்சம். நல்ல வேலையாக இதுவாவது மிஞ்சியது. துணைவேந்தர் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெறும் விருந்தில் கலந்து கொள்ள தயாராக இருந்தார். கைகடிகாரத்தை பார்த்து ஏழு மணி தான் ஆகிறது. ஏழு முப்பதுக்கு அங்கு இருக்க வேண்டும். எவ்வளவு அவசரமாக இந்த நேரத்தில் வந்த காரியம் என்ன என வினவினார் துணை வேந்தர்.

ஆசான் சொன்னார் ஐயா மாலையில் முதல்வரிடம் இருந்து ஒரு குறிப்பு வந்தது. அதில் செப்டம்பர் நடுவில் கி ஆ பெ விசுவநாதன் தலைமையில் திருப்பதிக்கு வரும் புலவர் குழுவை வரவேற்கவும் அவர்கள் நடத்தி இருக்கும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யவும் எனக்கு பொறுப்புத் தருமாறு முதல்வரிடம் தொலைபேசியில் கூறினீர்களா? நான் விடுமுறையில் குடும்பத்தை கவனிக்க சொந்த ஊருக்கு செல்கிறேன். ஆகவே விடுமுறை தொடங்குவதற்கு முன்னரே அல்லது முடிந்த பின்னரும் வந்தால் பொறுப்பு ஏற்க வசதியாக இருக்கும் என ஆசான் துணைவேந்தருக்கு நினைவூட்டினார். ஆசான் துணைவேந்தரைப் பார்த்து நாளை காலையில் தாங்கள் ஹைதராபாத் புறப்படுவதாகவும் அதனால் இனறே தங்களிடம் கூற வேண்டும் என்று சொன்னதால் உடனே வந்தேன் மன்னிக்க வேண்டும் என்றேன். உடனே அவர் கேட்டார் இந்த கூட்டத்தில் படிப்பு சம்பந்தமாக ஏதேனும் பேசுவார்களா அல்லது சமூக விஷயமாக ஏதும் நடக்குமா என்றார். ஆசான் சொன்னார் அப்படி ஒன்றும் இருப்பதாக தெரியவில்லை. சமூக விஷயமாக தான் ஏதேனும் இருக்கும் போல் தோன்றுகின்றது என்றார் ஆசான்.

பண்டைய காலத்தில் மதுரையில் இருந்த தமிழ் சங்கத்தில் 49 புலவர்கள் இருந்ததாக சொல்வார்கள். அதை நாடெங்கும் காட்டுவதற்காக 49 புலவர்கள் கொண்ட குழு பல இடங்களுக்கு நடத்திச் செல்லப்படுகின்றது. சில சமயம் நாட்டு நடப்புகளையும் பேசினாலும் பேசலாம்.

இதைக் கேட்டதும் அவர் தேர் தட்டில் இருந்து கொண்டு கண்ணன் பார்த்தனுக்கு கீதையை உபதேசித்த போல் பேசினார். ஆசான் அவர் அமர்ந்திருந்த இடத்திலும் அவர் ஆசான் உட்கார்ந்த இடத்திலிருந்து மாறி உட்கார்ந்து கொண்டால் உவமை முற்றுமையாக அமையும். மிஸ்டர் ரெட்டியார், இதற்காகவா அலட்டிக் கொண்டு இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வந்தீர்கள். ஒரு கால் தாளில் காரணத்தை எழுதி இயலாமையை காட்டிவிட்டு ஊருக்கு செல்லுங்கள். முதல்வரிடம் ஏதாவது மாற்று ஏற்பாடு யோசனை சொல்லுங்கள். இன்றிலிருந்து ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பொது விஷயத்திற்கு அதிகமாக அலட்டிக் கொள்ளாதீர்கள். பொது விஷயத்தில் அக்கறை காட்டு வேண்டும் என்பது உண்மை. ஒவ்வொருவரும் பொறுப்பை கழித்து விட்டு விலகிக் கொண்டால் பொது காரியம் நடக்காமல் போகலாம். ஆனால் பொதுகாரியம் ஒருவரால் மட்டும் நடைபெற முடியாது.

பலர் அதில் பங்கு கொள்ள வேண்டும். ஆனால் ஒரு நெருக்கடியான கட்டத்தில் ஒருவர் அவசியம் நிமித்தம் இல்லாத நிலை ஏற்பட்டாலும் அக்காரியம் நடைபெற வேண்டும். நான் தான் இதில் முக்கியம், நான் இல்லாவிடில் இது நடைபெற முடியாது என்ற தன்மை கூடாது. பங்குபெறும் ஒவ்வொருவரும் இதனை நன்கு உணர வேண்டும். புலவர் குழுவில் கி ஆ பெ விஸ்வநாதன் முக்கியமானவர். அவர் இல்லாமல் இது நடைபெற முடியாது. உயிருள்ள 49 பேர்களில் ஓர் இருவர் உடல்நிலை பற்றி வேறு முக்கியமான காரணத்தால் கலந்து கொள்ள இயலாத நிலை ஏற்பட்டால் கூட்டத்தை நிறுத்த முடியுமா? முடியாதல்லவா? கூட்டம் நடைபெற்றே தீரும். நான் தான் இருக்கின்றேன் துணைவேந்தராக. இந்த நிர்வாக இயந்திரத்தில் நான் வேக உருலை ஆக உள்ளேன்.

இயக்கம் பொறியாக உள்ளேன். நான் இல்லாவிட்டால் பல்கலை இயங்காது என்று நினைப்பது பூனை தான் கண்ட கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருட்டாக இருக்கும் என்று நினைத்துக் கொள்வது போல் என்று ஆகிவிடும். நான் ஒரு மாதம் வெளியில் செல்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். மூன்று உள்ளூர் ஆட்சி குழு உறுப்பினர்கள் முக்கியமான விஷயத்தை முடிவு செய்ய நிர்வாகம் இயங்கும். கொள்கை அளவில் இல்லாத சாதாரண விஷயங்களை பதிவாளர் கவனித்து கொள்வார்.

நிர்வாக இயந்திரத்தில் துணைவேந்தரைப் போல் ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள். கடைநிலை ஊழியர் ஒருவர் இல்லாவிட்டாலும் நிர்வாகம் இயக்கத்தில் சிறிது தாமதப்பட தான் செய்யும். பொது விஷயத்தில் யாரும் அதிகமாக அலட்டிக் கொள்ளக் கூடாது. அப்படி அலட்டிக் கொண்டால் அவர்கள் மனநிலை கெடும்.

உடல் நிலையும் பாதிக்கப்படும் எனக்கூறி நீங்கள் அமைதியாக விடுமுறையில் ஊருக்கு போகலாம் என்று ஆசானுக்கு விடை கொடுத்தார் துணைவேந்தர். அடுத்த நாள் முதல்வரைப் பார்த்து தெலுங்கு துறைக்கு இப்பொறுப்பு விடலாம் என ஆசான் கூறினார். தெலுங்குத் துறை தமிழ் புலவர் குழுவை வரவேற்றால் அது இன்னும் சிறப்பாக அமையும். முதல்வரும் இந்த மாற்று ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண்டார். ஆசானும் தெலுங்கு துறையினரை பார்த்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டார். “ஜமாய்த்து விடுகின்றோம்” என உற்சாகமாகப் பேசினார்கள். விடுமுறை கழித்து திரும்பியவுடன் அவர்களுக்கு நன்றி கூறத் தெலுங்கு துறைக்குச் சென்றார் ஆசான். நன்றாக நடைபெற்று விட்டது என்று மகிழ்வுடன் தெரிவித்தார்கள்.

டாக்டர் டி ஜகந்நாத ரெட்டி துணைவேந்தராக பதவியேற்ற ஓர் இரண்டு வாரங்களில் தமிழ் வளர்ச்சிக்கு ஆசான் தமிழக அரசிடம் மானியம் பெறுவதற்கு என்று மேற்கொண்ட “பகீரதப் பிரயத்னம்” வெற்றியடைந்தது. ஆண்டிற்கு 10,000 வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு மானியம் வழங்குவது என்ற ஆணையை தமிழக அரசு பிறப்பித்தது. டாக்டர் டி ஜகந்நாத ரெட்டிக்கு இது பெருமகிழ்ச்சியை தந்திருக்க வேண்டும் என்பதை பின்னர் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளால் ஊகிக்க முடிந்தது. டாக்டர் டி ஜகந்நாத ரெட்டி காலத்தில் கட்டடங்கள் என்றுமில்லாத அசுர வேகத்தில் வளர்ந்தன. ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியிலும் இவரது கவனம் சென்றது. ஒரு பெரிய பொறியியல் வல்லுனர் போல் செயல்பட்டார்.

தமிழ் மொழியில் தக்க முறையில் அமைந்த உடலைப் பற்றிய நூல்கள் இல்லை. அந்தக் குறையை போக்கும் பணியில் ஈடுபட்டு ஓர் அழகிய நூலை எழுதத் துணிந்தார் ஆசான். **நமது உடல்** என்ற தலைப்பில் 64 விளக்க படங்களுடன் நூல் ஒன்று உருவாக்கம் செய்யப்பட்டது. இதில் உறுப்புகளின் துணையால் உடல் இயக்கம் தெளிவாக்கப் பெற்றுள்ளது. இத்தகைய பணியை ஒரு தெய்வப் பணியாகவே கருதுகின்றார். அந்நூல் தமிழக அரசின் இரண்டாவது பரிசு பெற்றது.

தமிழ்த்துறையின் வளர்ச்சியில் பேராசிரியரின் பங்கு மிகவும் பெரிது. ஆண்டுதோறும் பல தமிழ் அறிஞர்களை அழைத்து கருத்தரங்கள் நடத்தப்பெற்றன. கருத்தரங்கிற்கு தலைமை வகிப்பது பல்கலைக்கழகத் துணைவேந்தர் எனவும் தொடக்க விழா ஆங்கிலத்தில் நடைபெறுவது எனவும் முறைமையாக வைக்கப்பெற்றது. இந்த முறை அனைத்து கருத்தரங்களிலும் நடைமுறைப் படுத்தப்பெற்றது. 1974ல் (பிப்ரவரி) **திருக்குறள் கருத்தரங்கு** துணைவேந்தர் தலைமையில், நெ து சுந்தரவடிவேலு தொடக்கவுரை ஆற்றி, தவத்திரு

குன்றக்குடி அடிகளார் ஆசியுடன் நடைபெற்றது. 1975ல் (ஏப்ரல்) **சிலப்பதிகார கருத்தரங்கு** துணைவேந்தர் தலைமையில், VC குழந்தைசாமி தொடங்கிவைத்து, நாவலர் நெடுஞ்செழியன் மற்றும் ச வே சுப்பிரமணியம் அவர்கள் சிறப்புரையாற்ற இனிதே நடைபெற்றது. 1976ல் (ஜனவரி) **மு.வ-வின் இலக்கிய படைப்புகள்** எனும் கருத்தரங்கம் துணைவேந்தர் தலைமையில், தமிழக அமைச்சர் திரு அன்பழகன் அவர்கள் சிறப்புரையாற்ற, மு.வ-வின் பல மாணாக்கர்கள் கலந்து கொண்டு இனிதே நடைபெற்றது. 1977ல் (ஏப்ரல்) **கம்பராமாயணக் கருத்தரங்கு** துணைவேந்தர் தலைமையில் B கோபால் ரெட்டி அவர்கள் சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கம்பன் அடிப்பொடி சா சணேசன் அவர்களை கம்பராமன் அவர்கள் கவிதையில் வரவேற்றார். S மகராசன் அவர்கள் சிறப்பானதொரு பேருரை ஆற்றினார்.

தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய இடங்களில் இருந்து கருத்தரங்கிற்கு வரும் பெரியோர்கட்கெல்லாம் "திருப்பதி கலாச்சாரக் கழகம்" வரவேற்பு நல்கி சிறப்பித்தது. வரவேற்பு அளிக்கப் பெற்ற காலத்தில் அன்றைய பெருஞ்சோற்று உதியன்சேரலாதன் பாரதப் பெரும் போர் நடைபெற்ற போது இரு சாராருக்கும் உணவு அளித்தது போல் சேர நாட்டைச் சார்ந்த திருவேங்கடாசலம் ஐயர் விருந்து அளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் என்று ஆசான் கூறுவதுண்டு.

1973ல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள ரா பி சேதுப்பிள்ளை வெள்ளிவிழா அறக்கட்டளைச் சொற்ப் பொழிவுகளை நடத்துமாறு ஆசானுக்கு அழைப்பு வந்தது. அவ்வழைப்பினையேற்று திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும் எனும் தலைப்பில் சொற்பொழிவுகள் ஆற்றினார். சங்ககால வேங்கடம், இடைக்கால இலக்கியத்தில் வேங்கடம் மற்றும் திருவேங்கடத்தின்மீது எழுந்துள்ள நூல்கள் ஆகிய மூன்று தலைப்புகளில் சொற்பொழிவுகள் நடைபெற்றன. இப்பொழிவுகளை சென்னைப் பல்கலைக் கழகம் நூலாக வெளியிடாததனால், ஆசான் பல்கலைக் கழகத்தின் அநுமதி பெற்று சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைச்செல்வர் நெ து சுந்தரவடிவேலு அவர்களின் அணிந்துரையுடன் 1975ல் வெளியிட்டார்.

துணைவேந்தர் திருமாளிகை திருப்பதியில் முதன்மையான் பாதையில் எல்லா வசதிகளும் நிறைந்த அகன்ற பரப்புள்ள இடத்து மத்தியில் மாந்தோப்புகளுக்கு இடையே அமைந்திருந்தது. அதற்குள் அங்கும் இங்குமாய் பல கற்சிலைகள் கவனிப்பாரற்றுக்

கிடந்தன. அவற்றுள் சில குறையுறுப்புகளுடனும் காட்சியளித்தன. இவற்றை ஒன்று திரட்டி ஓரிடத்தில் கலைக்கூடமாக்கக் வைக்க எண்ணினார் துணைவேந்தர்.

திருப்பதி சித்தூர் நெடுஞ்சாலையிலிருந்து பல்கலைக்கழக வளாகத்தில் நூலகத்திற்கு செல்லும் குறுஞ்சாலைகளின் இரு புறங்களிலும் நேருக்கு நேராக அமையுமாறு நடச்செய்து அவற்றை சுற்றி அழகான சிமெண்ட் மேடையையும் அமைக்கச் செய்தார். அறிவுக்கலைக்கூடமாகிய நூலகத்திற்கு செல்வோர் கலை உணர்ச்சியுடன் செல்வதற்கு இச்சிலைகள் வாய்ப்பாக அமைந்தன. பார்ப்பதற்கு இச்சாலை ஓர் அரும் பொருட் காட்சியகக் கலையாகக் காண்போரை மகிழ்ச்சி பொங்கச் செய்தது. இன்று அவை அகற்றப்பட்டு விட்டன. அவை ஊருக்குள் உள்ள தேவஸ்தானத்தின் அருங்காட்சியகத்தை புகலிடமாகக் கொண்டு விட்டன. முதல் துணைவேந்தர் பேராசிரியர் நாயுடு காலத்தில் திட்டமிட பெற்று கிடைப்பட வடிவில் கிடந்த திட்டங்கள் பல்வேறு காரணங்களால் செயல்படாமல் கிடந்தவற்றையெல்லாம் செயல்படச் செய்து நிறைவு செய்தார்.

இப்படி நிறைவு செய்த கட்டிடங்கள் மூன்று. அவை பல்கலைக்கழக நிர்வாக அலுவலகம், பதிவாளர் துணைவேந்தர் அறைகள், தேர்வாளர் அலுவலகம், பொறியாளர் அலுவலகம், பேரவை மண்டபம் முதலியவை அடங்கிய பெரிய கட்டடம் அது. பேரவையின் இருக்கை வசதிகள் மிக அழகாக அமைந்திருந்தன. ஒவ்வொரு உறுப்பினரும் பேசுவதற்கு மாநில சட்டப்பேரவையிலும் நாடாளுமன்றப் பேரவையிலும் இருப்பதுபோன்று போல் ஒலிவாங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. நுழைவாயிலை ஏழுமலையான் திருவுருவப் படம் அணிசெய்கின்றது.

இருக்கை வசதிகள் படிமேடை முறையில் அமைக்கப் பெற்றுள்ளன. ஒரு பக்கம் வேமனர் திரு உருவமும் அதற்கு எதிர்ப்பக்கம் திருவள்ளுவர் படமும் அணி செய்கின்றன. ஒவ்வொரு விவரங்களிலும் துணைவேந்தரின் கற்பனை உள்ளத்தையும் கலை உணர்ச்சியையும் கண்டு மகிழலாம். கலையரங்கம் உருப்பெறும்போது ஒவ்வொரு சிறு விவரங்களிலும் தம் நேர்கவனத்தை செலுத்தினார். நீள் வட்ட அமைப்பில் உள்ள இம்மண்டபத்தின் உட்புற அமைப்பு கண்டாரை வியக்க வைக்கும் பான்மையது. இருக்கை வசதிகள், நாடக நாட்டியங்களுக்கான மேடை அமைப்பு, திரைச்சீலை அமைப்புகள் இவை மிக நன்றாக அமைக்கப்பெற்றன.

மகளிர் தொகை பல்கலைக்கழகத்தில் பெருகி வருவதைக் கண்டார் துணைவேந்தர். தேவஸ்தானத்தைச் சேர்ந்த மகளிர் விடுதிக்குரிய கட்டடம் போதாதிருந்தது. இதனை ஒட்டி மிகவும் அழகான முறையில் மற்றொரு இரண்டு மாடி கட்டிடத்தை எழுப்பச் செய்து

அவர்களுக்கு தேவையான வசதிகளைப் பெருக்கினார். மகளிர் விடுதிகளில் மகளிர்க்கெனத் தனிப்பட்ட முறையில் தேவைப்படும் சுகாதார வசதிகளுக்கு வழியமைத்தார்.

பல்கலைக்கழகம் நாளடைவில் வளர்ச்சியடையும் தருவாயில் வெளியில் இருந்து வரும் விருந்தினர்களின் எண்ணிக்கையும் பெருக தொடங்கியது. வருகின்றவர்கள் தங்குவதற்கும் உணவு கொள்வதற்கும் வசதிகள் இல்லாமல் தவித்தனர். தேவஸ்தான சத்திரங்கள் விருந்தினர் இல்லங்கள் கை கொடுத்து உதவினாலும் வாகன வசதி இல்லாமையால் தொல்லை பட்டனர். பல்கலைக்கழக வளாகத்திலேயே தங்குவதற்கும் உணவுக்கும் ஏற்பாடுகள் செய்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்தார் துணைவேந்தர் ஜகந்நாத ரெட்டி. பல்கலைக்கழக வளாகத்தில் ஆசிரியர் குடியிருப்பையொட்டி ஒரு விருந்தினர் மாளிகையை எழுப்பினார்.

மேலும் ஆய்வுக்கூடங்களும் இவர் காலத்தில் தான் உருவாகின. டாக்டர் டி ஜகந்நாத ரெட்டியின் காலத்தில் இப்பல்கலைக்கழகம் பன்முக விரிவு வசதிகளைப் பெற்றது. எந்த விழாவாக இருந்தாலும் துணைவேந்தர் டாக்டர் ஜகந்நாத ரெட்டி மிகச் சிறிய விவரங்களிலும் கருத்தை செலுத்தி விழாவை மிகவும் பொலி உடையதாக செய்வார்.

திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை ஆசானின் மணிவிழாவினைக் கொண்டாட விரும்பியது. திரு SA அனந்தசயனம் அய்யங்கார் தலைமையில் மணிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. ஆசானின் ஆசிரியப்பெருமக்கள், அவரது மாணாக்கர்கள், தமிழகக் கல்லூரியில் உள்ள ஆசிரியர்கள், பள்ளியில் பணியாற்றிய தோழ ஆசிரியர்கள், தலைமை மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள், அரசியல் தலைவர்கள், பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள், பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், தமிழக மடாதிபதிகள் ஆகியோரிடமிருந்து பெறப்பெற்ற ஆசிகள் மற்றும் வாழ்த்துரைகள் அடங்கிய ஒரு மணிவிழா மலர் ஒன்று வெளியிடப்பெற்றது. மற்றுமொரு நூல் தமிழ்ச் சான்றோர்கள் மற்றும் பேராசிரியர்கள் எழுதிய 61 கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டு **Studies in Arts and Science** என்ற பெயரில் வெளியிடப்பெற்றது. 1977ல் (25.10.1977) பணியிலிருந்து பேராசிரியர் ஓய்வு பெற்றார். அவரது 17 ஆண்டு பல்கலைக்கழகக் கல்விப் பணி முடிவுற்றது

ஆசானின் பேராசிரியப் பணி பதினேழு ஆண்டுகள் சிறப்புடன் நிறைவு பெற்றது. ஆசான் சேவை புரிந்த காலத்தில் எத்தனையோ மாணவருக்கு தன்னால் இயன்ற உதவிகளை புரிந்து திருவேங்கடமுடையானின் முழு ஆசி பெற்று அவனது மலையடிவாரத்தில் வாழ்ந்து

சேவையாற்றியது அறியற்பாலதாகும். ஆசானின் மக்களின் கல்வி நன்கு முடிந்தது. இரு குமாரர்களின் திருமணமும் சிறப்பாக முடிந்தது. எல்லோரும் உடல் நலத்துடன் மனவளத்துடனும் இருக்கின்றார்கள். ஏழுமலையான் திருவருள்தான் இதற்கு முக்கிய காரணம் என்பதை ஆசான் நன்கு உணர்ந்தார். போகியன்று காலை உணவை முடித்துக் கொண்டு ஆசான் மற்றும் அவரது துணைவியார், குமாரர்கள், கைக்குழந்தை, வேலூர் சம்மந்தி இவர்களுடன் காரிலேயே திருமலைக்குச் சென்று ஏழுமலையானின் தரிசனம் பெற்று அவனிடம் பிரியாவிடை பெற்றனர். வேலூர் சம்மந்தியின் உதவியால் தரிசனம் எளிதாக கிடைத்தது. மாலை ஆறு மணிக்கு வீடு திரும்பி வந்தனர். திருப்பதியில் இருந்த வீட்டை காலி செய்துவிட்டு, பொங்கல் அன்று காலை எட்டு மணிக்கு லாரி வந்து சாமான்களை ஏற்றிக்கொண்டு ஆசான் சென்னையில் குடியேறினார்.

(😊)(😊)(😊)(😊)(😊)



நிறைவுரை

சென்னையில் குடியேறிய பின்பும் ஆசானது தமிழ் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் தொடர்ந்தன. பல்வேறு பொருண்மைகளில் 100 நூல்களை வெளியிட்டார். 10 அறக்கட்டளைகளைப் பல்வேறு கல்லூரி/பல்கலைக்கழகங்களில் நிறுவினார். 12 அறக்கட்டளை சொற்பொழிவுகளைப் பல்வேறு பல்கலைக்கழகங்களில் நிகழ்த்தினார். பல்வேறு பல்கலைக்கழகங்களின் குழுக்களில் பங்காற்றிய ஆசான், சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியராகப் பணியாற்றினார். முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு நெறியாளராகவும் பணியாற்றினார். அவரின் வழிகாட்டுதலில் ஒரு மாணவி 2002ம் ஆண்டில் முனைவர் பட்ட ஆய்வேட்டினைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்து முனைவர் பட்டம் பெற்றார்.

பல்வேறு பல்கலைக்கழகங்களின் பல்வேறு குழுக்களில் பங்காற்றிய ஆசான், சாகித்திய அகாதெமியின் தென்மண்டல உறுப்பினராகப் பணியாற்றியது ஈண்டு குறிப்பிடத்தக்கது. தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றினார். 13 நூல்களுக்கு தமிழ்நாடு அரசு சிறந்த நூல்களுக்கான பரிசினை வழங்கியது.

<u>ஆசான் பெற்ற சில விருதுகளும், பட்டங்களும்:</u>

<u>விருதுகள்:</u>

திரு.வி.க. விருது (1985), இராஜா சர் முத்தையா செட்டியார் விருது(1994), இராதாகிருஷ்ணன் விருது (1994), இராமாநுஜர் விருது (1996), சி பா ஆதித்தனார் மூத்த தமிழறிஞர் விருது (2001).

<u>பட்டங்கள்:</u>

தமிழ்ப் பேரவைச் செம்மல்(1993), கலைமாமணி(1999), திருக்குறள் உரைச் செம்மல் (1992), ஸ்ரீ சடகோபன் பொன்னடி (1993), முதுமுனைவர் னுடுவைவ (1993), அருங்கலைக்கோன் (1969)

பல்வேறு பல்கலைக் கழக மாணாக்கர்கள் ஆசானது நூல்களை (மொத்தம் : 136) பின்புலமாக வைத்து ஆய்வு மேற்கொண்டு MA/MPhil/MEd/PhD பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

ஆசான் தனது 70ஆம் பிறந்த நாளையும், 80ஆம் பிறந்த நாளையும், 90ஆம் பிறந்த நாளோடு 69வது திருமண நாளையும் சேர்த்து சென்னை கந்தகோட்டத்தில் கொண்டாடினார்.

அன்பிற்குறிய ஆசான் மண்ணுலகை விட்டு விண்ணுலகு சென்றது உலகம் போற்றும்

மே ஒன்று. (2006)

<u>குறிப்பு</u>: தமிழ்நாடு அரசு 2008ல் ஆசானது நூல்களை நாட்டுடைமையாக்கியது.

	Professor's name finds a place in Sahitya Akademi's **'Encyclopedia of Indian Literature'** [Edition 1992, Vol. V, Page 4188]. It is reproduced *verbatim* below:	

SUBBU REDDIYAR, N [Tamil; b. 1916] was born at Kottathur in Tiruchirappalli district. Former Professor of Tamil at Sri Venkateswara University, he is well-known for his writings on science, education, Vaishnavism and Tamil research.*Irakkettukal* [Rockets] won him the Tamil Nadu Government's first prize, *NamatuUdal* [Human physiology] the second prize and *Anukkaru Bautikam* [Nuclear Physics] the Madras University's prize. *Tamil Payirrum Murai* [On teaching Tamil, 3rd ed. 1980], *Ariviyal Payirrum Murai* [On teaching science] and *Kalvi ulaviyal* [Educational psychology] are among his works on education. Religion and philosophy of *Nalayira divyaprabhandham*, with special reference to Nammalvar, 1977, *Cholanattut tiruppatikal* [Temples in Chola Nadu, 1981],*Malainattut tiruppatikal* [Temples in Kerala, 1977], *Tondainattut tiruppatikal* [Temples in Thondai Nadu], *Pandinattut tiruppatikal* [Temples in Pandi Nadu] are some of his works on Vaishnavism. His research works include *Muttollayiravilakkam* [Commentary on a fragmentary anthology of poems on the ancient Tamil kings, 1965], *Paranippolivukal* [Transcript of speeches on *Kalingattup parani* by Jayankondar, 12th c. Tamil poet, 1972], *Tiruvenkatamum Tamil ilakkiyamum* [lectures delivered at Madras University], *Kamban pataitta chirupattirankal* [Characterization in Kamba Ramayanam, 1979] and *Kampanil Makkal kural* [Democratic concepts in the Tamil epic, *Kamba Ramayanam*]. Presently, he is engaged in translating *Tiruvaymoli arayirappati*, a commentary on Vaishnavite devotional literature in Tamil.

Unostentatious and unassuming, Subbu Reddiyar carries on his shoulders his scholarship lightly. Author of about fifty books, his magnum opus is his *Kavitaianubhavam* [Enjoyment of poetry]. His books cover a wide variety and range. Be it on the oldest extant Tamil grammar, *Tolkappiyam* of pre-Christian era, or a book of verse, or a dissertation on the sacred utterances of Nammalvar, or method of teaching Tamil, Reddiyar is at his best. Steeped in the wisdom of the past and alive to the tremendous pace of scientific advancement, he strives for a meeting point between the two. Basically, a man of letters, a Shaivite by appearance and Vaishnavite by erudition, his service in the cause of Tamil is worthy of emulation.

- -



First Paper: என்ன ஆச்சரியம்? "Enna Aacharyam !" [1949]

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்

Books Published : 135 + 1 = 136
Papers Published : 200 [Tamil 173 + English 27]
Endowments established: 10
Endowment Lectures : 12
Awards received: 8
Prizes won : 14
Titles conferred : 8



Masterpieces:

1) Tamil Payitrum Murai [1957]
2) Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]
3) Kalvi Ulaviyal Kotpaadukal [1989]
4) Vainava Selvam [1995]

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21

b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books
a) University of Madras - 1993 & 2002 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)
c) Bharathiyar University - 2021 (leading to PhD)

ISBN 978-81-968802-7-9
9 788196 880279

பேராசிரியரின் நூல்கள் (ம) தொடர்புடைய நூல்களை முழுமையாக அறிய:
https://archive.org/details/@centenary1916nsr2016
எனும் இணையதளத்தை அணுகவும் : [freely downloadable]

www.nasubbureddiar100.in